www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஜூலை.06–12,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 212



## பிரதான பங்கு வகிக்கும் பெண்கள் படைப் பிரிவு!






படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தவறவிடப்படும் தருணங்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு
காலவரையறையின்றி
ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்
படு தோல்வியை
அரசே மறைமுகமாக
ஏற்றுக்கொண்டுவிட்டது.

மறுபடி கூடுவதும், கூடாததும்
அரசின் விருப்பம்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்
ஒரு போதும்
இணக்கம் எட்டப்படாது
என்பதை
எப்போதோ கூறிவிட்டோம்!

இன்று
நடந்தது என்ன?

காலத்தை
இழுத்தடித்த கதைதான்!

நஷ்டம் யாருக்கு
இலாபம் யாருக்கு?

நிச்சயமாக நஷ்டம்
தமிழ்பேசும் மக்கள் தரப்புக்கே!

தவறு யாருடையது?
பிறர்மீது
குற்றம் சொல்லி பயனில்லை.

அரசியல் அரங்கில்
இலக்கின்றி செயற்படும்
தமிழ்க்கட்சிகளே
பிரதான காரணம்!

சமீபத்தில்தான்
"பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்
பல படிகள் முன்னேற்றம்;
விரைவில் மீதி விடயங்களில்
இணக்கம் காணப்படும்"
என்று கூறியிருந்தார் நீதியமைச்சர்.

இப்போது
இணக்கம் காணமுடியவில்லை
எனக்கூறி
கதவை இழுத்து மூடிவிட்டார்கள்!

அப்படியானால்
நேற்றுக் கூறப்பட்டதெல்லாம்
நிஜமில்லை என்றுதானே அர்த்தம்?

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்
இதுவரை நடந்த விவாதங்களில்
இனப்பிரச்சனை தீர்வுக்கான .
அடிப்படை விடயங்களை
தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

அது மட்டுமல்ல,
கூட்டணி மற்றும்
ஐந்து தமிழ்க் கட்சிகள்
முன்வைத்த திருத்தங்களின்
முன்னுரையைக்கூட
தெரிவுக்குழு திருப்பிப் பார்க்கவில்லை!

அரசு தானாக
ஒரு சட்ட வரைவை
முன்வைக்கக்கூடும்தான்.
ஆனால் அச் சட்டவரைவு
திட்டவட்டமான தீர்வாக
அமையாது என்பதையே
நடைமுறைகள் நமக்குணர்த்துகின்றன!

ஆரோக்கியமான தீர்வுக்குரிய
அணுகுமுறைகள்
இல்லாதபோது
காணப்படும் தீர்வு
எப்படி உருப்படியாக இருக்கும்?

தாங்கள் விரும்பும்போது
தெரிவுக்குழுவைக் கூட்டுகிறார்கள்
தாங்கள் விரும்பாதபோது
கதவை இழுத்து மூடுகிறார்கள்.

பாருங்கள் இந்த
தமிழ்க் கட்சிகளை!
பாராளுமன்றத் தெரிவுக் குழுவின்
தோல்வியைக்கூட
சுட்டிக்காட்டத் தயங்குகின்றன!

இனப்பிரச்சனை தீர்வு
எப்படியெல்லாம்
இழுத்தடிப்பு வரலாறாக
தொடர்கிறது என்பதை
வெளியுலகுக்குச் சொன்னால்
சர்வதேச மத்தியஸ்த கோரிக்கை
நியாயம் என்றாகுமே!

சர்வதேச மத்தியஸ்தம் என்று
வெறும் வாயை மெல்லுவதால்
பத்திரிகைகளில் செய்திவரும்!
ஆனால் வெளியுலகம் ஏற்குமா?

அல்லது கூட்டணிபோல
'தீர்வுத்திட்டம் நல்ல திட்டம்'
என்று பஜனை பாடியபடி
சர்வதேச மத்தியஸ்தம் கேட்டால்
உலகம்தான் நம்புமா?

ஆதாரத்துடன்
ஆணித்தரமாக முன்வைத்தால்தான்
அதனை உலகம் ஆராயும்!

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்
படுதோல்வியை சுட்டிக்காட்டவே
தயங்கும் தமிழ்க் கட்சிகளால்
ஆதாரம் காட்டிப்பேச
முடியுமா என்ன?!

ஆக, தக்க சந்தர்ப்பங்கள்-
தகுந்த அரசியல் அணி
இல்லாத வெற்றிடத்தால்
விரயமாகிக்கொண்டிருக்கின்றன!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,

ஆசிரியர்

# ஆன்மீகம்

## அன்பு

இயேசுவின் போதனைப்படி, அன்பு என்பது ஒரு பொருளின் மீது அல்லது ஒருவர் மீது ஏற்படும் விருப்பு அல்ல; அது ஓர் உணர்வு அல்ல. அன்பு என்பது ஒரு செயல். அன்றாட நடத்தையோடு கூடிய ஓர் உன்னத வாழ்க்கைத் தத்துவம். அன்பு என்பது 'சுயநலம் கொண்ட ஓர் உணர்வல்ல'; பகிரப்படும்போது இரட்டிப்பாவதும் பிரதிபலன் கருதாது செலுத்தப்படுவதுமே இயேசு காட்டிய 'தியாக அன்பு'.

அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது, பொறாமையற்றது, பெருமையற்றது, இறுமாப்பு அற்றது, இழிவான பேச்சுக்களைப் பேசாது, இழிசெயல்களைச் செய்யாது, தன்னைத் தானே புகழாது, தன்னலத்தைத் தேடாமல் பிறர் நலனுக்காய் பாடுபடும், சீற்றமடையாது, வன்மம் பாராட்டாது, அநீதியைக் கண்டு மகிழ்வுறாது-நீதிக்காய் பாடுபடும், உண்மையைக் கண்டு மகிழும், எல்லா வேதனைகளையும் தாங்கிக்கொள்ளும், பிறர் மீது நலலெண்ணம் இழக்காது, நம்பிக்கை தளராது, அனைத்தையும் சகித்துக் கொள்ளும், அன்பிற்கு முடிவென்பதேயிராது, பிறருக்குப் பொல்லாங்கு நினைக்கவோ பொல்லாங்கு செய்யவோ முயலாது, அன்பில்லாதவன் உலகின் சகல சம்பூரணங்களும் நிறையப் பெற்றவனாயிருந்தும் இறைவனின் பார்வையிலே அவன் சம்பூரணங்கள் பூச்சியமாகவே கருதப்படுகின்றன. தன்னை நேசிப்பது போல் பிறனை நேசிக்க ஆரம்பிக்கும்போது அன்பு பூரணத்துவம் பெறுகின்றது. இயேசுவின் தியாக அன்பினை உலகிற்கு செயல் வடிவமாக்க அன்பு செலுத்தவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆத்மராஜா நூந்சந்திரிக்கா, கல்லாறு.




## 'ஸதக்கா' கொடுப்பதன் சிறப்பும், ஹதீஸ்களும்

இஸ்லாம் மதம் பணக்காரர்களுக்கு ஸக்காத்து என்ற ஏழை வரியைக் கடமையாக ஏற்படுத்தி இருப்பதுடன், கடமையல்லாத வேறுபல தான தருமங்களையும் ஏற்படுத்தியுள்ளது. ஸதக்காவின் மகிமை பற்றிய ஹதீஸ்கள் சில.

1. ஸதக்காவானது கெட்ட மரணத்தை விலக்கும்.
2. இரகசியமாக ஸதக்காகொடுப்பது அல்லாஹ் த ஆலாவின் கோபத்தை அணைத்துவிடும். பகிரங்கமாக ஸதக்கா கொடுப்பது (நரக) நெருப்பை விட்டுக் (காக்கும்) கேடயமாக இருக்கின்றது.
3. ஸதக்கா தீமையிலுள்ள 70 வாசல்களை அடைத்துவிடும்.
4. கொஞ்சத்தைக் கொடுப்பதற்கு வெட்கப்படாதீர்கள். (ஒன்றும்) கொடுக்காமலிருப்பது அதனைப் பார்க்கினும் கொஞ்சமாக இருக்கின்றது.
5. ஸதக்கா ஆபத்துக்களை விலக்கி, வயதை அதிகப்படுத்தும்.
6. தருமங்களில் சிறந்தது ஏழைகளின் பசியைப் போக்குவது.
7. உங்களுக்குத் தேவையானது போக மீதிப் பொருட்களை தானம் செய்யுங்கள்.

செல்வி பௌக்கியா மன்சூர், கல்முனை.

# கவிதைப் போட்டி இல.209



இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

## பரிசுக்குரிய கவிதை

### வாழ்வும் மலர்வதுண்டோ?

அல்லி மலர்ந்தென்ன?
ஆவரசு பூத் தென்ன?
ஓட்டுக் கேட்கவந்த எம்-தலைகள்
ஓடேந்தி நிற்கும் வரை....
எம்மவர்க்கும் நியாயமுண்டோ?
இனி வாழ்வில் மலர்வுமுண்டோ?

எம்.பி.சர்மா- ஹஸ்கிசன் வீதி
திருக்கோணமலை

### சாந்திப் பூ மலராயோ?

போர் பூத்த இம்மண்ணில்
கருகும் மலர் பற்றி
கோமான்களே பாருங்கள்!
சிந்துவது எம்இரத்தம்
சிதறுவது எமது உடல்
மடிகிறது மனித இனம்
சமாதான விருட்சத்தில்
சாந்திப் பூ மலராயோ?
நிம்மதிக்கனி தருவாயோ?

கே.சமுத்திரன்- களுவன்கேணி, செங்கலடி.

### எச்சரிக்கை!

பூவுக்குள்ளும்
பூகம்பம்
பூத்திடும்
புதுமையுகமிது!
பூவையரே
புரிகிறதா?

பொன் நளினி-
பொத்துவில்-03.

### அமுலாக்கல்!

வெண்தாமரை இயக்கம்
வெற்றி பெறாததால்தான்
இந்த அல்லிமலர் இயக்கம்
அமுலுக்கு வருகிறதோ?

மனோ கோபாலன்-
ஹப்புத்தளையூர்.

### காகிதப் பூ

குண்டுகள் போட்டு-தினம்
குன்றுகள் குழிகளாச்சு,
மண்ணுக்கு(ள்) சண்டையிங்கே,
மலர்கள் மலர்வதெங்கே...?
காட்சிதரும் இந்தப் பூ
காகிதப் பூதானோ?

ஏ.பி.லக்ஷான்- கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13.

### ஏன் பூத்தாய்?

பூமியே இன்று
புலம்பும் போது
பூவே-நீ
ஏன் பூத்தாய்?

அ.லெ.சம்சுதீன்-வெலிசறை.

### என்ன பூ?

யுத்தம் இல்லா இடத்தில்
நீ தித்திப்பூ!
யுத்த பூமியில்
நீ கசப்பூ!
நம் நாட்டிற்குத் தேவை
சமாதானப் பூ!
மறுப்பாயானால், நாளை
என் வீட்டிலும்,
நீ மரணப் பூ!

எம்.வேல்முருகன்- மாரதென்ன,
பலாங்கொடை.

### அச்சமான பின்னணி!

ஒளி சிந்தும் அல்லியினை
நேசமாய் நீட்டினாலும்
பின்னிற்கும் இருள் எம்மை
கிலி தந்து கலக்குதம்மா!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்- வவுனியா.

### ஆதங்கம்

அம்புலியின் வரவு: அல்லியின் மலர்வு!
எங்களினம் உதிர்வு: யுத்தத்தின் வரவு!!
என்று வரும் தீர்வு? அன்றெமக்கு
வாழ்வு!!!

திருமதி க.கமலாம்பிகை-பண்டாரி குளம்,
வவுனியா.

### ஜாக்கிரதை!

வந்தமரும் வண்டினமும்
வரதட்சணை கேட்டால்,
வாடாதே பூ மலரே! நீயும்
வையத்து பூவை! மலர்கள்போல்.

தெ.லோஜனா- கொழும்பு-15.

### உறக்கம்

பூவிலே வண்டுறங்கும்
மயக்கத்தில்;
பூமியில் நாம் உறங்குவோம்
பயக்கலக்கத்தில்.

சிறினிவாசன் சிவா-வட்டவளை.

# கவிதைப் போட்டி இல.212



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 12.07.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.212
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசின் முத்தான தொடர்களில் ராஜேஸ்குமார் எழுதும் 'உடைந்த இரவு' தொடர்கதையும் ஒன்று. வித்தியாசமானதும், ஆரம்பம் முதல் இறுதிவரை சஸ்பென்ஸ்சாக செல்லும் கதைகளைத் தேடிப்பிடித்து வெளியிடுவதில் முரசு என்றும் முன்னணியில்தான்.

ஜே.யூட் கிலேரியன்,
மட்/தாண்டவன்வெளி.



அரசியல் தொடர் இக் காலத்தோடு இணைந்த நல் முயற்சி. வன்னி முற்றுகைக்கு இலங்கை படைகள் முனையும் போது, இந்தியப் படைகளின் வன்னி முற்றுகை கட்டத்தில் அரசியல் தொடர் பிரவேசித்தது சரியான சந்தர்ப்பம். ஆனால் இந்த யுத்தம் வெற்றி அளிக்காது என்பதற்கு தாண்டிக்குளம் சமர் ஓர் எடுத்துக்காட்டாகும்.

சி.வேதநாயகம், சின்ன ஊறணி, மட்டக்களப்பு.

என் உள்ளம் கவர்ந்த முரசிற்கு!

நான் யாழ், வன்னி ஆகிய இடங்களில் இருந்த காலத்தில் உன்னைக் காணவில்லை. பின்னர் வவுனியா வந்த பொழுது உன்னைக் கண்டேன். இனி எங்கு சென்றாலும் உன்னைவிட மாட்டேன். உனது அனைத்து அம்சங்களும் அசத்தல். இப்பொழுது நான் கொழும்பில் இருந்து உனது ஒவ்வொரு அம்சங்களினையும் வாசிப்பதில் உன்னத மகிழ்ச்சி அடைகின்றேன்.

ச.வத்சலா, மோதறை வீதி, கொழும்பு-15.

நாரதர் தந்த வன்னி வோட்டர்லூவா? எக்ஸ்ரே ரிப்போர்ட், ஐயாத்துரை, ஆகியவை பிரமாதம் உனது அதிரடி நீண்டபொறிக்குள் ஜயசிக்குறுய் நிலவரம்- இராஜதந்திரி அலசியது மிகையல்ல உண்மை.

அ.அரசரெத்தினம், சேனையூர்-06.

அன்பின் முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் இன்பத்திலும் இன்பம். பூலான் தேவி எங்களை மிகவும் கவர்ந்து விட்டாள்; சிறுவர் மலரில் இடம் பெறும் 'வாரம் ஒரு நாடு' எங்களுக்கு மிகவும் உதவியாக அமைகிறது.

மண்முனை சிபா, காத்தான்குடி-06.

## யார் இவர்கள்?

நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை கண்டுகொள்ள இதுதான் தக்க சமயம் என்று நினைக்கிறேன். திம்புவில் இயக்கங்களின் சொற்படி கேட்டு நடந்தனர் கூட்டணியினர் என அறிந்தோம். பின்னர் ஏனைய இயக்கத்தினர் பலவீனம் அடைந்ததும் அவர்களை எடுத்தெறிந்து பேசினதும் கூட்டணியினர் தான். விடுதலைப் புலிகள் பற்றி பயம் காரணமாக அவர்களது நண்பர்கள் போல் நடித்தனர். இப்போது புலிகள் பலவீனமாகிவிட்டதாக கருதி அவர்களையும் எடுத்தெறியவும், பழிபோடவும் தொடங்கிவிட்டனர். பலம் இருந்தால்தான் சந்தர்ப்பவாதிகளையும் அடக்கி வைத்திருக்க முடியும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று!

எல்.ரவீந்திரன், முல்லைத்தீவு.

## சூடான செய்திக்காக கற்பை அழிக்கிறார்கள்

காமமிருகங்களால் வதைக்கப்படும் பெண்களை கற்பிழந்தவர்களாக குறிப்பிடும் கேடு கெட்ட பழக்கத்தை 'முரசு' 'சரி நிகர்' போன்ற பத்திரிகைகள் தவிர்த்துவருவது வரவேற்கத்தக்கது. செய்தி 'சூடாக இருக்கவேண்டும்' என்பதற்காக கதற கதற கற்பழித்தார்கள், கற்பழிப்பு என்றெல்லாம் கொட்டை எழுத்தில் போடுவது சில பத்திரிகைகளின் வாடிக்கை. வியாபார நோக்கம் இருக்க வேண்டியதுதான். அதற்காக நம் பெண்களின் கற்பை ஏன் அழிக்கிறார்கள்? தங்கள் வீட்டு பெண்களுக்கு இக் கொடுமைகள் நடந்தாலும் அவர்கள் கற்பிழந்தவர்கள் என இவர்களால் கூறுதல் முடியுமா?

செல்வி நித்யகலா, கொழும்பு-11.

## சுயரூபம் தெரிந்தது

தங்கள் சுயரூபத்தை தெளிவாகக் காட்டிவிட்டார்கள் தமிழர் விடுதலை கூட்டணியினர். ஆனந்த சங்கரி பற்றி அற்புதன் எழுதும் அரசியல் தொடரில் முன்பே முகமூடி கிழிக்கப்பட்டிருந்தது. அப்போது நம்புவது சிரமமாக இருந்தது. இப்போதுதான் இவர்களையெல்லாம் ஒரு காலத்தில் தலைவர்கள் என்று நினைத்திருந்த எம்மீதே எமக்கு...ச்சே! 'முரசு' யார்மீதும் வீண்பழி சுமத்தாது. 'முரசு' போலித்தனமானவர்கள் என்று சுட்டிக்காட்டுபவர்களும் அப்படியேதான் அம்பலமாகிறார்கள். முரசின் விமர்சனத்தை உறுதிசெய்கிறார்கள். நன்று. முரசே உன் பணி.

பி.சிவயோகன், கொழும்பு-06.

## மேய்ப்பும்-ஏய்ப்பும்

சிலரை பலநாள் ஏமாற்றலாம், பலரை சிலநாள் ஏமாற்றலாம். நம் முன்னாள் தலைவர்கள் நம்மை எந்நாளும் ஏமாற்றலாம் என நினைக்கிறார்கள். தீர்வுத் திட்டத்தில் நல்ல அம்சங்கள் இருக்கிறதாம். அது என்ன அம்சம் என்றாவது சொல்லக்கூடாதோ? 'மக்கள் எல்லாம் முட்டாள்கள், மக்களுக்கு ஒன்றும் தெரியாது, உள்ளே இருக்கும் விஷயம் எமக்குத்தான் தெரியும்' என்று சொல்லிச் சொல்லித்தானே எங்கள் தலையைச் சுற்றினார்கள். இப்போதும் அதே மேய்ப்பும் ஏய்ப்பும் சரிப்படும் என்றா நினைக்கிறார்கள்?

வி.குகதாசன், மட்டக்களப்பு.

## கல்லாநிதிகளும் கலாநிதிகளும்

மறக்காமல் தன்பெயரோடு டாக்டர் (கலாநிதி) என்பதை சேர்த்துக்கொள்ளும் நண்பர் நீலன் திருச்செல்வம் யாருக்காக அரசியல் வைத்தியம் செய்ய நினைக்கிறார்? கல்லாநிதிகளுக்கு தெரிந்துள்ள உண்மைகள் கூட கலாநிதிகளுக்கு தெரியாமல் போகலாமா? ஜே.ஆர்.காலம் முதல் இன்றுவரை கலாநிதி நீலன் அவர்கள் எமக்கு ஏற்காத அலர்ஜியான மருந்துகளையே சிபாரிசு செய்து வருகிறார்.

பா.மரியநாயகம், நீர்கொழும்பு.

## விளம்பர ஆசை

'தமிழ்க் கட்சிகளின் மனச்சாட்சி பேசுகிறது' காதிலை பூ கந்தசாமியார் கொடுத்த 'டோஸ்' அருமை. பேச்சுவார்த்தைகள் என்பதே கட்சிகளையும், தம்தம் பெயர்களையும் விளம்பரம் பண்ணும் வியாபாரமாகி விட்டது. ஏதோ நாங்களும் இருக்கிறோம் எனக் காட்டிக்கொள்ளமட்டுமே தமிழ்க் கட்சிகள் பிரயத்தனப்படுவதாகத் தெரிகிறது. மனச்சாட்சியாவது ஒன்றாவது?

என்.ஜெயம், காரைதீவு.

## அப்பாவே ஆசான்

'கனவு மெய்ப்படவேண்டும்' அருமையாகத் தொடர்கிறது. சுமதிக்கு வாய்த்த அப்பா ஆசானா, நண்பரா?! இப்படித்தான் அப்பாக்கள் தங்கள் பெண்பிள்ளைகளை வளர்க்க வேண்டும். தெளிந்த ஞானச் செருக்கும், நிமிர்ந்த பார்வையும், தன்னம்பிக்கையுமே மகிழ்ச்சியான வாழ்வை பெண்ணுக்கு வழங்கும். பெண்ணை ஒரு ஜடமாக கருதாமல் மனுஷியாக மதித்துப் போற்றும் சமூகமே உயர்வு பெறும்.

ஜி.விமலா, வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com

# புளியங்குளத்தில் புலிகள் பலத்த தயாரிப்பு!

## இரகசியமாகத் தீட்டப்படும் தாக்குதல் திட்டங்கள்!

'ஜயசிக்குறுய்' படையினர் புளியங்குளத்தைச் சென்றடைய ஓரிரு கிலோமீட்டர் தூரத்திலேயே நிலை கொண்டுள்ளனர்.

புளியங்குளத்தை 'ஜயசிக்குறுய்' படையினர் சென்றடைந்தால் பாரிய தாக்குதலை நடத்தக்கூடிய வியூகங்களைப் புலிகள் வகுத்துள்ளதாகத் தெரிகிறது.

ஓமந்தையில் இருந்து தற்போது படையினர் நிலைகொண்டுள்ள பகுதிவரை நிலத்துக்கு கீழே அமைக்கப்பட்ட பங்கர்கள், நகர்வுப் பாதைகள் ஊடாக புலிகள் படையினரின் மீது தாக்குதல்களைத் தொடுத்து வந்தனர்.

புளியங்குளத்தில் மேலும் பாரிய பங்கர்கள் மற்றும் தாக்குதலுக்கான பதுங்கு அரண்கள் புலிகளால் அமைக்கப்பட்டுள்ளன.

படையினர் இதுவரை சந்தித்த புலிகளின் எதிர்ப்பைவிட பலமடங்கு எதிர்ப்பை சந்திக்க வேண்டியிருக்கும் என்று களநிலவரம் பற்றிய கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே 'செய் அல்லது செத்துமடி' இரண்டு கட்ட நடவடிக்கைகள் மூலமாக புலிகளின் தாக்குதல் அணிகளின் மனோபலம் உயர்ந்திருக்கிறது. அதுதவிர ஏராளமான துப்பாக்கித் தோட்டாக்கள், வெடிமருந்துகள், ஷெல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. எனவே ரவைகளோ, ஷெல்களோ தீர்ந்துபோகுமோ என்ற தயக்கமின்றி சரமாரியான பிரயோகங்களில் புலிகள் ஈடுபடக்கூடியதாக இருக்கும் என்று அக் கணிப்புக்கள் கூறுகின்றன.

ஓமந்தையில் ஆட்டிலெறி ஷெல்கள் 330 கைப்பற்றப்பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்பு கூறுகிறது. ஏ.கே.47, ரி.56 போன்ற ஆயுதங்கள், ரவைகள் என்பன புலிகளின் ஆட்பலத்தைவிட பலமடங்கு அதிகளவில் இருக்கிறதாம். மேலும் சில நீண்டதூர ஆட்டிலெறிகளையும், கனரக ஆயுதங்களையும், ஷெல்களையும் கைப்பற்றுவதிலேயே புலிகள் நாட்டம் கொண்டுள்ளனராம்.

ஓமந்தை ஊடறுப்பில் குறைந்தது மூன்று ஆட்டிலெறிகளையாவது கைப்பற்றுவதே புலிகளின் குறியாக இருந்தது.

இதேவேளை கிளிநொச்சியில் நிலை கொண்டுள்ள படையினர்மீதும் புலிகள் தாக்கக்கூடும் என்று படைவட்டாரங்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

கிளிநொச்சி முன்னரங்க நிலைகளை ஊடுருவி உளவு அறிய முற்பட்ட புலிகள் இயக்கத்தினர் 25 பேர்வரை படையினரால் இதுவரை கொல்லப்பட்டனர் என்றும், அதனால்தான் கிளிநொச்சிமீதும் புலிகள் தாக்கக்கூடும் என்று கருதப்படுவதாகவும் கூறப்படுகிறது.

### இரகசிய முடிவுகள்

வன்னியில் தாண்டிக்குளச் சமரும், பின்னர் ஓமந்தைச் சமரும் கடைசி நேரம்வரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தாம்.

முக்கிய தளபதிகள் தவிர வேறு எவருக்கும்-எங்கே தாக்குதல் நடத்தப்படப்போகிறது என்பது தெரியாது. தாக்குதலுக்கு சில மணி நேரங்கள் முன்பாகவே வரைபட விளக்கம் கொடுக்கப்பட்டதாம்.

பிரபாகரன் துப்பாக்கியால் முதல் வேட்டை தீர்த்ததும் பிரதான தளத்தில் இருந்து அணிகள் புறப்பட்டன.

தாண்டிக்குளச் சமருக்கு வவுனியா மேற்குப் புறமிருந்து 20 பஸ்களில் புலிகளின் அணிகள் வந்திறங்கியதாகக் கூறப்படுகிறது.

ஓமந்தை சமரிலும் பிரபாகரன் முன்பாக அணிவகுத்து நின்று உறுதிப்பிரமாணம் ஏற்றபின்னரே அணிகள் புறப்பட்டனவாம்.

மணலாறு (வெலிஓயா) முகாம் தாக்குதல் திட்டம் கசிந்தபின்னர் தற்போது ஒவ்வோர் தாக்குதல் திட்டமும் மிக இரகசியமாக வைக்கப்படுகிறதாம். பல திசைகளில் உளவறியும் புலிகள் அனுப்பப்படுகிறார்கள். இறுதியாக தாக்குதல் இலக்கு பிரபாகரனால் தெரிவுசெய்யப்பட்டு திட்டம் வகுக்கப்படுகிறது.

இதனால்தான் படையினருக்கும் புலிகளின் நோக்கங்கள் தொடர்பாக முன்கூட்டியே தகவல்கள் சரியாகக் கிடைப்பதில்லையாம்.

### யாழில் புலிகள்

வன்னி நடவடிக்கைக்காக யாழ் குடாநாட்டில் இருந்து படையினரில் ஒரு பகுதியினர் எடுக்கப்பட்டனர்.

இதனையடுத்து யாழ் குடாநாட்டுக்கு புலிகளின் நடமாடும் கெரில்லாக் குழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் இருந்து சூரியக்கதிர் நடவடிக்கையின் பின்னர் வெளியேறிய முக்கிய பொறுப்பாளர்கள் பலர் மீண்டும் அங்கு சென்றுள்ளதாக அறியப்படுகிறது. படையினரின் பண்டுக்கு வெளியே உள்ள பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

### மக்கள் தவிப்பு

வன்னி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் காடுகளுக்குள் தஞ்சமடைந்த நிலையில் உணவுப் பொருட்கள் இன்றியும், குடிக்க நீரின்றியும் அவதிப்பட்டு வருகின்றனர்.

மல்லாவி, துணுக்காய் போன்ற பகுதிகளில் காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளன.

இதேவேளை மன்னாரில் படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்கும் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். நெரிசலை கட்டுப்படுத்த புலிகளாலும் முடியவில்லை. இடை நடுவே மயங்கி விழுபவர்களையும் ஏறி மிதித்துக் கொண்டு மக்கள் சென்றதையும் அவதானிக்க முடிந்தது. இதனால் கோபமடைந்த புலிகள் தாக்கியதில் இரண்டு பேருக்கு மண்டை உடைந்தது.

வன்னியில் நீர்நிலைகள் மற்றும் நிலம் உள்ளோர் குரக்கன், கௌபி போன்ற பயிர்களை விதைக்குமாறு புலிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# உணவுப் பொருள் மோசடியில் அதிகாரிகள்!

## கறுப்புச் சந்தையுடனும் தொடர்பாம்!

யாழ் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருட்களுக்கான பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. பண்டங்களைக் கொள்வனவு செய்வதானால், உரிய விலையைவிட பல மடங்கு கூடுதல் பணம் கொடுத்தே 'கறுப்புச் சந்தை'யில் பெற வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்குக் கொழும்பிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போதுமான அளவு அனுப்பப்பட்டுவருதற்கான கணக்குகள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் உள்ளன. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் அதே அளவு பொருட்கள் வந்து சேர்ந்தமைக்கான விபரங்களும் சரியாக உள்ளன. ஆனால் கப்பலில் ஏற்றப்படுவதாகக் கூறப்படும் பொருட்களில் ஒரு பகுதி கொழும்பில் சில வர்த்தகர்களிடம் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

யாழ்ப்பாணம் போய்ச் சேரும் பொருட்களில் கணிசமான அளவு உத்தியோக பூர்வமாக வினியோகிக்க வேண்டிய கூட்டுறவுக் கடைகள் போன்றவற்றுக்குச் சென்றடையாமல், கறுப்புச் சந்தைக்காரர்களின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகின்றன.

இத்தகைய மோசடிகளுக்கு உடந்தையாக கொழும்பிலிலுள்ள உயர்தர அரச அதிகாரிகளும் செயற்பட்டு வருகின்றனராம். அவ்வதிகாரிகள் தங்களுடைய நெருங்கிய உறவினர்கள் மூலம் இதனைச் செய்து வருதாகவும் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் இப்பொருட்களைக் கையேற்கும் உயர்தர அரசாங்க அதிகாரிகள் வேண்டுமென்றே பொய்யான விபரங்களைத் தயாரித்து மோசடி செய்து வந்துள்ளனர் என்ற விபரம் வெளியாகி உள்ளது.

அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருட்களை ஏற்றிச்செல்வதற்காக அமர்த்தப்படும் கப்பல்களை ஏற்பாடு செய்யும்-இத்துறையுடன் தொடர்புடைய அதிகாரிகளும் இம்மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. கப்பலில் ஏற்றப்படும் பொருட்கள் பற்றியும் இறக்கப்படும் பொருட்கள் பற்றியும் கணக்கு விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் மட்டும் கச்சிதமாக இருக்கின்றன. ஆனால் பொருட்கள் மட்டும் காணாமற் போய்விடுகின்றன.

தனது அரசாங்கத்துக்கு அவப்பெயரைப் பெற்றுத்தரும் இத்தகைய நடவடிக்கையினால், ஜனாதிபதி சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் கோபமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உடனடியாக வடபகுதிக்கான புனருத்தாரணப் பணிகளை தன்னுடைய நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டு வந்துள்ளார் என்று தெரிய வருகிறது.

இதேவேளை, யாழ் அரச அதிபர் பத்மநாதன் அப்பதவியில் இருந்து ஜனாதிபதியால் மாற்றப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பண்டுக்கு வெளியே கட்டுப்பாடு

யாழ் குடாநாட்டில் வடமராட்சியில் படையினரின் பாதுகாப்பு அரண் (பண்ட்) பகுதிக்கு வெளியே உள்ள மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

செம்பியன்பற்று, மணல்காடு வரையிலான பரந்த பிரதேசத்தில் உள்ள மக்களே தமது அன்றாட உணவுத்தேவைகளுக்கு அவதிப்படும் நிலையில் உள்ளனர்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து 3 கிலோ மா, 3 கிலோ அரிசி மட்டுமே கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகின்றனர். சைக்கிள் டயர், டியூப், எரிபொருட்கள் என்பன எடுத்துச் செல்லவும் தடை விதிக்கப்படுகிறது. மீன்களை கொண்டு சென்று விற்பனை செய்ய மீனவர்களுக்கும் தடை விதிக்கப்படுகிறதாம்.

முன்னர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த செம்பியன் பற்று, மந்திகை பஸ்சேவையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

# தெரிவுக்குழு ஒத்திவைப்பு! தமிழ்க் கட்சிகள் சந்தேகம்!

பாராளுமன்றத் தெரிவுக் குழு மீண்டும் கூடும் என்று நீதியமைச்சர் கூறியுள்ளார். ஆயினும் பாராளுமன்ற தெரிவுக்குழு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இதுவரைகால பாராளுமன்ற அமர்வுகளில் ஆராயப்பட்ட விடயங்கள் எதிலும் பொது இணக்கம் காணப்படவில்லை. கடைசியாக நடைபெற்ற பாராளுமன்ற தெரிவுக் குழு அமர்வில் தேர்தல் முறை பற்றி ஆராயப்பட்டது. அதிலும் ஒத்த கருத்துக் காணப்படாத நிலையில்தான் தெரிவுக்குழு அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இதுவரை ஆராயப்பட்ட விடயங்களை அரசாங்கம் விரைவில் முன்வைக்கும். அவசியப்பட்டால் பாராளுமன்றத் தெரிவுக் குழு மீண்டும் கூட்டப்படும் என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் இறுதியாக நடந்த பாராளுமன்ற அமர்வின்போது தெரிவித்தார்.

அத்தோடு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒத்திவைக்கப்பட்டது. இதுவே உண்மை நிலையாகும். இனிமேல் தெரிவுக்குழு கூடவே கூடாது என்றும் சொல்லவில்லை; கூடும் என்றும் சொல்லவில்லை.

அடுத்த கட்டமாக பாராளுமன்றத்தில் தம் முடிவை முன்வைப்பதா, அல்லது மீண்டும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராய்வதா என்பதை அரசாங்கம், சூழலைப் பொறுத்து தீர்மானிக்கவுள்ளது.

எந்த அடிப்படை விடயத்திலும் இணக்கப்பாடு காணப்படவில்லை. அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் மட்டுமல்லாமல், தமிழ்க் கட்சிகளுடன்கூட தீர்க்கமான ஆலோசனை நடத்த அரசாங்கம் தவறிவிட்டது. இந்நிலையில் முன்வைக்கப்படுவதாகக் கூறப்படும் சட்டவரைபு தொடர்பாக தமிழ்க் கட்சிகள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

# யாழில் புலிகளால் மூவர் பலி!

யாழ் குடாநாட்டில் வடமராட்சியில் உள்ள நவண்டில் என்னும் இடத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த கப்டன் இமாம் என்றழைக்கப்படும் வேலாயுதம் சந்திரகுமார் என்பவரே கொல்லப்பட்டவராவர். இவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவர்.

இந்தியப் படை காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் பிடிக்கப்பட்ட பின்னர் அந்த இயக்கத்தினருடன் இணைந்து செயற்பட்டார். அதன் பின்னர் ஈ.பி.டி.பி.யில் சேர்ந்து இயங்கினார்.

தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றபோதே புலிகளின் பிஸ்டல் குழுவினர் இவரைச் சுட்டுள்ளனர். 29.06.97 அன்று இச் சம்பவம் இடம்பெற்றது. அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக ஈ.பி.டி.பி.யினரால் பருத்தித்துறையில் வைக்கப்பட்டிருந்தது.

இதே தினத்தன்று பருத்தித்துறையில் குகதாசன் சசிதரன் (வயது 30) என்பவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். உடுப்பிட்டியைச் சேர்ந்த இவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்தவர்.

29.06.97 அன்று யாழ்ப்பாணம் தென்மராட்சியில் கைதடியில் உள்ள நவபுரத்தில் சின்னையா பாலையா (வயது 50) என்பவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# 93 பேர் பலி! புலிகள் தெரிவிப்பு!

## 1 லெப்டினனட் கேணல்–5 மேஜர்கள்!

ஓமந்தை-பெரியமடுவில் 'செய் அல்லது செத்துமடி-2'ல் தமது தரப்பில் 93 பேர் பலியானதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

பலியானவர்களில் ஒருவர் லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ளவர். ஐந்து பேர் மேஜர் தரத்தில் உள்ளவர்கள்.

93 பேரில் 50 பேரின் பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர். லெப்டினன்ட் கேணல் ஐங்கரன் (நாகலிங்கம் யோகராஜ்-முல்லைத்தீவு) மற்றும் ஐந்து மேஜர்கள், 14 கப்டன்கள், 12 லெப்டினன்ட்டுகள், 6 இரண்டாம் லெப்டினன்ட்டுகள் ஆகியோர் அடங்குவர். பெயர் விபரம் வெளியான 50 பேரில் 28 பேர் பெண் புலிகள். 22 பேர் ஆண் போராளிகள். இவர்களில் 22 பேர் யாழ் மாவட்டத்தையும், 8 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தையும், 5 பேர் வவுனியாவையும், 7 பேர் திருமலையையும், 3 பேர் மன்னாரையும், 3 பேர் கிளிநொச்சியையும், 2 பேர் மட்டக்களப்பையும் சேர்ந்தவர்களாவர்.

50க்கு மேற்பட்ட புலிகள் காயமடைந்துள்ளனர் என்று கூறுப்படுகிறது. புலிகளின் தள வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைகள் செய்யப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன.

# 50 பொலிசார் விலகிச் சென்றனர்!

## போர்முனையில் தொடர் நெருக்கடி

வவுனியாவுக்கு வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீட்கும் பொருட்டு அரசாங்கம் புதிய படை வீரர்களைத் திரட்டி போர் முனைக்கு அனுப்பிவைக்கும் இக்காலகட்டத்தில், அரசாங்கத்துக்குப் புதிய தலையிடியை ஏற்படுத்தும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் கடமைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த பொலிஸ்காரர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை புலிகளின் தாக்குதல் ஆரம்பமானதும் தங்கள் பங்கர்களிலிருந்து வெளியேறி வவுனியா நகருக்குத் தப்பிவந்துவிட்டனராம்.

இவ்வாறு வவுனியாவுக்கு வடக்கே பங்கர்களில்-பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 250 பொலிசார்வரை தப்பி ஓடிவிட்டனராம். இவர்களில் 200 பேர் வரை- பொலிஸ் உயர் அதிகாரிகள் கொடுத்த வாக்குறுதியைத் தொடர்ந்து மீண்டும் கடமையில் சேர்ந்து கொண்டனர். இவர்களுடன் பாதுகாப்பு பங்கர்களில் படையினரும் ஈடுபடுத்தப்படுவர் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டதாம்.

எஞ்சிய 50 பொலிசாரும் அதிகாரிகளின் கோரிக்கைகளை நிராகரித்து, தங்கள் இராஜினாமா கடிதங்களை சமர்ப்பித்துவிட்டு- சீருடைகளையும் களைந்துவிட்டு, இரவு ரயில் வண்டியில் கொழும்பு நோக்கிப் பயணமாகிவிட்டனராம். தென் இலங்கையில் பல பொலிஸ் நிலையங்களிலும் கடமையிலிருந்த இவர்கள் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையின்போது வவுனியாப் பிரதேசத்தில் கடமைபுரிய அழைத்து வரப்பட்டனராம்.

இவர்களை உடனடியாக பதவியிலிருந்து நீக்கிவிட மேலிடம் உத்தரவிட்டுள்ளது. இவர்கள் மீது பொலிஸ் சட்டவிதிகளுக்கமைய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் உயர்தர அதிகாரி கூறியதாக 'சண்டே லீடர்' ஆங்கில வார ஏடு கூறியுள்ளது.

# கைக்குண்டை வெடிக்கவைத்து பலி!

## படையினர் விடுத்த அறிக்கை!

யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற இரண்டு சம்பவங்கள் தொடர்பாக 51வது படையணியின் கட்டளைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"19.06.97 அன்று கோண்டாவிலில் சைக்கிளில் சென்ற இரண்டுபேர் படையினர் தடுத்தும் கேளாமல் சென்றனர். படையினர் எச்சரித்தபோது கைக்குண்டை வீசிவிட்டு தப்பியோட முயன்றனர். இராணுவத்தினர் உடனடியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார். இன்னொருவர் அருகிலுள்ள வீடொன்றுக்குள் சென்று கைக்குண்டை வெடிக்கவைத்து பலியானார். இருவரிடமிருந்தும் பிஸ்ரல் 1, மகசீன் 1, சயனைட் குப்பி 1 ஆகியன கைப்பற்றப்பட்டன.

24.06.97 அன்று 3.30 மணியளவில் உரும்பிராயில் ரோந்து சென்ற படையினர், மூன்றுபேர் தங்கள் பார்வையில் இருந்து தப்பி ஓடுவதைக் கண்டனர். படையினர் துரத்திச் சென்றபோது அவர்களில் ஒருவர் கைக்குண்டை வெடிக்கவைத்து பலியானார். ஏனைய இருவரும் தப்பிச் சென்றுவிட்டனர். இச் சம்பவத்தில் இரண்டு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டன." இவ்வாறு படையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 வருடங்கள் கழிந்தும் சான்றிதழ்கள் இல்லை!

## பயிற்சியைப் பூர்த்தி செய்தோர் அங்கலாய்ப்பு!

'நண்பர்கள் உலகம்' எனும் உதவி அமைப்பினாலும் தேசிய தொழிற்பயிற்சிச் சபையினாலும் மட்டக்களப்பில் ஆங்கிலம் தமிழ் ஆகிய தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி நடாத்தப்பட்டு இறுதியாக கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் பயிற்சியை முடித்து பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு இன்னமும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

இரு நிறுவனங்களுக்கூடாகவும் பயிற்சியை முடித்துக் கொண்ட சுமார் 105 பயிலுநர்கள் தமக்குரிய சான்றிதழ்கள் இன்று கிடைக்கும் நாளை கிடைக்கும் என்ற பொய்யான உறுதிமொழிகளைக் கேட்டு கடந்த 4 வருடங்களாக அலைந்து திரிவதாகக் கூறுகிறார்கள்.

1994 ஆம் ஆண்டு பயிற்சி நெறியை முடித்து பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தியவர்களுக்கு இன்றுவரை, தாம் பயிற்சி முடித்த தொழிற் தகைமைகளுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படாததால் தொழில்களுக்கு விண்ணப்பிக்க முடியாது ஏங்கித் தவிப்பதாகவும் தெரிவிக்கிறார்கள்.

இவ்விடயம் குறித்து அப்போதைய போதனாசிரியையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தாம் சகல சான்றிதழ்களையும் தயார் செய்து அதற்குப் பொறுப்பாயிருந்த நண்பர்கள் உலக அமைப்பைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைத்து விட்டபோதிலும், அவை இன்னமும் பயிற்சியை முடித்த மாணவர்களிடம் கொடுக்கப்படாதிருப்பது தனக்குக் கவலையை அளிப்பதாக அவர் தெரிவித்தார். அத்துடன் இச்சான்றிதழ் வைத்திருக்கும் சம்பந்தப்பட்டோரைப் பலமுறை தொடர்பு கொண்ட பொழுதும் அதற்குத் தகுந்த பதிலளிக்கப்படவில்லையென்றும் அவர் மேலும் சொன்னார்.

சம்பந்தப்பட்டவர்கள் ஏன் தமது சான்றிதழ்களை மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பது மர்மமாக இருப்பதாக சான்றிதழுக்காக அலைந்து திரியும் மாணவர்கள் ஆத்திரத்துடன் கவலை வெளியிட்டனர்.

# கடற்படைக்கு ஃபிரான்ஸ் கப்பல்!

இலங்கைக் கடற்படைக்கு, இந்து சமுத்திரத்திலுள்ள தனது கடற்படை அணியைச் சார்ந்து ஒரு யுத்தக்கப்பலை விற்பதற்கு ஃபிரான்ஸ் முன் வந்திருப்பதாக அறியப்படுகிறது. இதன் விலை-6 கோடி டொலராம், இல. நாணயப்படி ரூ.354 கோடி..

"734 வெண்டிமியார்" என்பது இதன் பெயர். இக்கப்பலின் விலை மட்டும் பெரிதென்பதில்லை: இக்கப்பலும் சிறிலங்கா கடற்படையின் அளவுக்கு உகந்ததல்ல-மிகப்பிரமாண்டமானது என்பது ஒரு கடற்படை அதிகாரியின் கணிப்பு. இதில் 13 அதிகாரிகளும் 78 மாலுமிகளும் கடமை புரிய வேண்டுமாம்.

இருவாரங்களுக்கு முன்னர் கொழும்புத் துறை முகத்துக்கு மற்றுமொரு ஃபிரேஞ்சுக் கடற்படைக்கப்பல் 'லே சோம்' வந்ததும் கப்பல் கொள்வனவுடன் சம்பந்தப்பட்டதே என்று கருதப்படுகிறது.

# இயக்கங்கள் நடத்தும் போட்டிச் சந்தை!

## மட்டக்களப்பில் வெடித்துள்ள புதிய பிரச்சனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினருடன் இணைந்து செயற்பட்டுவரும் ஓர் இயக்கத்தினர் (புளொட்) செங்கல் வியாபாரத்தில் தலையிட்டுள்ளனர்.

இதுவரை காலமும் செங்கல் உற்பத்தியில் ஈடுபடும் கல்வாடிக் காரர்களிடமிருந்து கல் கொள்வனவு செய்வோர் நேரடியாகச் சென்று வாங்கி வந்து விற்பனை செய்தனர். ஆனால் தற்பொழுது புலிகள் இயக்கத்தினரின் ஆளுகைக்குள் உள்ள பகுதியில் இருந்து ஏற்றி வரப்படும் செங்கற்கள் யாவும் தமது முகாமில் இறக்கப்பட வேண்டும்; வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்று புளொட் இயக்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளதோடு, செங்கற்கள் தேவைப்படுவோர் தம்மிடமே வந்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இந்த நடவடிக்கையினால் இதுவரை காலமும் கல் கொள்வனவு செய்து ஏற்றி வந்து விற்பனை செய்வோர் மத்தியிலும் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பொது மக்கள் மத்தியிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. கல் கொள்வனவு செய்யும் லொறி மற்றும் உளவு இயந்திரங்கள் வைத்திருப்போர் கல்வாடிக்குச் சென்று கல் ஏற்றிவருவதை நிறுத்தியுள்ளனர். இதனால் செங்கல்லுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி வேலைகளும் தடைபட்டுள்ளன. இப்பிரச்சனைக்கு உடனடித் தீர்வு காணப்படும் வரை தாம் இனிமேல் கல் ஏற்றிவரப் போவதில்லையென்று கல் ஏற்றி வருவோர் தெரிவிக்கின்றார்கள்.

ஒரு லொறி கல் ஏற்றிவருவதற்காக புலிகள் இயக்கத்தினருக்கு 1200/= ரூபாவும், இதுபோல் இடையிடையேயுள்ள சீருடை தரப்பாருக்கு அன்பளிப்புகளும் கொடுக்க வேண்டும்.

புலிகள் இயக்கத்தினரும் கல்வாடிகள் அமைப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள். இனிமேல் அவர்களிடமிருந்து வரும் செங்கற்களும் புளொட் இயக்கத்தினரிடம் விற்பனைக்குச் செல்லும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களும் இனிமேல் தங்களிடமே அரிசி விற்பனை செய்ய வேண்டுமென்றும் அதன்பின் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் தம்மிடமே அரிசி கொள்வனவு செய்ய வேண்டுமென்றும் புளொட் இயக்கத்தினர் புதிய நிபந்தனை விதித்துள்ளனராம்.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் செய்திக்கு ஆங்கில மறுப்பு!

# கூட்டணி உபதலைவர் மொழிப் புறக்கணிப்பு!

'கிருஷாந்தி விவகாரத்தில் புலிகளுக்கு தொடர்பு-. கூட்டணி உபதலைவர் சந்தேகம்' என்ற தலைப்பில் 'முரசு' செய்தி வெளியிட்டிருந்தது.

தமிழர் பணிக்குழுவைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ள விபரங்களே வெளியிடப்பட்டிருந்தன.

"பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலையான கிருஷாந்தி விவகாரத்தில் புலிகளுக்கு தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கிறேன்; வடக்கு-கிழக்கில் பலியான பொதுமக்களில் பலர் புலிகளால் கொல்லப்பட்டனர்" என்றெல்லாம் கூட்டணி உபதலைவர் ஆனந்தசங்கரி கூறியதாக தமிழர் பணிக்குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இது தொடர்பாக ஆனந்தசங்கரி ஒரு மறுப்புக் கடிதம் முரசுக்கு அனுப்பியிருக்கிறார். முழுக்க முழுக்க ஆங்கில மொழியில் அக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

ஆனந்தசங்கரி தமிழ் மொழியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் நன்கு உரையாற்றி வாக்குகளையும் பெற்று எம்.பியாக இருந்த தமிழர்.

தமிழ்மொழிக்கு உரிமை மறுக்கப்படுவதாகக் கூறி முன் ஒரு காலத்தில் போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்தவர்கள் கூட்டணியினர் என்பதை யாவரும் அறிவர். அப்படியிருக்கையில் முரசுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதியிருப்பதானது வியப்பாக இருக்கிறது. அப்படியாயின் மொழி உரிமை என்றதெல்லாம் வெறும் அரசியல் இலாபக் கோஷங்கள்தானா? என்று கேள்வி எழுகிறது.

முரசு தமிழில் சிந்தித்து தமிழில் கருத்துக்கள் வெளியிடும் பத்திரிகை. குறிப்பிட்ட செய்தியும் தமிழிலேயே பிரசுரமானது. எனவே கூட்டணி உபதலைவர் தனது கடிதத்தை தமிழில் அனுப்பிவைத்தால் முரசில் அவரது மறுப்பு பிரசுரமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தமிழில் கடிதம் தயாரிக்கக்கூடியவர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறோம். அப்படியில்லையெனில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதில் உள்ள 'தமிழர்' என்ற பதத்தை நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

-ஆசிரியர்-

# ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள்!

(கண்டி நிருபர்)

அண்மைக் காலங்களில் தோட்டப் பாடசாலைகள் ஆசிரியர் நியமனங்களின் போது முறைகேடுகள் பல இடம்பெற்றிருப்பதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் திரு.ஜீ.சிவராஜ் இது தொடர்பாக முரசுக்குத் தெரிவிக்கையில், க.பொ.த.(சா.தா), க.பொ.த.உயர்தரம் ஆகிய தராதரத்தின் கீழ் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவுகள் இடம்பெற்ற போதிலும் 118 புள்ளிகளைப் பெற்ற தோட்டப்புற தமிழ் மாணவி ஒருவருக்கு நியமனம் கிடைக்கவில்லை. இந்த மாணவி பன்வில மடுல்கல பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார், என்று கூறினர்

இதுபோன்று பல தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இந்த ஆசிரியர் நியமனத்தின் போது பாதிக்கப்பட்டிருப்பதை அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த முறைகேடுகள் குறித்து ஜனாதிபதிக்கும் அறிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

## வடக்கு—கிழக்கு தமிழ்த்தினப் போட்டி

# பரிசுபெற வராதது ஏன்?

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மொழித் தின விழா 23.06.97ல் திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி தலைமையில் இடம் பெற்ற விழாவில் திருக்கோணமலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.ரி.பி.டி. ஆரியசேன அழகு தமிழில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைமையுரையிலும், கல்வியமைச்சின் செயலர் திரு.சுந்தரம் டிவகலாலாவின் சிறப்பு விருந்தினர் உரையிலும், மொழியைப் பிழையற எழுத, வாசிக்க, உரையாடத் தெரிந்திருக்க வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டது. பிரதம விருந்தினர் திரு.ஜி.கிருஷ்ணமூர்த்தி தமதுரையில், நீதி வழங்கப்படுவது பெரிதல்ல. அந்த நீதி நீதியான முறையில் வழங்கப்படுவதே சிறப்பானது என்பதை வலியுறுத்தினார்.

'97 தமிழ் மொழித் தினப் போட்டிகளில் அதிக இடங்களைக் கைப்பற்றிக் கொண்டமைக்கான முதலாவது பரிசை திருக்கோணமலைக் கல்வி வலயமும், இரண்டாவது பரிசை மட்டக்களப்பு கல்வி வலயமும் பெற்றுக்கொண்டன. திருக்கோணமலைக் கல்வி வலயம் 11 முதலிடங்களையும், 10 இரண்டாம் இடங்களையும் 8 மூன்றாம் இடங்களையும் பெற்றிருந்தது.

யாழ் கல்வி வலய மாணவர்கள் சிலர் விழா மேடையில் பரிசு பெற்றுக் கொள்ளத் தவறியதையிட்டு சிறிது சலசலப்பு ஏற்பட்ட போதிலும் அது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்பு அல்ல என்பது பின்னர் தெளிவானது.

எனினும் யாழ் வலய மாணவர்கள் ஒதுக்கப்பட்டனர் என்ற கருத்தைச் சிலர் பரப்ப முயன்ற போதிலும், அடுத்த நாள் சுந்தரம் டிவகலாலா தனது அமைச்சு அலுவலகத்தில் யாழ் வலயக் கல்விசார் உத்தியோகத்தர்களுடன் உரையாடி உண்மை நிலையை விளக்கினார்.

முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளில் சில விழாவின்போது மேடையேற்றப் பட்டன.

## விமானம் இல்லாத வான்படை!

# அமைச்சர் அஷ்ரப்பின் புதிய பொறுப்பு!

அமைச்சர் அஷ்ரப்புக்கு மீண்டும் புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ளபோதும், வடக்கு தவிர்ந்த புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சராகவே அவர் பதவிவகிப்பார். வடக்கு புனர்வாழ்வு- புனரமைப்பு நேரடியாக ஜனாதிபதியின் பொறுப்பின்கீழ் இருக்கும்.

அமைச்சர் அஷ்ரப்பின் பொறுப்பில் முன்னர் இருந்த துறைமுகங்கள்-கப்பற் துறையில் தற்போது கப்பற்துறை எடுக்கப்பட்டுவிட்டது. கப்பற்துறையில்லாத 'துறைமுக அமைச்சுப் பொறுப்பு விமானம் இல்லாத வான்படை போன்றதாகும்' என்று அரசியல் வட்டாரங்கள் கூறியுள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சிரேஷ்ட அமைச்சர்கள் பலரின் பலத்த முயற்சி காரணமாகவே வடக்கு தவிர்ந்த புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சு மீண்டும் வழங்கப்பட்டது. அதேசமயம் அதிகாரங்களைக் குறைப்பது என்பதில் பிடிவாதமாக இருந்த ஜனாதிபதி கப்பற் துறையை எடுத்துவிட்டுத்தான் ஏனைய அமைச்சுப் பொறுப்பு என்று உறுதியாகக் கூறிவிட்டாராம். அதனை ஏற்றுக்கொண்ட பின்னரே புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சு வழங்கப்பட்டதாகவும் தெரிகிறது.

அமைச்சரவை மாற்றத்தால் முஸ்லிம் காங்கிரசில் நன்மையடைந்திருப்பவர் ஹிஸ்புல்லாதான். ஏற்கனவே வகித்த தபால் தொலைத்தொடர்பு பிரதி அமைச்சர் பதவியுடன் தமிழ் வெகுஜனத் தொடர்பு துறையும் அவருக்குக் கிடைத்துள்ளது.

அமைச்சர் அஷ்ரப் புதிய அமைச்சுப் பொறுப்பை ஏற்க முன்னரே ஹிஸ்புல்லா தனது பிரதி அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவரை பதவிப் பிரமாணம் செய்யாமல் தாமதிக்குமாறு அம்பாறையில் இருந்து செய்தி அனுப்பியிருந்தாராம் அஷ்ரப். ஆயினும் ஹிஸ்புல்லா அமைச்சர் அஷ்ரப்புக்கு முன்னரே பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

# வட்டுக்கோட்டையில் மோதல்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் நான்கு புலிகள் பலியாகினர்.

கப்டன் சுவீந்திரன் (லெட்சுமணநாதன் கருணசபேசன்-யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் சிறி (மகாலிங்கம் ஜெயக்குமார்-யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் மண்ணரசன் (சண்முகம் தேவராசா-கிளிநொச்சி), பாட்சா ஆகிய நான்கு புலிகளே பலியானோராவர்.

சமீபத்தில் யாழ் குடாநாட்டில் மூளாய், வட்டுக்கோட்டை, மாவடி, சித்தன்கேணிச் சந்தி, சுழிபுரம் ஆகிய பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

17.06.97 அன்று யாழ்ப்பாணம் மட்டுவில் தெற்குப் பகுதியில் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் மூன்று புலிகள் பலியானதாக கூறப்படுகிறது. இவர்களிடமிருந்து ரி.56-01, இரண்டு கைக்குண்டுகள், 136 ரவைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன என்று படையினர் தெரிவித்துள்ளனர்.

# மூதூரில் பிஸ்டல் குழு தாக்குதல்

மூதூரில் பச்சனூர் இராணுவமுகாம் படையினருக்கு உதவிபுரிந்து வந்த சிவசுப்பிரமணியம் பாஸ்கரன் என்பவர் புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட பாஸ்கரன் முன்னர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்தவர். பின்னர் இவர் இராணுவத்தினருடன் இணைந்து கொண்டார்.

இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்லப்படும் பொது மக்களை முதலில் பதம்பார்ப்பது இவர்தானாம். புலிகள் இயக்க உறுப்பினர்களை இனம் காட்டுவதோடு, தான் முன்னர் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்தபோது உதவியவர்களையும் அடையாளம் காட்டினாராம்.

இவரைத் தீர்த்துக்கட்ட திட்டமிட்ட புலிகள் அதற்காக நான்குபேர் கொண்ட பிஸ்டல் குழுவிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். இவரது நடமாட்டத்தைப் பற்றிய தகவல் திரட்டிய பிஸ்டல் குழு, 19.06.97 அன்று காலை 10 மணியளவில் பச்சனூரில்வைத்து சுட்டுக்கொன்றது.

புதிதாகச் சேர்ந்த உறுப்பினர்கள் நால்வருக்கே புலிகள் இப்பணியை பரீட்சார்த்தமாக வழங்கியிருந்தனர். பாடசாலை சீருடையில் வந்தே பிஸ்டல் குழுவினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். பாஸ்கரன் அருகில் சென்ற பிஸ்டல் குழு உறுப்பினர் அவரை முதலில் தலையில் சுட்டதாகத் தெரிகிறது. சூடுபட்டு பாஸ்கரன் விழுந்ததும் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் தப்பிச்செல்கையில், எதிரே வந்த இராணுவவீரர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். பிஸ்டல் குழுவினரும் திருப்பிச் சுட்டனர். இராணுவவீரர் சுட்டதில் அந்த பிஸ்டல் குழு உறுப்பினர் கொல்லப்பட்டார். ஏனையோர் தப்பிச் சென்றுவிட்டனர். அவரிடமிருந்து ஒரு பிஸ்டல், கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டன.

மூதூர் மற்றும் திருமலையில் மேலும் சிலருக்கும் புலிகளின் பிஸ்டல் குழு குறிவைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.


## தெய்வீக மருத்துவம்

**சர்வதேச சமூக தெய்வீக சேவை**

வாழ்க்கையில் ஏற்படும் காதல் (ஆண்-பெண்) பிரச்சினை, திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடை, தீய சக்திகளின் தொல்லை, கிரக தோஷம், வேண்டியவர்களை சேர்க்க, வேண்டாதவர்களை அகற்ற- இது போன்ற தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் எதுவானாலும் உடனுக்குடன் நிவர்த்தியளிக்கப்படும். கம்பியூட்டர் வடிவமைப்பில் ஜாதகம், காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப்பலனை அறிந்து கொள்ள-மட்டக்களப்பு பிரபல "பாலுசோதிட"ரை (வைத்தியர்) நேரில் சந்திக்கமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருட்களை தபாலில் (V.P.P) அனுப்பிவைப்போம். விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றது. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

| | |
|---|---|
| பாலு சோதிடர் S.A.M.P. | BALU SOTHIDAR- S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம். | THEYVIGA SAKTHY CENTRE |
| கல்லடி அரசடிநதி வீதி. | BATTICALOA (P.O) |
| மட்டக்களப்பு. | SRI LANKA. |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"

DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE GOVT. Regd. No: HA/04/BT/219

## UNION

**யூனியன் மோட்டிஸ்**
**கதவு பூட்டுக்கள்**

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**1997 G.C.E (A/L) புதிய பாடத்திட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு BRIGHT ன் 10 மாதிரி வினாவிடை நூல்கள் வெளிவந்துவிட்டன**

★ கணக்கீடு ★ பொருளியல் ★ தமிழ்
★ இந்துநாகரிகம் ★ இஸ்லாமிய நாகரிகம்
★ தூயகணிதம் ★ இரசாயனவியல்
★ பிரயோக கணிதம் ★ வணிக புள்ளிவிபரவியல்
★ அரசியல் மூலதத்துவம் (விலை : 197.50)

மாதிரி வினா விடைகளை V.P.P யில் பெற விரும்புவோர் 20/= முத்திரையுடன் தொடர்பு கொள்க

வெளிவரவுள்ளவை
★ தாவரவியல் ★ பௌதிகவியல் ★ இஸ்லாம்

1997 G.C.E (O/L) மாணவர்களுக்கு கடந்த 10 வருடகால வினாவிடை Bright வெளியீடுகள் வெளிவருகின்றன

## 90 DAYS SPOKEN ENGLISH
**POSTAL TUITION**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகு முறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடநூல்கள் யாவும் இருபத்தோராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிடப்பட்டுள்ளன.

**கட்டணம்** இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே.

வெளிநாட்டு மாணவர்களுக்கு US$ 25.00

பாடக்கட்டணத்தை The Director - BBC எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக்கூடியதாகக் காசுக் கட்டளையுடன் உங்கள் பெயர், விலாசத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, First Floor, P. O. Box - 162,
Colombo Central Super Market Complex,
Colombo - 11. T.P. 434770, 074-718592

## பழுது பார்த்தல்

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**

40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank
அருகாமையில்)
T.P-594492

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

# விளம்பரப் பகுதி

**உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**
+
எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் சரி உடனே என்னை சந்தியுங்கள்



**K. சிவசுப்பிரமணியம்**
M.I.H. Ind. S.M.P.

எவ்வளவு நாள்பட்ட வியாதியானாலும் சரி. காலதாமதம் செய்யாமல் கீழ்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடிதம் மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா. க்ஷயம். இளைப்பு. பீனிசம். தல்லவலி. மலேரியா. கண்டமாலை. சொறி. சிரங்கு. பாண்டு. ரோகை. காக்கை வலிப்பு. வாதம். நீரிழிவு. மூலரோகங்கள். இருதய நோய்கள். இடுப்புவலி. நெஞ்சு எரிவு. குடல்வாய்வு. நரம்புத் தளர்ச்சி. விரியக் குறைவு. இரத்தமின்மை. சொப்பன ஸ்கலிதம். பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு. மாசம் முன். பின் காணுதல். சூதகவலி. பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை, 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை வைத்தியரை சந்திக்கலாம்.

**முருகானந்தா வைத்தியசாலை**

No. G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கெட், (நிலமாடி) மீன்கடை மேல், கொழும்பு - 11.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ் ரே ரிப் போர்ட்

# 'செய் அல்லது செத்துமடி'

## திட்டம் ஒன்று-கட்டம் இரண்டு!

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை மே 13ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

'ஜயசிக்குறுய்' படையினருக்கு எதிரான இரு பெரும் அழித்தொழிப்பு சமர்களுக்கு புலிகளும் செவ்வாய்க்கிழமைகளைத்தான் தெரிவுசெய்திருந்தனர்.

**'வெற்றி நிச்சயம்' யாருக்கு என்பதில் மட்டுமல்ல, செவ்வாய்க்கிழமை யாருக்கு அதிஷ்ட நாள் என்பதிலும் கேள்வி எழுந்திருக்கிறது.**

ஜோதிடர் ஒருவர் குறித்துக் கொடுத்த நாளில்தான் படை நடவடிக்கை ஆரம்பமானதாக கூறப்பட்டது. அது உண்மையெனில் குறிப்பிட்ட ஜோதிடர் தற்போது தலைமறைவாகியிருக்கவும் கூடும்.

வன்னியில் படை நடவடிக்கைக்கு எதிரான அழித்தொழிப்பு யுத்தம் அனைத்துக்கும் 'செய் அல்லது செத்துமடி' என்றே பிரபாகரன் பெயர் சூட்டியிருக்கிறார். கட்டம் கட்டமாக 'செய் அல்லது செத்துமடி' தொடரும் என்று தகவல்.

**இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் சாத்வீகப் போராட்டம் நடத்திய அண்ணல் காந்தி சொன்னது 'செய் அல்லது செத்துமடி.'**

காந்தி கைத்தடியுடனும் கதருடனும் நின்று சொன்னதை, துப்பாக்கியுடனும் சீருடையுடனும் நின்று தன் அணிகளுக்கு சொல்லியனுப்புகிறார் பிரபாகரன்.

தாண்டிக்குள ஊடறுப்புச் சமர் 'செய் அல்லது செத்துமடி' கட்டம் 1, ஓமந்தை, பெரியமடு ஊடறுப்புச்சமர் 'செய் அல்லது செத்துமடி' கட்டம் 2.

"வன்னிக் களத்தை படையினருக்கு போர்க்கிடங்களை மாற்றிக் காட்டுவோம்" என்று புலிகள் கூறுகின்றனர்.

அதன் அடிப்படையில் உக்கிரமான சமர்களை கட்டம் கட்டமாக நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளதையே 'செய் அல்லது செத்துமடி' என்ற பெயர் சூட்டியுள்ளமை உணர்த்துகிறது.

ஒரு யுத்தமானது பல சமர்களைக் கொண்டது. ஒரு சமர் பல சண்டைகளை உள்ளடக்கியது.

**வன்னியில் புலிகள் திட்டமிட்டுள்ள அழித்தொழிப்பு யுத்தத்தின் பெயர் 'செய் அல்லது செத்துமடி'. இதுவரை இரண்டு சமர்கள் நடத்தப்பட்டுள்ளன. அவை கட்டம் ஒன்று, கட்டம் இரண்டு என குறிப்பிடப்படுகின்றன.**

ஒரு யுத்தத்தில் வெற்றியடைய மூல உபாயம், தந்திரோபாயம் என்பவை தேவையாகும்.

மூல உபாயம் என்பது யுத்தத்தின் முழுமையான இறுதியான நோக்கம்.

தந்திரோபாயம் என்பது இறுதியான நோக்கத்தை அடைய கட்டம் கட்டமாக வகுக்கப்படும் உத்திகள்.

வன்னியில் புலிகளின் அழித்தொழிப்பு யுத்தத்தின் மூல உபாயம் படையினரின் ஆட்பலத்தை அழிப்பதும், படைக்கலங்களை அழிப்பதும், முடியுமானவரை படைக்கலங்களை கைப்பற்றுதலாகும்.

இதனை ஒரே சமர் மூலமாக புலிகளால் சாதிக்க முடியாது. படையினரின் பலம் புலிகளின் பலத்தைவிட மிக அதிகமாக இருக்கிறது.

**பாரிய படை ஒன்றை எதிர்கொள்ளும் சிறிய படையினராக இருக்கும் புலிகள் தமது மனோபலத்தைச் சார்ந்து நின்று கட்டம் கட்டமாக திட்டமிடப்படும் அதிரடிச் சமர்கள் என்ற தந்திரோபாயங்கள் மூலமே இறுதி நோக்கத்தை அடைய நினைக்கிறார்கள்.**

வன்னியில் மூன்றுவிதமான போர் வகைகளையும் புலிகள் கையாளுகின்றனர்.

1. **தற்காப்பு யுத்தம்.**
2. **தாக்குதல் யுத்தம்.**
3. **அழித்தொழிப்பு யுத்தம்.**

யாழ் குடாநாட்டில் படையினரின் சூரியக்கதிர் நடவடிக்கையின்போது புலிகள் நடத்தியது தற்காப்பு யுத்தம் என்பதற்குள் அடங்குகிறது.

தற்காப்பு என்பது தாக்குதல் மூலம்தான் உறுதியாக்கப்படும். தற்காப்புடன் மட்டும் நிற்கும் அணியானது எதிரி முன்னேறும்போது தன் அழிவைத் தடுக்க பின்வாங்கியே ஆகவேண்டும்.

யாழ் குடாநாட்டில் தற்காப்பு சமரில் ஈடுபட்ட புலிகள் படையினரை எதிர்கொண்டு தாக்குவது உசிதமல்ல என்பதால் களத்தில் இருந்து விலகிச் சென்றனர். அதாவது தாக்குதல் யுத்தத்தில் ஈடுபடவில்லை.

தற்பாதுகாப்பு என்பது முன்னேறும் எதிரியை தடுத்து நிறுத்துவது, தமது அணிகளை இழப்பில் இருந்து பாதுகாப்பது.

தாக்குதல் என்பது எதிரியை பின் வாங்கச் செய்ய தேடிச்சென்று தாக்குதல் நடத்துவது. அல்லது எதிர்கொண்டு மோதி பின்னே தள்ளுவது.

தாக்குதல் காரணமாக எதிரி பின்வாங்கினாலும் அவனது பலம் அப்படியே இருக்கும். எனவே மீண்டும் எதிரி முன்னேறிவரும் அபாயம் இருந்து கொண்டே இருக்கும்.

அந்த அபாயத்தில் இருந்து மீளவேண்டுமானால் எதிரியை அழித்தொழிக்க வேண்டும். அதுதான் அழித்தொழிப்பு யுத்தம்.

**ஆக, தற்காப்பு யுத்தம் தாக்குதல் யுத்தம் இல்லாமல் வெற்றியடையாது. தாக்குதல் யுத்தம் அழித்தொழிப்ப யுத்தம் இன்றி பூரணமாகாது. இந்த மூன்றுக்குமான பலம் இல்லாமல் ஒரு பிரதேசத்தையோ, தளத்தையோ பாதுகாத்து வைத்திருக்க முடியாது.**

இந்த யுத்தவிதி புலிகளுக்கும் பொருந்தும், படையினருக்கும் பொருந்தும்.

படையினர் யாழ் குடாநாட்டை தாக்குதல் யுத்தமான 'சூரியக்கதிர்' மூலம் கைப்பற்றினர். ஆனால் அழித்தொழிப்பு யுத்த கட்டத்துக்குள் பிரவேசிக்க இயலவில்லை. ஏனெனில் புலிகள் தமக்கு சாதகமற்ற சண்டைகளில் இருந்து துரிதமாக விலகிச் செல்வதால் படையினரால் புலிகளை அழிக்க இயலாது.

பின்தொடர்ந்து துரத்தியழிக்க படையினரின் பலம் போதாது. அது மட்டுமல்லாமல் படையினர் நீண்டு பரந்து தொடராக புலிகளை நோக்கிச் சென்றால் திருப்பித் தாக்கும் பலம் புலிகளிடம் இருக்கிறது.

எங்கே நிலைகொண்டிருக்கிறார்கள் என்று கண்ணுக்குத் தெரியாத தமது எதிரிகளை படையினர் அழிப்பதும் சுலபமான காரியமல்ல.

**யாழ் குடாநாட்டில் இருந்து புலிகளை வன்னித் தளத்துக்கு செல்ல வைத்தது மூலம், புலிகளுக்கு சாதகமான ஒரு களத்தில் புலிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு வந்துள்ளனர் படையினர்.**

வவுனியாவில் இருந்து 'ஜயசிக்குறுய்' படையினர் ஓமந்தையை சென்றடைந்தனர். அதன் பின்னர் படையினர் ஒவ்வோர் அடி எடுத்துவைக்கும்போதும் அடர்ந்த காடுகளுக்குள் உறைந்துள்ள புலிகள் நிழல்போல தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வோர் நகர்வையும் மோப்பம் பிடித்துக் கொண்டிருக்கின்றனர்.

தங்களைத் தொடர்வது தங்களுடைய நிழலா, புலிகளின் நிழலா, என்பதைக் கண்டறிய முடியாத களத்தில் 'ஜயசிக்குறுய்' படையினர் கால்வைத்திருக்கின்றனர்.

இதுவரை புலிகள் நடத்தியுள்ள இரண்டு ஊடறுப்பு சமர்கள் வன்னிக் களம் எத்தகையது என்பதையும், தொடரப்போகும் கள விபரீதங்களையும் சுட்டிக்காட்டுவது போல அமைந்துள்ளது.

10.06.97 செவ்வாய்க்கிழமை தாண்டிக்குள ஊடறுப்பு சமர் நடந்து சரியாக 14 நாட்கள் இடைவெளியின் பின்னர் இரண்டாவது ஊடறுப்புச் சமரை புலிகள் நடத்தினார்கள்.

**தாண்டிக்குளம் சமரில் படையினரின் உயிரிழப்பும், படைக்கல அழிவும் ஓமந்தை, பெரியமடு இழப்பைவிட அதிகமாகும்.**

**ஆனால் சண்டை நடைபெற்ற களத்தைப் பொறுத்தவரை தாண்டிக்குளத்தைவிட ஓமந்தை பெரியமடு களம் பாரியதாகும்.**

'ஜயசிக்குறுய்' படையினரின் பின்னரங்கத்தில் நடத்தப்பட்ட ஊடுருவலே தாண்டிக்குள ஊடறுப்பாகும். தாண்டிக்குளத்தில் புலிகள் ஊடறுத்தபோது 'ஜயசிக்குறு' படையினரின் மொத்த பலமும் அங்கிருந்து பத்துக்கட்ட பத்துக்கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஓமந்தையில் குவிந்திருந்தது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை 'புலிகள் வாய்ப்பகுதியில் வந்துதான் அடித்தார்கள்' என்று கூறியிருந்தார்.

**ஆனால் ஓமந்தை, பெரியமடு ஊடறுப்பு 'ஜயசிக்குறுய்' படையினரின் இதயப்பகுதி ஊடாக நடத்தப்பட்டிருக்கிறது. மொத்த படைபலமும் குவிந்திருந்த பகுதியிலேயே உக்கிரமாக ஊடறுத்துப் பாய்ந்தன புலிகளின் அணிகள்.**

**ஊசி ஓட்டைக்குள் ஒட்டகம் நுழைவதைப் போல ஆச்சரியமான, துணிச்சலான ஊடறுப்பாக இத் தாக்குதல் எப்படி நடந்தது?**

24.06.97 செவ்வாய் இரவு வவுனியா நோக்கி புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல் ஆரம்பமானது.

முல்லைத்தீவில் கைப்பற்றிய இரண்டு ஆட்டிலெறிகளில் ஒன்றை வவுனியாவில் மேற்குப் புறமாக உள்ள காட்டுப் பகுதிக்குள் புலிகள் நகர்த்தியுள்ளனர். மற்றொரு ஆட்டிலெறி வவுனியாவில் இருந்து வடகிழக்காக உள்ள முல்லைத்தீவு சார்ந்த பகுதிகள் ஒன்றில் இருக்கிறது.

மேற்குப் புறமாக இருந்தே வவுனியா நோக்கி ஆட்டிலெறித் தாக்குதல் ஆரம்பமானது.

தாண்டிக்குளச் சமரில் ஆட்டிலெறி, மற்றும் மோட்டார் குண்டுகளை ஒரு லொறி நிறைய புலிகள் ஏற்றிச் சென்றனர். அதனால் ஆட்டிலெறி ஷெல்களை சற்று அதிகமாகவே இனிமேல் புலிகள் ஏவமுடியும்.

வவுனியா பாதுகாப்பு நிலைகள்மீது ஷெல்கள் ஏவப்பட்டமை, மற்றொரு ஊடறுப்பு அங்கு நிகழுமோ என்று படையினர் நினைக்க வைக்கும் தந்திரம்தான்.

**புலிகள் ஒரு ஷெல் ஏவிவிட்டால், படையினர் பதிலுக்கு குறைந்தது பத்துச் ஷெல் அடிப்பர். படையினர் அடித்து சற்று ஓய புலிகளிடமிருந்து மீண்டும் ஷெல் வந்துவிழும். பதிலுக்கு அந்தத் திசை நோக்கி படையினர் சரமாரியாக ஷெல் ஏவுவர்.**

**24.06.97 அன்று புலிகளின் ஷெல்லடிக்கு பதிலாக படையினர் ஒரு நிமிடத்தில் குறைந்தது 5 ஷெல்களை ஏவியதாக ஒரு தகவல் கூறுகிறது. மொத்தமாக 1500 ஷெல்கள்வரை வவுனியாவில் இருந்து வவுனியா மேற்கு நோக்கி ஏவப்பட்டதாக கணிக்கப்படுகிறது.**

இந்த ஷெல் யுத்தத்தில் கவனம் திசைதிரும்பிக் கொண்டிருக்கையில், புலிகளின் தாக்குதல் அணிகள் ஓமந்தை-பெரியமடு ஊடறுப்புக்கான ஆரம்ப நிலையை சம்பித்து விட்டன.


ஆரம்ப நிலையை சம்பித்த அணியினர் 'சிக்னலுக்காக' காத்திருந்தனர். ஓமந்தைக்கு கிழக்கே நெடுங்கேணியூடாக வந்த புலிகளின் அணி படையினரின் நிலைகளை நோக்கி மோட்டார் தாக்குதல்களை ஆரம்பித்தது. இரவு பதினொரு மணியளவில் இத் தாக்குதல் ஆரம்பமானது.

கிழக்கில் இருந்து தாக்குதல் ஆரம்பமானதும் படையினரும் அத்திசை நோக்கி இழுக்கப்பட்டனர். தொடர்ந்து அப்பக்கம் படையினரை இழுத்து போக்குக் காட்டும் பணியில் கிழக்குப் புற தாக்குதல் தொடர்ந்தது.

அதேநேரம் மேற்குப் புறமிருந்த அணிக்கு ஊடறுக்கும் உத்தரவு கிடைத்தது. கிழக்கு-மேற்கு அணிகளுடன் தொடர்பு கொண்டபடி இருந்த புலிகளின் துணைத்தளபதி பால்ராஜ் கொடுத்த உத்தரவின்படியே மேற்கு அணி ஊடறுப்பை ஆரம்பித்தது.

ஊடறுத்து உள்ளே பாய்ந்த புலிகளின் பலர் இராணுவ சீருடையில் இருந்ததால் படையினரால் தங்கள் ஆட்கள் யார் புலிகள் யார் என்று இனம் கண்டு தாக்குவது கஷ்டமாக இருந்தது.

'ஜயசிக்குறுய்' படையினரை ஊடறுத்து புகுந்த புலிகள் தங்களுக்குள் சங்கேத வார்த்தைகளை பரிமாறிக்கொண்டதுடன், வித்தியாசமான நிறத்திலான ஒளிச் சமிக்ஞையைப் பயன்படுத்தினார்கள். அதனால் அவர்களுக்குள் அடையாளக் குழப்பங்கள் ஏற்படவில்லை.




தாக்குதல் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனியான பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அதன்படி படையினர் இரு புறத்தில் இருந்தும் ஒரு சேரமல் தடுத்து நின்றது பிரதான பிரிவு. ஆட்டிலெறி தளத்தை கைப்பற்ற சண்டையிட்டது இன்னொரு பிரிவு. ஆயுதக் கிடங்கை நோக்கி சென்றது மற்றொரு பிரிவு.

அதேநேரம் கிழக்குப் புற அணி 'ஜயசிக் குறுய்' படையினரின் முன்னரங்கம் நோக்கி மோட்டார் ஷெல்களை சரமாரியாக ஏவி அவர்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தது.

இவ்வாறான ஊடறுப்பின்போது படையினருக்கு பாதகமான அம்சங்கள் பின்வருமாறு:

1. புலிகள் யார் தங்கள் ஆட்கள் யார் என்று இனம் காணமுடியாமை. அதனால் பதில் தாக்குதலில் தயக்கம், தாமதம்.
2. பெரும்பாலும் நிலைகளுக்குள் புலிகள் ஊடறுத்து கலந்துவிட்டதால் விமானத் தாக்குதல் நடத்த முடியாது.
3. நீண்டதூர சுடுகலன்களை உபயோகிக்க முடியாமை.
4. படைக்கலங்களை பாதுகாப்பது, பயன்படுத்தித் தாக்குவதா என்ற குழப்பம். **எதிரியிடம் படைக்கலம் செல்லாமல் தடுக்க வேண்டுமானால் அவற்றை அழிக்க வேண்டும். அல்லது நகர்த்த வேண்டும். பயன்படுத்திக் கொண்டிருந்தால் அதனை செய்ய முடியாது.**

சண்டை உக்கிரமானவுடன் ஆட்டிலெறித் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டிலெறிகளின் சுடுகுழாய்களை படையினர் துரிதமாக கழற்றி அப்புறப்படுத்த தொடங்கிவிட்டனர்.

புலிகள் ஆட்டிலெறித் தளத்தை கைப்பற்றியபோது ஒரே ஒரு 120 எம்.எம். ஆட்டிலெறி பீரங்கி மட்டுமே முழுதாக காணப்பட்டது. ஏனைய நான்கு ஆட்டிலெறிகளின் சுடுகுழாய்களை காணவில்லை. அந்த ஆட்டிலெறிகளின் தளத்துடனான காவு வண்டிகள்தான் நின்றன.

உடனடியாக 120 எம்.எம். ஆட்டிலெறியை புலிகளின் அணியொன்று உருட்டிச்சென்று காட்டுப் பகுதிக்குள் மறைத்தது. சுடுகுழல் இல்லாத ஆட்டிலெறி தள காவு வண்டிகளையும் புலிகள் கொண்டு சென்றனர்.

சுடுகுழல் இல்லாமல் புலிகளாலும் அதனை பயன்படுத்த முடியாது. அந்த காவு வண்டிகள் இல்லாமல் படையினர் சுடுகுழலை மட்டும் வைத்தும் எதுவும் செய்ய இயலாது.

**ஒரே ஒரு ஆட்டிலெறிதான் புலிகளுக்கு இலாபம். படையினருக்கு ஐந்து ஆட்டிலெறிகள் நஷ்டம். ஆயினும் அவை முழுமையாக புலிகளிடம் கிடைக்காமல் போனது படையினருக்கு ஒருவகையில் பெருத்த இலாபம் தான்.**

120 எம்.எம்.ஆட்டிலெறி தவிர 80 எம்.எம். மோட்டார்கள் நான்கை புலிகள் கைப்பற்றினார்கள். அவற்றை குறுந்தூர பீரங்கிகள் என்று புலிகள் கூறுவதால், அதனால் அவையும் ஆட்டிலெறிகள் என்று கருதி புலிகள் நான்கு ஆட்டிலெறிகளை கைப்பற்றியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆட்டிலெறி ஷெல்கள் பெருந்தொகையாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், ஆயுதங்களும், ஆயுத தளபாடங்களும் பெருந்தொகையாக கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். இதனை படையினர் மறுத்துள்ளனர்.

'ஒரு டப்ளி காப்' வாகனத்தையும், மற்றும் இரண்டு ட்ராக்டர்களையும் கைப்பற்றிய புலிகள் அவற்றில் ஆயுதங்களையும், ஷெல்களையும் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

சண்டைக் களம் அருகே அடர்ந்த காட்டுப்பகுதி என்பதால் ஆட்டிலெறி பீரங்கியும், ஏனைய ஆயுதங்களும் துரிதமாக அப்புறப்படுத்த முடிந்திருக்கிறது.

செவ்வாய் இரவு ஆரம்பமான சண்டை புதன்கிழமை மதியம்வரை தொடர்ந்தது.

ஆயுதங்களையும், தமது பலியான, காயமடைந்த உறுப்பினர்களை கண்டு பிடித்துக் கொண்டு செல்லவுமே புலிகளின் அணியின் மதியம்வரை தாமதித்தன.

**ஓமந்தை, பெரியமடு ஊடறுப்பு அழித்தொழிப்புச் சமரில் புலிகளின் மகளிர் படையணியே பிரதான பாத்திரம் வகித்தது.**

மகளிர் படையணிக்கு துணையாகவே ஆண்கள் படையினர் சண்டையிட்டது.

இதன்மூலம் புதிய மாற்றம் ஒன்று களத்தில் நிகழ்ந்துள்ளது.

இதுவரை சர்வதேச போர்க் களங்களிலும் மகளிர் படையணியின் போரிடும் ஆண் படையினருக்கு துணைப் படை போலவே செயற்பட்டுவருகின்றனர். அநேகமான சந்தர்ப்பங்களில் மருத்துவ சேவைகளில் ஈடுபடுவதுதான் பெண்கள் படையினரின் பணியாகும். அமெரிக்க இராணுவத்திலும்கூட பெண்கள் படைப்பிரிவு போர்களில் சண்டையிடுவதில்லை.

**சர்வதேச ரீதியிலான அமைப்புக்களில் பெண்கள் இருந்தபோதும் உக்கிரமான சண்டைமுனைகளில் முன்னணிப் பாத்திரம் வகிக்குமளவுக்கு பெரும்பாலவில் இருந்ததும் இல்லை. சண்டை அனுபவம் பெற்றதுமில்லை. நிக்கரகுவாவில் பெண்கள் அணி முன்னணிவகித்தபோதும் இத்தனை பாரிய சமர்கள் கண்டதில்லை. புலிகள் இயக்கத்தில் மட்டுமே சொல்லப் போலவே பெண்கள் அணி தீவிர வளர்ச்சி கண்டு வருகிறது.**

தாண்டிக்குளச் சமரில் படையினர் தரப்பில் 350 பேர்வரை பலியானதாகவும், 300க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கூறின. ஓமந்தை, பெரியமடு சமரில் 75 படைவீரர்கள் பலியானதாகவும், 6 அதிகாரிகளும் அதில் அடங்குவர் என்றும் படையினர் கூறியுள்ளனர். 196 பேர் காயமடைந்தனர் என்றும் கூறுகின்றனர்.

ரி.என்.எல். தொலைக்காட்சி 150 பேருக்கு மேற்பட்ட உடல்கள் களத்தில் அடையாளம் காணப்படாமல் உள்ளதாக தெரிவித்தது. அதனை படையினர் மறுத்திருக்கின்றனர். வவுனியா தகவல்படி ட்ரக்டர்கள் மூலம் கிட்டத்தட்ட 400 பேர் வரை காயமடைந்த படையினர் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது. எப்படிப்பார்த்தாலும் படைத்தரப்பின் உத்தியோக அறிவிப்புப்படியான எண்ணிக்கையைவிட இழப்பு அதிகமிருக்கலாம் என்றே நம்பப்படுகிறது.

புலிகள் தரப்பில் தாண்டிக்குளச் சமரில் 86 பேர் பலியானதாக கூறப்பட்டாலும் நூறுபேர் வரை பலியாகியிருக்கலாம் என்றே தெரிகிறது. ஓமந்தை, பெரியமடு சமரில் புலிகள் இறுதியாக 01.07.97 அறிவித்தலின் பிரகாரம் 96 பேர் பலியாகியுள்ளனர்.

**தாண்டிக்குளச் சமரைவிட பாரிய களம் என்பதால், இழப்புக்கள், மற்றும் ஆட்டிலெறி உட்பட கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் என்பவற்றை மதிப்பிட்டால் ஓமந்தை சமரில் புலிகளின் திறன் ஏறுமுகமாகியுள்ளது. இதன் மூலம் புலிகளின் அணிகள் உளவியல் ரீதியில் பலம் பெற்றுள்ளமை படையினருக்கு பெரும் சாவல்கள் காத்திருப்பதையே உணர்த்துகின்றன.**

இப்போது புலிகளிடம் வன்னியில் மூன்று 120 எம்.எம்.ஆட்டிலெறிகள் உள்ளன. மூன்றுமே படையினரால் புலிகளுக்கு கிடைத்தவைதான். பெருந்தொகையான ஆட்டிலெறி ஷெல்களும் புலிகளிடம் சென்றுள்ளதால் கள நிலவரம் மேலும் கடுமையாகத்தான் மாறும் என்பது தெளிவு.

நாரதர்



**தாண்டிக்குள சண்டை** ஓய்ந்த பின்னர் சீருடையின்றி 30-40 பேர் ஒரு குழுவாக வந்தவையாம். பல நாட்கள் அங்கே- இங்கே அலைந்து வந்ததில் வாடிப்போயிருந்தவையாம். சனத்தைக் கண்டதும் "எங்களைப் பார்க்க சிரிப்பாக இருக்குதோ?" எண்டு கேட்டினமாம். சனம் இல்லை இல்லையென்று தலையாட்டியதாம். சாப்பிடுங்கோ எண்டு சனம் கேட்க, "முகாமில்போயே சாப்பிடுகிறோம்" எண்டு நகருக்குப் போய்ச் சேர்ந்தவையாம்.

**தாண்டிக்குளச் சண்டையில்** அள்ளிய ஷெல்களை ஒரு லொறியில் ஏற்றிச் சென்றனராம் ரெண்டு எழுத்தார். வான் பறவை துரத்திக் குண்டு போட்டதாம். லொறியின் முன்பாகம் டமால். இருந்த இடமே தெரியேல்லை. நல்லவேளை, சாரதி இறங்கி ஓடிப்போட்டார். ஆனால் ஷெல்கள் இருந்த பின்பக்கம் அப்படியே இருந்ததாம். வேறொரு லொறி கொண்டுவந்து எடுத்துச் சென்றவையாம் ரெண்டு எழுத்தார். அதிஷ்டம்தான்.

**திருவான மலையில்** பாட்டுக்கு பாட்டு ஒலிப்பதிவு நடந்தது. தமிழக தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சிகளைப் பார்த்துப்போட்டு நம்நாட்டு குட்டி அறிவிப்பாளர்கள் சிலரும் 'ஹாய்', 'பாய்' எண்டு சொல்லுவதை ஒரு பிடி பிடிச்சுப்போட்டார் அப்துல் ஹமீட். 'வணக்கம்', 'நன்றி' எண்டு சொல்லச் சொல்ல இனிக்கும் தமிழ்வார்த்தைகள் இருக்கும்போது 'ஹாய்' 'பாய்' எண்டு வாய் கோணுவானேன்? புலியைப் பார்த்து பூனை கோடு போட்டால்கூட பரவாயில்லை: எலிகளைப் பார்த்து குட்டி எலிகள் கோடுபோடுவதுதான் சுத்தமாகச் சகிக்கேல்லை. முதலில் தமிழை ஒழுங்காக உச்சரிக்கப் பழகிப்போட்டு பிறகு இங்கிலீசுக்குப் போகலாமல்லோ!

**கிழக்கின்** தனித்துவத் தலைவரின் அணிக்குள்ளும் புகைச்சலாம்.

## அதிரடி அய்யாத்துரை

"தென்கிழக்கு மாகாண முடிவுக்குள் ஏனைய பகுதிகளுக்குள் உள்ள எங்கள் ஆட்களுக்கு என்ன தீர்வு?" எண்டு கேட்கிறாராம் ஹிஸ். சம்பத்தில் ஒரு தமிழ் பத்திரிகைக்கு 'ஹிஸ்' பேட்டி கொடுத்தாராம். பேட்டி அச்சாகும் போதே தலைவருக்கு செய்தி போனதாம். உடனே அவசரம் அவசரமாக அரச பத்திரிகைக்கு அறிக்கை கொடுத்து முன்பக்கத்தில் போடுமாறு செய்தாராம். என்ன நடந்தாலும் 'ரெண்டு எழுத்தாருடன் முரண்படேன்?' என்கிறார் ஹிஸ். ரெண்டு எழுத்தாருடனும் புரிந்துணர்வு. அதிகாரத்தரப்பாருடனும் நெருக்கம். அதனால் 'ஹிஸ்' விடயத்தில் தலைவர் அடக்கித்தான் வாசிக்கவேண்டிக் கிடக்காம்.

**மலைப்பகுதி** தனித்துவத் தலைவருக்கும் அவர் அணியின் முன்னாள் அதிகாரமுடையவரான தேவமான ராஜருக்கும் இடையே சின்னச் சின்ன கசப்புண்டாம். தமிழ்க் கட்சிகளின் முதல் சந்திப்பில் தலைவர் கலந்து கொண்டார். இரண்டாவது சந்திப்பில் தலைவரை தவிர்த்துவிட்டாராம் ராஜர். "வேறு அலுவல் காரணமாக தலைவர் வரவில்லை" என்று கூறப்பட்டதாம். பின்னர் ஒரு கட்சிப் பிரமுகர் தலைவரிடம் "ஏன் ஐயா வரவில்லை கூட்டத்துக்கு?" எண்டு கேட்க, தலைவர், கேட்டாராம்: "என்ன கூட்டம்? யார் நடத்தினது, எங்கே நடந்தது? எனக்குத் தெரியாதே?" பார்த்தியளோ, தலைவர்மாருக்கே அல்வா கொடுக்கத் தொடங்கியாச்சு! தங்களுக்கு மட்டும்தான் 'அல்வா' கொடுக்கத் தெரியும் எண்டு தலைவர்மார் நினைச்சா, சிஷ்யர்மாரும் 'அல்வா' கொடுக்கிறகாலம் வரும்தானே?

**அவனவன் அடிபட்டுச்** சாகிறான். அந்தச் சூட்டில் குளிர் காய்ந்தபடி இருந்துகொண்டு, தாங்கள்தான் தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்க்கும் வழியைக் காட்டுவதாக கூட்டான கட்சியினர் சொல்லத் தொடங்கிப்போட்டினம். "56ல் அந்தத் திட்டம் கொடுத்தனாங்கள். 86 இந்தத் திட்டம் கொடுத்தனாங்கள். 96ல் மற்றொரு திட்டம் மொத்தமாக கட்டி பார்சல் பண்ணிக்கொடுத்தனாங்கள்" எண்ட மாதிரி பத்திரிகைகளில் கட்டுரை எழுதத் தொடங்கியிருக்கினம், கூட்டான கட்சிப் பிரமுகர்கள். அடிபடவும், கஷ்டப்படவும் பலர், அரசியல் பேச சிலர், அந்தச் சிலர்தான் ஹீரோக்கள், மற்றவை ஸீரோக்கள் எண்ட காலம் மலையேறிப் போச்சுதுங்கோ. வடலி வளர்த்தவை இருக்க எங்கேயோ ஒளிச்சிருந்தவை கள்ளுக்கு உரிமை கோருவது மெத்தப் பிழை. எத்தனை பக்கம் ரைப் அடிச்சு திட்டம் கொடுத்தவை எண்டது பிரச்சனையில்லை; எந்தப் பக்கம் நிக்கினம்- எண்டதுதான் பிரச்சனை. பக்கம் பக்கமாக கண்டன அறிக்கை விட்டுக்கொண்டு, அதிகாரத் தரப்பாருடன் அக்கம் பக்கமாக உறவாடுவது மாதிரித்தானே அந்தக் காலத்திலும் சவாரி செய்திருப்பினம்? பொல்லாத சாணக்கியர்கள்தான்! சாணக்கியத்தை சனத்திடம் காட்டுவதுதான் வருத்தமாகக் கிடக்கு.

**"பாதுகாப்பை வாபஸ் பெறுவது** என்றால் பயிற்சியும், ஆயுதமும் தாங்கோ" எண்டு கேட்டிருக்கிறார் திருவானமலை நகர தலைவர். கோரிக்கை நியாயம்தான். ஆனால் எனக்கொரு சந்தேகம்! அப்ப ஒண்டும் இல்லாமல்தான் "மண்டையில் போடுவேன்" எண்டு மிரட்டிக் கொண்டு திரிஞ்சவரோ? வெறும் கையால் முழம் போட்டிருக்கிறார் அண்ணாச்சி. ஆகவே அண்ணாச்சியை 'சூப்பர் டுப்பர்' எண்டு அழைப்போமாக!

**கவிதை** என்றும் சொல்லலாம், பொன் மொழி என்றும் புகழலாம். எழுதியவர் வி.ரமாபுனிதன்.

**ஆரம்பம்**

'வெற்றியில் கர்வம்—மீண்டும்
தோற்றலின் ஆரம்பம்—கல்வி
கற்றலில் கர்வம்—மடமை
முற்றுதலின் ஆரம்பம்—செல்வம்
பெற்றலில் கர்வம்—வளமை
வற்றுதலின் ஆரம்பம்!"



படிப்பகம்

www.padippakam.com

அ ர சி ய ல் தொ ட ர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அ ற் பு த ன் எ ழு து வ து

137

# பாதுகாப்புச் சட்டமும் சிறையில் புலிகளும்!

## முயற்சிகள் தோல்வி

தமிழ் நாட்டில் ஜானகி ராமச்சந்திரன் தலைமையிலான மாநில அரசு கலைக்கப்பட்ட பின்னர் கவர்ணர் ஆட்சி நடைபெற்றது. கவர்ணராக இருந்தவர் அலைக்சாண்டர்.

அதுவரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த கிட்டுவையும், புலிகள் இயக்க உறுப்பினர்களையும் தேசியப் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் கைது செய்து சிறைவைத்தனர்.

கிட்டு மூலமாக பிரபாகரனை சமரசப் பேச்சுக்கு கொண்டுவருவதற்கு இந்திய உளவுப் பிரிவான 'றோ' மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்ததும் கிட்டு கைது செய்யப்பட்டதற்கு பிரதான காரணமாகும்.

யார் மூலமாக முயற்சித்தாலும் பிரபாகரன் தன் முடிவில் இருந்து மாறமாட்டார் என்பதை இந்திய அரசு விளங்கிக் கொண்டது.

புலிகள் மூலமாக அழுத்தம் கொடுத்து ஜே.ஆரை பேச்சு மேசைக்கு கொண்டுவரலாம். இந்தியாவை பகைத்து தாக்குப்பிடிக்க முடியாது என்று உணர்த்தலாம் என்ற தந்திரத்தில் இந்திய அரசு வெற்றி பெற்றது.

அதே தந்திரத்தை பிரபாகரன்மீது பயன்படுத்தியபோது இந்திய அரசு தோல்வியே கண்டது.

அமைதிப்படை நடவடிக்கைகளின் அழுத்தம், ஏனைய போராளிக் குழுக்களின் நெருக்குதல்கள் காரணமாக பிரபாகரன் இந்தியாவுடன் சமரசத்தை நாடி வந்தே தீருவார் என்று இந்திய அரசு நினைத்தது. இந்திய உளவுப்பிரிவான 'றோ' அதிகாரிகளும் நம்பினர்.

பிரபாகரன் சமரச முயற்சிக்கு முன் வருவாரானால், அவருக்கும் இந்திய மத்திய அரசுக்கும் இடையில் தொடர்பாளராக இருப்பதற்காகவே கிட்டுவை வீட்டுக் காவலிலும் கௌரவமாக நடத்தி வந்தனர்.

இன்னொரு விடயமும் இருக்கிறது: இந்திய அரசின் நலன் என்பதில் ஒத்த கருத்து இருந்தபோதும் இந்திய அரசின் உளவுப்பிரிவுகள் மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகளுக்கிடையே போட்டிகளும், பொறாமைகளும் பூசல்களும் இருந்தன.

இந்திய இராணுவத்திற்கான உளவுப் பிரிவு 'றோ' சொல்வதை நம்புவதில்லை. 'றோ' இயக்கங்களை கையாண்டவிதம் சரியில்லை என்று இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் குறைசொல்வர். இந்திய மத்திய உளவுப்பிரிவு 'றோ' சொல்வதும் பிழை. இராணுவ உளவுப் பிரிவு சொல்வதும் பிழை தமக்கு கிடைத்த தகவலே சரியென்று கூறிக்கொண்டிருக்கும்.

இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசு தெளிவான முடிவுகளை எடுக்கத்தவறியமைக்கு இப் போட்டி பூசல்களும் ஒரு காரணம் என்று கூறலாம்.

பிரபாகரனை சமரசத்திற்கு கொண்டு வருவது யார் என்பதிலும் இந்திய உளவு அமைப்புகளுக்குள் போட்டா போட்டி இருந்தது.

எல்லோருடைய கணிப்பையும் பொய்யாக்கிய பிரபாகரன் அழுத்தத்தின் மத்தியிலான பேச்சுவார்த்தை சரணடைவுக்கு சமம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நின்றதுடன், அழுத்தங்களை உடைக்கும் நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்தினார்.

இறுதியில் கிட்டுமீதும் நம்பிக்கையிழந்த நிலையில் அவரைக் கைதுசெய்யும் முடிவை எடுத்தது இந்திய அரசு.

## சிறைக்குள் போராட்டம்

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களை விசாரணையின்றி ஒருவருடகாலத்திற்கு தடுத்து வைத்திருக்க முடியும்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் இருப்பவர்களுக்கு பால், இறைச்சிக்கறி, கடலை, போன்ற சத்தான உணவுகள் வழங்கப்படவேண்டும். சாதாரண சட்டங்களின்கீழ் சிறையில் இருப்பவர்களுக்கு அவ்வாறு வழங்கப்படுவதில்லை.

சட்டப்படி வழங்கவேண்டிய உணவு கைதிகளுக்கு கிடைக்குமா, கிடைக்காதா என்பது குறிப்பிட்ட சிறை நிர்வாகத்தைப் பொறுத்தது.

சென்னை மத்திய சிறையில் அப்போதிருந்த நிர்வாகத்தினர் கைதிகளுக்கான உணவுப்பொருட்களில் பாதியை வெளியே விற்றுவிடுவார்கள்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் இருக்கும் ஒருவருக்கு சட்டப்படி வழங்கவேண்டிய சத்துணவில் பாதிகூட வழங்கப்படுவது சந்தேகம்தான். வாரத்தில் மூன்றுநாள் இறைச்சி கொடுக்க வேண்டும் என்றால் இரண்டுநாள் கொடுப்பார்கள். அதுவும் அளவு குறைவாக இருக்கும். பாலில் தண்ணீரைக் கலந்துவிடுவார்கள்.

சிறை நிர்வாகத்தின் ஊழலைக் கண்டிக்க சாதாரண ஆட்கள் பயப்படுவார்கள். வேறு வழிகளில் பழிவாங்கப்படலாம் என்று நினைத்து அனுசரித்துப் போய்விடுவார்கள்.

புலிகள் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டபோதும் சென்னை மத்திய சிறையினர் தமது வழக்கமான பாணியிலேயே நடந்துகொள்ள முற்பட்டனர்.

'எங்களை மரியாதையாக நடத்து, இல்லாவிட்டால் நாடுகடத்து. எங்களுக்கென்று சட்டப்படி வழங்கவேண்டிய உணவு அளவு, தரம் என்பன மாறாமல் தரப்படவேண்டும்' என்று புலிகள் பிரச்சனை கிளப்பினார்கள்.

## சிறைநிர்வாகம் பணிந்தது

முதன்முதலில் சென்னை மத்திய சிறையில் தண்ணி கலக்காத பால் வழங்கப்பட்டது புலிகளுக்குத்தான்.

சிறைக்குள் தனியான ஒரு தொகுதியில்



கிட்டு உட்பட புலிகள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

சிறை அதிகாரிகளும் புலிகளை கௌரவமாகவே நடத்தினார்கள்.

சிறையில் உள்ள கைதிகளில் ஒருவர் பலியானாலோ, அன்றி தப்பிச் சென்றாலோ சிறையின் மேலதிகாரிகளின் பதவிக்குத்தான் ஆபத்து. புலிகளிடம் சயனைட் இருக்கலாம் என்று சிறை அதிகாரிகளுக்கு சந்தேகம். அதனால் புலிகளிடம் முரட்டுத்தனமாக நடக்கப்போக அவர்கள் சயனைட் கடித்து பலியாகிவிட்டால் என்ன செய்வது என்றும் அதிகாரிகளுக்கு ஒரு பயம்.

அதனால் புலிகள் சிறையில் உள்ளவரை அவர்களுக்கும் பிரச்சனை கொடுக்காமல், தமக்கும் பிரச்சனையில்லாமல் நடந்து கொண்டனர் சிறை அதிகாரிகள்.

சகோதர உணர்வுடன் நடந்து கொண்ட சிறைக்காவலர்களும் இருந்தனர். ஆனால் மேலதிகாரிகள் பலருக்கு தம் உத்தியோகம் தொடர்பான கவலைதான் பிரதானம்.

## கண்டனங்கள்

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இருந்த புலிகள் அமைப்பினர் கைது செய்யப்பட்டதை தமிழக அரசியல் கட்சிகள் காட்டமாக கண்டித்தன.

காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிய சிவாஜிகணேசன் அப்போது தனிக் கட்சி தொடங்கி இருந்தார். தமிழக முன்னேற்ற முன்னணி என்பது அதன்பெயர்.

தமிழக முன்னேற்ற முன்னணி சார்பாக சிவாஜி கணேசன் விடுத்த செய்தி இது:

இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் எண்ணற்றவகையில் தியாகத் தழும்புகளை தாங்கியுள்ள விடுதலைப் புலிகளை இந்திய அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தியாவில் உள்ள சட்டங்களுக்கு எதிராகவோ, இந்திய நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் முரணாக அவர்கள் நடந்து கொள்ளாதபோது, விசாரணை இன்றி அவர்களை தடுப்புக் காவலுக்குள் அனுப்புவது அநீதியானது.

குற்றமற்றவர்களை விடுவிக்க தயக்கமின்றியும், தாமதமின்றியும் இந்திய அரசாங்கம் முன்வரவில்லையென்றால் அதன் அரசியல் விளைவுகளுக்கு மத்திய அரசாங்கமே பொறுப்பாகும்" இது சிவாஜி கணேசன் விடுத்த அறிக்கை.

## சிவாஜியும் பிரபாவும்

சிவாஜி கணேசன் பற்றியும் இந்த இடத்தில் சில சுவாரசியமான விடயங்களை கூறவேண்டும்.

சிவாஜி கணேசன் நடிப்புலகில் ஒரு பல்கலைக்கழகம் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அற்புதமான நடிகர். இன்னும் பல தலை முறை நடிகர்களிடம் அவரின் தாக்கம் இருந்து கொண்டே இருக்கும்.

ஆனால் சிவாஜிகணேசன் ஆழம் தெரியாமல் கால்விட்ட ஒரே ஒரு துறை அரசியல்.

தனது சொந்த வருமானத்தில் பிறருக்கும் தாராளமாகக் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.

சிவாஜி கணேசன் அப்படியல்ல. லேசில் யாருக்கும் கொடுக்கவேமாட்டார். அரசியலில் கூட சிவாஜிகணேசன் தன் சொந்தப் பணத்தை அதிகம் செலவிட்டதில்லை.

ஈழப் போராளிகள் அமைப்புக்கள் பல சிவாஜி கணேசனிடம் நிதிதிரட்ட சென்றதுண்டு. அவரையே சந்திக்க முடியாமல் திரும்பியதுதான் பலன்.

எம்.ஜி.ஆர் தவிர்ந்த ஏனைய நடிகர்களில் விஜயகாந்த் போராளிகளுக்கு தனது சொந்தப் பணத்தில் நிதி கொடுக்கத் தயங்குவதில்லை.

சிறந்த நடிகரான கமலஹாசனிடம் ஒரு தடவை நிதி கேட்டுச் சென்றனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினர். அப்போது நிதி திரட்டல் பணிகளுக்கு டேவிற்சன் பொறுப்பாக இருந்தார்.

வீட்டுக்குள்கூட அழைக்காமல் துரத்தாத குறையாக அனுப்பிவிட்டார் கமல். இது நடந்தது 1985ல்.

கமல் நடித்து பாலசந்தர் இயக்கிய 'புன்னகை மன்னன்' படத்திலும் ஈழப் போராளிகள் என்றால் ஒழுக்கமில்லாதவர்கள் என்பதுபோல சித்தரிக்கப்பட்டது. அப்படத்தில் இலங்கைத் தமிழரான சிலோன் விஜேந்திரன் என்பவரும் நடித்ததுதான் பெரிய கொடுமை. 'புன்னகை மன்னன்' படத்தில் போராளிகளை கேவலப்படுத்தும் காட்சிக்கு எதிராக தமிழகத்தில் கண்டனக் குரல்கள் எழுந்தன. பாலச்சந்தர் வருத்தம் தெரிவித்தார். கமல் அதைக் கண்டு கொள்ளவேயில்லை.

சிவாஜி கணேசனுக்கு நடிப்புத் தவிர்ந்த ஏனைய துறைகளில் உள்ள ஈடுபாடும் குறைவானதே. இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றியும் அவர் போதியளவு அறிந் திருக்கவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக தமிழக முன்னேற்ற முன்னணி ஒரு பத்திரிகையாளர் மாநாடு நடத்தியது.

இந்திரா காந்திமீது சிவாஜிக்கு அபார மரியாதை இருந்தது. ராஜீவ் தன்னை மதிப்பதில்லை என்பதால் அவர்மீது கடும் கோபம். அதனால் 'என் தமிழ் என் மக்கள்' என்றொரு படமே நடித்து ராஜீவை மறைமுகமாக வெளுத்து வாங்கியவர் சிவாஜி.

பத்திரிகையாளர் மாநாட்டிலும் இலங்கைத் தமிழர் பிரச்சனையைவிட ராஜீவை தாக்குவதில்தான் குறியாக இருந்தார் சிவாஜி.

ஒரு கட்டத்தில் இந்தியப் படை பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது 'தமிழர்களைக் கொல்லுகிறார்கள். அதுதான் அவர்கள் போராடுகிறார்கள். புலிகள் நன்றாக சண்டை பிடிக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவருக்கு பிரபாகரன் பெயர் நினைவில் இல்லை. அந்தத் தம்பி.. அவருக்கு என்ன பெயர்? என்று சிவாஜி தடுமாற, அருகிலிருந்த ராஜசேகரன் 'பிரபாகரன்' என்று சொன்னார். "ஆமா பிரபாகரன், அந்தத் தம்பிதான்" என்று முடித்தார் சிவாஜி.

இச் சம்பவத்தை தமிழக சஞ்சிகை ஒன்றும் கேலி செய்திருந்தது. 'ஜுனியர் விகடன்' என்று ஞாபகம்.

இது நடந்து சில வருடங்களின் பின்னர் சிவாஜி கணேசன் தனது கட்சியை கலைத்துவிட்டு ஜனதா தளக் கட்சியில் இணைந்தார்.

அப்போது பிரதமராக இருந்த வி.பி.சிங்கின் கட்சிதான் ஜனதா தளம். தமிழ்நாடு ஜனதா தள தலைவர் சிவாஜிதான்.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், ரமேசும் சிவாஜியை சந்தித்து தமது இயக்கத்தின் கஷ்ட நிலையைக் கூறி நிதியாகவோ அல்லது உணவுப் பொருட்களாகவோ தமது முகாமுக்கு உதவி வழங்குமாறு கேட்டனர்.

அன்புடன் வரவேற்று அக்கறையாக அவர்கள் சொன்னதைக் கேட்டபடி இருந்தார் சிவாஜி கணேசன்.

அவரது முகபாவங்களை கவனித்த இருவருக்கும் 'பெரும் உதவி கிடைக்கப் போகிறது' என்று உள்ளூரச் சந்தோசம்.

எல்லாவற்றையும் கேட்ட சிவாஜி கணேசன் இறுதியாக அவர்களிடம் சொன்னார்; "போராளிகளின் கஷ்டத்தை தீர்க்க வேண்டியது என் கடமையப்பா கடமை! நான் இதனை என் தலைமைக்கு உடனடியாக தெரியப்படுத்துகிறேன். கவலைப்படாமல் போய்வாருங்கள்"

கடைசிவரை உதவி எதுவும் செய்யப்படவேயில்லை.

## சிறையில் விசாரணை

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சிறைவைக்கப்பட்ட புலிகள் அமைப்பினரிடம் தனித்தனியாக விசாரணை நடத்தப்படும்.

புலிகள் அமைப்பின் இரகசியங்கள், செயற்பாடுகள், அவர்களது இராணுவ உத்திகள் தொடர்பாக விசாரிக்கப்படும்.

இந்த விசாரணைமூலம் புலிகளை பாதிப்படையச் செய்யப்போகிறார்கள் என்று தகவல்கள் வெளியாகின.

இப்படியொரு திட்டம் இந்திய உளவுப் பிரிவுகளுக்கு இருந்ததோ இல்லையோ, அப்படி ஒரு திட்டம் இருந்தால் அது நடக்கவே கூடாது என்று நினைத்தனர் தமிழ் நாட்டில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள்.

அத் தகவலை வெளியே பெரிய செய்தியாக்குவது தான் வழி என்று முடிவு செய்தனர்.

ஆகஸ்ட் 19,1988ல் வெளியான திராவிடர் கழக பத்திரிகையின் தலைப்புச் செய்தி இப்படி இருந்தது:

"கொடுமை! வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறார்கள்."

"காவலில் இருக்கும் விடுதலைப் புலிகளிடம் விசாரணையாம்!"

எனினும் அப்படியான பலவந்த விசாரணைகள் எதுவும் சென்னை மத்திய சிறையில் வைத்து மேற்கொள்ளப்படவில்லை.

## வங்கிக் கொள்ளை

தமிழ்நாட்டில் மதுரை வங்கி 1988 ஆகஸ்ட் மாதம் கொள்ளையிடப்பட்டது. 75 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டது.

இக் கொள்ளையை புலிகள் நடத்தி இருக்கலாம். இலங்கையில் இந்தியப்படை முற்றுகையில் உள்ள புலிகள் இயக்கத்தினருக்கு பணம் தேவையென்பதால் மதுரையில் கொள்ளையிட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது.

தீவிர விசாரணையின் பின்னர் கொள்ளையர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு விடுதலை இயக்கம்தான் கொள்ளைக்கு காரணம் என்று தெரியவந்தது. ஆயினும் இக் கொள்ளை நடவடிக்கையில் இலங்கைப் போராளிகள் சிலரும் சம்பந்தப்பட்டிருந்தனர்.

புலிகள் இயக்கத்தில் மட்டக்களப்பு பகுதியில் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்த கருணா உட்பட சிலர் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகிச் சென்றனர்.

ஆயுதங்களை கையாடினால்தான் தண்டனை. விலகுவோர் விலகிச் செல்லலாம். ஏனைய இயக்கங்களிலோ புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளிலோ ஈடுபடக்கூடாது என்பதுதான் புலிகளின் விதி. அதனால் கருணா குழுவினர் விலகிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தனியாக இருந்த இக் குழுவினர் தமிழக தீவிர அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தினர். அத் தொடர்புகள் ஊடாக கருணா குழுவினரும், தமிழ்நாடு விடுதலை இயக்கமும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையே மதுரை வங்கிக் கொள்ளையாகும்.

கொள்ளையிடப்பட்ட நகைகளில் பெருந்தொகையானவை மீட்கப்பட்டன. கைத்துப்பாக்கி, கைக்குண்டுகள் ஆகியனவும் தமிழகப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

## நேரு சிலைக்கு குண்டு

இந்தியப் படைக்கு எதிராக புலிகள் நடத்திய யுத்தம் தமிழக தீவிரவாத அமைப்புக்களிடம் எழுச்சியை ஏற்படுத்தியது.

சென்னையில் கத்திபாரா சந்திப்பில் இருந்த நேரு சிலைக்கு தீவிரவாத அமைப்பொன்று குண்டுவைத்தது. சிலை சேதமாகாவிட்டாலும் நேரு சிலைக்கு குண்டுவைத்தது என்பது பெரிய செய்தியாகப் பேசப்பட்டது.

ராஜீவ் காந்தியால் திறக்கப்பட்ட சிலை அதுவாகும். எம்.ஜி.ஆர். மரணமாகுமுன்பாக கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சியும் அந்தச் சிலை திறப்புவிழா நிகழ்ச்சிதான்.

தொலைக் காட்சி நிலையம் ஒன்றின் முன்பாகவும் குண்டுவைக்கப்பட்டது.

இந்திய மத்திய அரசுக்கு எதிராகவும், இந்திபேசும் தலைமைகளுக்கு எதிராகவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுவரும் எதிர்ப்பைக் காட்டவே நேரு சிலைக்கு குண்டுவைக்கப்பட்டதாக அத் தீவிரவாத இயக்கத்தின் முக்கியஸ்தரான பொழிலன் என்பவர் கூறியிருந்தார்.

எனினும் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டனர்.

## எத்தனைபேர் செத்து மடிந்தாலும்....

இந்தியப் படையை புலிகள் 'வானரப் படை' என்று கேலி செய்தனர்.

இந்தியாவில் இருந்து இராவணனை அழிக்க இராமனுடன் வானரப்படை வந்தது என்று இராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

இராவணன் ஒரு தமிழன். அவனை அழிக்க கட்டுக்கதைகள் கூறிய ஆரியர்கள் அவன் புகழைக் கெடுத்ததோடு, அவனையும் கொன்றனர் என்று திராவிடர் கட்சிகள் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்தன. இராமனின் கொடும்பாவிகளும் தமிழ்நாட்டில் திராவிடர்கழகத்தால் முன்னர் ஒரு காலத்தில் கொளுத்தப்பட்டன.

இந்தியப் படை காலத்தில் புலிகளும் வானரப்படை என்று கேலி செய்தனர்.

காட்டில் இருந்து போராடும் தமது உறுதியைத் தெரிவித்தும், இந்தியப் படையைச் சாடியும் புலிகள் அன்று வெளியிட்ட கவிதை இது:

"எங்கள் தலைவனின்
ஆணையிதுவெனில்
நஞ்சையும் விழுங்கியும் சாவோம்.
நாம் அஞ்சி அடங்கியே ஒயோம்.

ஆயிரம் தோழர்கள்
தீயினுள் போயினர்
ஆயினும் போரது நீளும்-புலி
ஆடும் கொடி நிலம் ஆளும்.
போரிருள் சூழ்ந்திடும்
கானகம் மீதினில்
பாசறை ஆயிரம் தோன்றும்-கரு
பைகளும் ஆயுதம் ஏந்தும்.

மத்தளம் பேரிகை
கொட்டும் புலிப்படை
மாபெரும் வெற்றிகள் சூடும்-வந்த
வானரக் கூட்டங்கள் ஒடும்!"

இந்தியப் படைக்கு எதிராக போரிட்டே தீருவது என்று புலிகள் செய்திருந்த முடிவு பலவீனமாகவில்லை, பலம்பெற்று வருகிறது என்பது உறுதியானது.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உட்பட ஏனைய இயக்கங்கள் புலிகளின் கதை முடிந்தது என்றே கருதின.

'தனது கடைசி வரலாற்றை பிரபாகரன் தன் கையால் எழுதி முடிக்க ஆயத்தமாகிவிட்டார்' என்று நினைத்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கிழக்கில் மட்டுமே போட்டி ஏற்பட்டது. வடக்கில் போட்டியே கிடையாது.

எதிர்த்து யாரும் போட்டியிடவில்லை என்பதால் வடக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வேடிக்கை என்னவென்றால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டோரின் பெயர்கள் மக்களுக்குக்கூட உடனடியாக தெரியப்படுத்தப்படவில்லை.

அது மட்டுமா?

போட்டியின்றி வெற்றிபெறுவதற்காக செய்த முயற்சிகள், நடந்த நாடகங்கள் எத்தனை? அதில் சுவாரசியமான சிலவற்றை மட்டும் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தமிழக சஞ்சிகை 'ராணி' ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தை கண்டித்து 1988 இல் வெளியிட்ட விமர்சனம் இது.



படிப்பகம்

www.padippakam.com

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டமும் பலத்த தாக்குதலுக்குள்ளாகியது.

தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தைவரை ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் இடம்பெற்றிருந்தது.

ஓமந்தைவரை சென்ற படையினர் தம்மைப்பலப்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பிக்க எத்தனித்த தருணத்தில் 'செய் அல்லது செத்துமடி' நடவடிக்கைமூலம் புலிகள் தாண்டிக்குளம் மீது பெருந்தாக்குதலைத் தொடுத்திருந்தனர்.

இதனால் படையினர் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டதுடன் செய்வதறியாத நிலைக்கும் படையினரை அத்தாக்குதல் உட்படுத்தியிருந்தது.

வன்னி வனாந்தரங்கள் பெரும் மரணவலையையே படையினரை நோக்கி வீசியிருப்பதைக் காணமுடிகின்றது.

ஊடுருவ ஆரம்பித்துள்ள படையினரை மேலும் பலவீனப்படுத்தி, இலங்கை இராணுவத்தையே கேள்விக்குறியாக்குவதாகவே புலிகளின் வன்னித்தாக்குதல்கள் அமைந்துள்ளன.

இருந்தபோதிலும் "கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடையிலான தரைவழிப்பாதையைத் திறக்கும் வரை யுத்தம் தொடரும்" என்று பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை சூளுரைத்துள்ளார்.

யுத்தத்தை முழுமூச்சுடன் நடத்தத்துடிக்கும் ஆட்சியாளர்களின் புலிகளை முற்றிலுமாகக் களையெடுப்பது என்ற ரீதியிலேயே அரசபடையினர் இயங்கத்தொடங்கினர். அதன் பலாபலனையே அவர்கள் தற்போது அணு, அணுவாக அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.

எனவே வடக்கே 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையில் பெற்றது நிரந்தர வெற்றியல்ல, என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையயடுத்து படையினர்மீது வடக்கிலும், கிழக்கிலும் சிறிதும்

## அலசுவது- இராஜதந்திரி

தீர்க்கப்படவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கப்பட்டு வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று எட்டப்படவேண்டுமென்பதையே சர்வதேச சமூகம் இடையறாது

குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் பேச்சு நடத்துவதாகவும், இது விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளும் இணக்கப்பாடொன்றை எட்டுவதற்கு முன்வரவேண்டும் என்று

# இராணுவ அழுத்தங்களை கேள்விக்குறியாக்கும் வன்னி ஊடறுப்பு தாக்குதல்கள்!

குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் அரசியல் கட்சிகளின் இணக்கப்பாடு கிடைக்கிறதோ இல்லையோ தாம் ஒரு தீர்வை முன்வைக்கப்போவதாக நீதியமைச்சர் கூறியிருந்தார்.

தமிழ்க் கட்சிகள்தான் தீர்வுக்கு தடையாக இருப்பதுபோன்ற ஒரு கருத்தை ஏற்படுத்தி பந்தை அக்கட்சிகளின் கோட்டுக்குள் அடித்துவிடுவதில்தான் ஆளும்தரப்பும், எதிர்த்தரப்பும் அக்கறைகாட்டுகின்றன.

தமிழ்க் கட்சிகளுக்குள் ஆளும் தரப்பினதும், எதிர்த்தரப்பினரதும் காய்நகர்த்தலை எதிர்கொள்வதற்குரிய திட்டமிட்ட அரசியல் தந்திரங்களோ, அன்றி ஆக்கபூர்வமான நகர்வுகளோ இல்லாமையால் பந்து தமது கோட்டுக்குள் வருவதை தடுத்தாட முடியாமல் தடுமாறுகின்றன.

எனவே தமிழ் அரசியல் கட்சிகளின் பலவீனத்தையும், அவற்றினிடையேயான ஒற்றுமையீனங்களையும் அரசும் எதிரணியும் நன்கு அறிந்தே வைத்துள்ளன.

இப்பலவீனத்துக்கு மத்தியில் அரசு கொண்டுவர முயலும் புதிய அரசியலமைப்பு, அதனோடிணைந்த அரசியல்தீர்வு என்பன தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளையும், அடிப்படை நலன்களையும் ஈடேற்றும் விதமாக அமையுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், சிரேஷ்ட



பெரிதுமாகப் புலிகள் நன்கு திட்டமிட்டு நடத்திவரும் தாக்குதல்கள், புலிகளது அசுரபலத்தை நன்கு நிரூபித்துவருகின்றன. அத்துடன் ஒரு யுத்த நிறுத்தத்துக்கு அரசு செல்லவேண்டியதை இடித்துரைப்பதாகவும் புலிகள் தொடுக்கும் தாக்குதல்கள் விளங்குகின்றன.

வன்னியில் நீண்ட யுத்தத்துக்கு களம் அமைத்துள்ள அதேசமயம், வடக்கு-கிழக்கின் ஏனைய பிரதேசங்களில் சிறியளவிலான தாக்குதல்களை புலிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

வலியுறுத்திவருகின்றது.

சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் சர்வதேச சமாதான ஆய்வு நிறுவனம் (STOCKHOLM INTER NATIONAL PEACE RESEARCH INSTITUTE) என்ற அமைப்பு இருக்கின்றது.

இந்த அமைப்பு அண்மையில் ஆய்வு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் கடந்த ஆண்டில் (1996) சர்வதேச ரீதியாக யுத்தங்கள் பலவும் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டிருந்தன என்று தெரிவித்துள்ளது.

1995ம் ஆண்டில் சர்வதேச ரீதியாக 25 இடங்களில் 30 மோதல்கள் இடம்பெற்றன. ஆனால் கடந்த ஆண்டில் (1996) 24 இடங்களில் 27 மோதல்கள் மட்டுமே இடம்பெற்றன.

மோதல்களில் ஈடுபட்டுவருவோர் பெரும்பாலும் அவற்றைத் தவிர்த்து சமாதான அணுகுமுறைகளை மேற்கொள்வதிலேயே ஆர்வங் காட்டுகின்றனர் எனவும் அந்த ஸ்ரோக்ஹோம் ஆய்வு அறிக்கை தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஐரோப்பாவிலும், ஆசியப்பிராந்தியங்களிலும் பெரும்பாலும் புதிய அரசியல் நிலைப்பாடுகள், மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகளுமே வடிவம் பெறும் இத்தருணத்தில், நீண்டகால உள்நாட்டு யுத்தங்களுக்கு சுமுகமான முடிவுகள் எட்டப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது.

# தமிழ் அரசியல் கட்சிகளின் பலவீனத்தைச் சாதகமாக்க முயலும் அரசு!

வன்னிக்காடுகளிலேயே உருவாகி, அக்காடுகளையே நன்கு அளந்து-அறிந்து வைத்திருக்கும் புலிகள், கனகச்சிதமாகவே தமது கெரில்லாத்தாக்குதல்களை மேற்கொண்டுவரக் காணப்படுகின்றனர்.

தாண்டிக்குளம்மீதான 'செய் அல்லது செத்துமடி' என்ற புலிகளின் தாக்குதலிலிருந்து படையினர் தம்மை ஆசுவாசப்படுத்து முன்னரே, அடுத்த தாக்குதலை ஓமந்தைக்கும்

பெரியமடுவுக்கும் இடையே புலிகள் நடத்தி முடித்துள்ளனர்.

பெரியமடு-ஓமந்தை ஊடறுப்பிலும் படையினர் எதிர்பாராத இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கனரக வாகனங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் ஆயுதக் கிடங்கொன்றும் நாசமாக்கப்பட்டு 120 எம்.எம். ஆட்டிலெறிப் பீரங்கியொன்றும் புலிகளினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

எனவே புலிகளை பலவீனப்படுத்துவது என்ற ரீதியில் வன்னிப் பகுதியில்

பிள்ளைகளில் எவராவது யுத்த முனையில் இல்லை. ஏழைக் குடும்பங்களின் பிள்ளைகளே போர் முனையில் பலியாகின்றனர்.

ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்களை யுத்தமுனைகளுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி அவர்களை அங்கு பலிகொடுத்தும், ஊனப்படுத்தவுமே இன்றைய யுத்த முனைப்பு வழிவகுக்கிறது.

கடந்த ஆண்டில் யாழ்குடாநாட்டைக் கைப்பற்றியதையடுத்து அரசு தனது இராணுவ ரீதியான மேலாதிக்கத்தைக் கட்டிக்காக்க முற்பட்டது.

யாழ்குடாநாட்டில் இடம்பெற்ற ஒப்பரேஷன் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையயடுத்து ஆயுதப்படையினர் வடக்கே தமது மேலாதிக்கத்தை நிலை நிறுத்திய நிலையில் புலிகளுடன் அரசியல் பேச்சுக்களுக்கு அரசு சென்றிருக்க முடியும்.

ஆனால் அவ்வாறு செய்வதனைத் தவிர்த்து தப்புக்கணக்குகளைப் போட்டுப்

ஏற்கனவே ஆட்பற்றாக்குறை, கனரக சாதனங்கள், விமானங்கள், கப்பல்களைப்பெறுவதில் எதிர்நோக்கும் நெருக்கடிகள் என்பவற்றால் அரசு பெரும் தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ளது.

இலங்கையிலிருந்து விமானப்படையினருக்கு பயிற்சிவழங்கிவந்த ரஷ்யாவின் உக்ரேயின் பிரதேச விமானிகளும் புலிகள் மேற்கொண்ட சர்வதேச பிரசாரத்தையடுத்து நாடு திரும்பியுள்ளனர்.

சர்வதேச அரங்கை நோக்குகையில் தற்போது பொருளாதார ரீதியான நடவடிக்கைகளுக்கே மிகுந்த

முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறதே தவிர இராணுவ ரீதியான பூசல்கள் பெரிதும் குறைவடைந்துபோயிருக்கக் காணப்படுகின்றன.

இனரீதியான உள்நாட்டுப் பூசல்கள் பலவற்றுக்கும் தீர்வுகாணப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குப் பெருமளவிலான அனுதாபத்தை தன்பால் ஈர்க்கமுடியுமென இலங்கை அரசு எதிர்பார்க்கமுடியாது. இலங்கை இனப்பிரச்சினை அரசியல் ரீதியாகவே

ஆனால் இலங்கையில் இன்றைய உள்நாட்டு யுத்தம் இன்று 14 வருடங்களைக் கடந்துள்ளது. இருந்தபோதிலும் இதனை முடிவுக்குக் கொண்டுவர உருப்படியான அரசியல் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாதிருக்கக் காணப்படுகின்றது.

கடந்த வாரம் பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றிய நீதி, அரசியலமைப்புத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அரசியல் தீர்வுத்திட்டம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அப்போது அவர் அதிகாரப்பரவலாக்கல்

உறுப்பினருமான டிரோன் பெர்னாண்டோ கருத்து வெளியிடுகையில், எத்தகையதொரு இறுதியும், முடிவுமான அரசியல் தீர்வுக்கு புலிகளுடன் நிச்சயம் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டும்," எனக் கூறியுள்ளார். சாக்குப்போக்குக்காக ஐக்கிய தேசியக்கட்சியினர் அவ்வாறு கூறினாலும்கூட அக் கருத்தில் உண்மை உண்டு.

இந்த உண்மையை ஆட்சியாளர்கள் உணராதவரை எந்தவொரு அரசியல் தீர்வும் திண்மை பெறப்போவதில்லை என்பதே உறுதி.

---

# பந்தாட்டமும் தமிழ்க் கட்சிகளின் திண்டாட்டமும்!

'தமிழ்-முஸ்லிம் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை. அவற்றால் ஒன்றுபட்ட முடிவுக்கு வரமுடியவில்லை'

ஆளும் தரப்பும், எதிரணியும் ஒரே குரலில் கூறும் கருத்து அதுதான்.

தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் ஒற்றுமை விடயத்தில் ஏன் இத்தனை அக்கறை?

சோழியன் குடும் சும்மா ஆடாது. இனப் பிரச்சனைத் தீர்வில் ஏற்படும் காலதாமதத்துக்கு காரணம் கூற தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் தலையில் பழியைப் போடுவதைத் தவிர அருமையான உபாயம் வேறொன்றும் இல்லை.

ஆனால் துரதிஷ்டவசமாக எல்லாப் பழியையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு மிகப் பலவீனமான அரசியல் நிலையில் உள்ளன தமிழ்க் கட்சிகள்.

தாங்கள் மேற்கொண்ட சரியான சில முயற்சிகளைக்கூட தமது பிழையான அணுகு முறைகளால் இல்லாதொழிப்பதும் தமிழ்க் கட்சிகள்தான்.

அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்தபின்னர் ஐந்து தமிழ்க் கட்சிகள் கூடி ஆராய்ந்தன. கூட்டணி தனியாக ஆராய்ந்தது.

ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, வாரக் கணக்காக ஆராய்ந்து, ஆராய்ந்து, ஆராய்ந்து ஒரு திருத்த யோசனை ஆவணத்தை தயாரித்தன. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்தன.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அதனை வாங்கி ஒரு ஓரத்தில் போட்டுவிட்டது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் எத்தனையோ ஆராய்ச்சிகள் நடந்தன. தொடர்ந்தன.

ஒரு முறை, ஒரே ஒரு முறைகூட தமிழ்க் கட்சிகள் தயாரித்து முன்வைத்த திருத்த யோசனை எடுக்கப்படவுமில்லை. அதில் என்ன இருக்கிறது என்று பார்க்கப்படவும் இல்லை.

நியாயமாகப் பார்த்தால் தமிழ்க் கட்சிகளுக்கு கோபம் வந்திருக்கவேண்டும். எங்கள் யோசனையை ஆராயாமல், ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் விவாதித்தே காலம் கடத்திக் கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டிருக்க வேண்டும்.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிக்குத்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழு. அங்கே தமிழ்க் கட்சிகளின் யோசனைகள் ஆராயப்படவில்லை என்றால் என்ன அர்த்தம்?

ஆனால் தமிழ்க் கட்சிகளுக்குள்ளேயே தாங்கள் முன்வைத்த யோசனைகளுக்காக வாதாடவும், அவற்றை பிரசாரப்படுத்தவும் தெம்பும் இல்லை. திறனும் இல்லை.

அதனால் தமிழ்க் கட்சிகள் மாற்று யோசனையை முன்வைக்கவேயில்லை என்பது போல்கூட சில விமர்சகர்கள் இக் கட்சிகளை சாடியும் இருந்தனர்.

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல நீதியமைச்சர் பீரிஸ், மற்றும் ஐ.தே.கட்சி எம்.பி டிரோன் பெர்ணாண்டோ ஆகியோர் தமிழ்க் கட்சிகளுக்குள் ஒற்றுமையில்லை. எத்தகைய தீர்வு என்பதில் இணக்கம் இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.



அதனை உடனடியாக மறுத்து, நடந்தது என்ன? தவறு யார் பக்கம் என்று ஒன்றுபட்டுக் கூறக்கூட தமிழ்க்கட்சிகளுக்கு திராணியில்லை என்பது எத்தனை வெட்கக்கேடான விஷயம்.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நின்ற வரலாறுகள் எத்தனையோ உண்டு.

தமிழீழக் கோரிக்கையில் ஒன்றுபட்டு நின்றன. பின்னர் திம்புவில் ஒன்றுபட்டு நின்றன. இலங்கை-இந்திய ஒப்பந்த காலத்தில் புலிகள் தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் அதனை ஏற்றுக்கொண்டன.

அப்போதெல்லாம் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியுமாக இருந்த பெரும்பான்மை இனக் கட்சிகள் அந்த ஒற்றுமையை புகழ்ந்ததும் இல்லை. தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு நிற்கின்றனவே என்று அவை வலியுறுத்திய நிலைப்பாடுகளை ஆதரித்ததும் இல்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நேர்மையீனங்களும், சுயலாப அரசியலுமே இனப்பிரச்சனை வளரவும் காரணமாயின. இன்று யுத்தமாக விசுவரூபம் எடுக்கவும் காரணமாயின. இப்போதும் அவர்கள் ஒன்றும் திருந்தவும் இல்லை, தமது அரசியல் தவறுக்காக வருந்தவும் இல்லை. ஒருவர்மீது ஒருவர் குற்றம் சொல்வதில்தான் குறியாக இருக்கிறார்கள்.

ஆனால் தமிழ்க் கட்சிகளின் பலவீனம் காரணமாக, அரசும், எதிரணியும் தமிழ்க் கட்சிகள் பக்கம் பந்தை அடித்துவிட்டுள்ளன.

இனப் பிரச்சனைத் தீர்வுக்கு தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையின்மையே காரணம் என்று தென்னிலங்கைக் கட்சிகள் கூறுகின்ற நிலை வரலாற்றில் முதல் முறையாக ஏற்பட்டுள்ளது.

இதனைவிட தமிழ் மக்களுக்கு, அவர்களின் அரசியல் நலனுக்கு தமிழ்க் கட்சிகள் செய்யக்கூடிய சேவை வேறொன்றும் கிடையாது. கையெடுத்துக் கும்பிடலாம்.

அதுமட்டுமா? அரசு சொல்வதை உறுதிப்படுத்துவது போல பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பதும் இந்தப் புத்திசாலி தமிழ்க் கட்சிகள்தான்.

'தமிழ்க் கட்சிகள் கூடிப் பேசுகின்றன! இணக்கம் காண முயற்சி'

'எட்டுக் கட்சிகள் மீண்டும் கூடும். இணக்கம் எட்டப்படும் கட்டம் நெருங்குகிறது'

இதெல்லாம் பத்திரிகைச் செய்திகள். தமிழில் மட்டுமல்ல ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் இவர்களே போன் செய்து செய்தி கொடுக்கிறார்கள்.

செய்திகளைப் படிக்கும் ஒருவருக்கு என்ன தோன்றும்?

"அடடே.. மிஸ்டர் நீதியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி சொல்வது உண்மைதான்! இந்த தமிழ்க் கட்சிகளுக்குள்தான் ஏதோ சண்டை. இணக்கத்துக்கு தடை இவைதான்!" என்று தானே நினைப்பர்.

ஆஹா, இதைவிட தமிழ்க் கட்சிகள் அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் வேறெப்படி உதவ முடியும்.

போதாக்குறைக்கு கூட்டணித் தலைவரும் "குழப்பாதீர்கள். உள்ளே அருமையான விஷயங்கள் கிடக்கிறது" என்று கூட்டத்தில் நின்று கூவுகிறார்.

உண்மையில் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனை விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடம் ஒற்றுமை இருக்கிறது.

உதாரணமாக வடக்கு-கிழக்கு ஒரே அரசியல் நிர்வாக அலகு என்பதை சகல தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்கின்றன.

ஆனால், ஒன்றுபட்ட இந்தக் கோரிக்கை தொடர்பாக ஆளும் தரப்போ, எதிர்த்தரப்போ ஒருமித்த முடிவுக்கு வரமுடியவில்லை. அடிப்படைப் பிரச்சனையே அதுதான். இனப் பிரச்சனைத் தீர்வுக்கு அத்திவாரம் போடவே அவற்றால் முடியவில்லை.

இந்நிலையில்தான் பிரித்தாளும் தந்திரமாக, தமிழ்-முஸ்லிம் கட்சிகள் தமக்குள் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று பந்து போட்டது ஐ.தே.கட்சி. ஆளும்தரப்பும் அதனை ஆமோதித்தது.

வடக்கு-கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு என்ன தீர்வு? என்பதுதான் தமிழ்க் கட்சிகளை கேட்கும் கேள்வி.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபட்டு முடிவைக் கூறாமல் இருப்பதால்தான் அரசியல் தீர்வு காணத் தாமதமாகிறது என்று ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் கூறுமானால், அவை முதலில் வடக்கு-கிழக்குக்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் உரித்துடையவர்கள். அவர்களின் பாரம்பரிய தாயகப் பகுதிகளே அவை. எனவே இரு சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் செய்யும் முடிவை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று கூற வேண்டும்.

இல்லை, ஏற்றுக்கொள்ளமுடியாது, நாம் தேசியக் கட்சிகள். சகல மக்களையும் பிரதிநிதித்துவம் செய்பவர்கள். தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் யோசனைகளை பரிசீலித்துத்தான் முடிவு செய்வோம் என்று ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் கூறுமானால், இதோ அவை முன்னால் இரு முடிவுகள் உள்ளன.

1. வடக்கு-கிழக்கு ஒரே நிர்வாக அரசியல் அலகு. அதற்குள் முஸ்லிம்களுக்கு உப அலகு.

2. வடக்கு-கிழக்கு இணைந்த நிர்வாக அரசியல் அலகும், அம்பாறை தொகுதி தவிர்ந்த அம்பாறை மாவட்டத்தில் தென்கிழக்கு மாகாண சபை என்னும் முஸ்லிம் மாகாண சபையும்.

இந்த இரண்டில் தாம் எதனை ஏற்கிறோம் என்பதை ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் சொல்லட்டும்.

இதைவிடுத்து தொடர் பேச்சுக்கள் என்று தமிழ்க் கட்சிகள் ஆரவாரம் செய்வது பந்தை தமது கோட்டுக்குள் தாமே வலிந்து அழைப்பது மாதிரித்தான்.

தமிழ்-முஸ்லிம் கட்சிகள் ஒருமித்த இணக்கம் காணாவிட்டாலும், தமக்கான தேவை என்னவென்பதை சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இதுவரை ஆளும் தரப்போ, எதிர்த்தரப்போ தாம் எத்தகைய தீர்வை விரும்புகிறோம் என்பதை தனியாகவோ, கூட்டாகவோ கூறவில்லை. இந்நிலையில் தமிழ்-முஸ்லிம் கட்சிகளிடம் இணக்கம் இல்லை என்று கூறும் யோக்கியதை அவற்றுக்கு கிடையாது.

இந்த உண்மை வெளியே தெரியாமல் இலக்கற்ற நடைமுறைகள் மூலம் தமிழ் பேசும் தரப்புக் கட்சிகள் கெடுத்துக்கொண்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# பாகம் 02

# கொள்ளை ராணி

மாது சிங்கும்-பரத் சிங்கும் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி பொய்யாக இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று பூலான் நினைத்தாள். துர்க்கையை வேண்டினாள்.

விக்கிரம் மல்லாவுக்கு தாங்க முடியவில்லை. பூலானின் மடியில் முகம் புதைத்து ஒரு குழந்தை மாதிரி அவன் கேவிக்கேவி அழுதுகொண்டிருந்தான். பூலான் அவன் தலையை வருடி ஆறுதல் படுத்தியபோதும், அவள் மனமும் கிடந்து தவித்தது.

தகவல் உண்மையா என்று அறிய வேராவை அனுப்பிவிட்டு, துடிக்கும் இதயத்துடன் இருவரும் காத்திருந்தார்கள். இருவரும் ஒருநாள் முழுக்க சாப்பிடக்கூட இல்லை.

வேரா எத்தகைய செய்தியுடன் திரும்பி வரக்கூடாது என்று பூலானும், மல்லாவும் நினைத்தார்களோ அதற்கு மாறான செய்தியுடன் வந்தபோது இருவருமே இடிந்து போனார்கள். யாரை யார் ஆறுதல் படுத்துவது என்றே தெரியவில்லை.

மல்லாதான் முதலில் மீண்டான். மாது சிங், பரத் சிங் இருவரும் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்பதைத்தான் வேராவிடம் துருவித் துருவிக் கேட்டான் மல்லா.

ஸ்ரீராம்தான் ஏதாவது சதிசெய்து கொன்றிருப்பானோ என்று பூலான் சந்தேகப்பட்டாள். அதே சந்தேகம் மல்லாவுக்கும் இருந்தது.

ஆனால் வேராவின் பதில் அவர்களின் சந்தேகத்துக்கு மாறாக இருந்தது.

மாது சிங்குக்கு குசுமா என்றொரு காதலி இருந்தாள். கொள்ளைக் கோஷ்டியில் சேரமுன்னரே அவளைக் காதலித்தான் மாது சிங்.

குசுமா-சந்தன நிறமும், சுருட்டையான நெடிய கூந்தலும், அழகான பெரிய கண்களும், கட்டுமஸ்தான தோற்றமும் கொண்ட அழகி.

மாது சிங் மீனவர் சமூகத்தைச் சேர்ந்தவன். குசுமா நாவிதர் சமூகத்தைச் சேர்ந்தவள். சாதி வேறுபாடு காதலில் குறுக்கிட்டது.

குசுமாவும் மாதுவும் ஒருநாள் தனிமையில் சந்தித்தனர்.

குசுமாவின் சுருண்ட முடிகளை கோதிவிட்டு அவள் காதோரங்களில் தன் விரல்களால் வருடிக்கொண்டு, குசுமாவின் மென்மையான இதழ்களில் முத்தமிட்டான் மாது சிங். அவன் கைகளில் ஒன்று குசுமாவின் உடலெங்கும் துரித சுதந்திரம் பெற்று அலைந்து கொண்டிருந்தது.

இருவரும் மெல்ல மெல்ல தம்மை மறந்து பிறிதோர் உலகுக்குள் சென்று கொண்டிருந்தபோதுதான், மாது சிங்கின் தலையில் ஊருட்டைக் கட்டையால் அடி விழுந்தது.

தலையைப் பிடித்தபடி திடுக்கிட்டெழுந்த மாது சிங்கும், நெகிழ்ந்திருந்த உடையைச் சரிப்படுத்தியபடியே பதறி எழுந்த குசுமாவும் தம்மைச்சுற்றி நின்றவர்களைக் கண்டதும் பயத்தில் உறைந்து போயினர்.

குசுமாவை அவள் தந்தை தரதரவென்று இழுத்துச் செல்ல, மாது சிங்கை துணி துவைப்பதுபோல அடித்துப் போட்டார்கள். குசுமா வாய்விட்டுக் கதறிக் கொண்டே சென்றாள்.

பொய்யான குற்றம் சாட்டி பொலிசாரின் உதவியுடன் மாது சிங்கை சிறையில் தள்ளினார்கள். மாது சிங் சிறையில் இருந்தபோது குசுமாவை வேறு ஒருவனுக்கு கட்டாயக் கல்யாணம் செய்து வைத்தார்கள்.

சிறையிலிருந்து வெளியேவந்த மாது சிங்கை குசுமாவின் உறவினர்கள் தொந்தரவு செய்தனர். சாதி சொல்லித் தாக்கினார்கள்.

அதன்பின்னர்தான் மாது சிங் மல்லாவுடன் சேர்ந்துகொண்டான். பூனைபோல் இருந்த மாது சிங்கை மல்லா புலிபோல மாற்றினான்.

குசுமாவை அவள் கணவன் கொடுமைப்படுத்துகிறான்; மாது சிங்கின் பெயரைச் சொல்லி தினமும் சித்திரவதை செய்கிறான் என்றெல்லாம் அறிந்த மாது சிங் குசுமாவைச் சென்று சந்தித்தான்.

குசுமா நரகத்தில்தான் வாழ்க்கை நடத்துகிறாள் என்று தெரிந்ததும் துடித்துப்போனான் மாது சிங். மல்லாவிடம் வந்து சொன்னான்.

"குசுமாவை என் சகோதரியாக நினைக்கிறேன். என் சகோதரிக்கு இப்படி ஒரு கொடுமை நடந்தால் என்ன செய்வேனோ, அதையே செய்யப்போகிறேன். நீ போய் குசுமாவை அழைத்துவா. நானும் உன்னோடு வருகிறேன். யார் தடுக்கிறார்கள் பார்க்கலாம்." என்று தைரியம் கொடுத்திருந்தான் மல்லா.

குசுமாவை டில்லிக்கு கூட்டிப் போய் விட்டார்கள். அதனால் மாது சிங்குடன் சென்று குசுமாவை மீட்டு வருவதை ஒத்திப்போட்டிருந்தான் மல்லா.

மாது சிங் அதற்குள் அவசரப்பட்டுச் சென்றிருக்கிறான் என்றால் குசுமாவிடம் இருந்து ஏதோ அவசரமான செய்தி கிடைத்திருக்க வேண்டும் என்று நினைத்தான் மல்லா.

ஒத்திப்போடாமல் அப்போதே மாது சிங்கை கூட்டிப்போய் குசுமாவை மீட்டுவந்திருக்கலாமே என்று நினைக்க நினைக்க தன்மீதே எரிச்சலாக இருந்தது மல்லாவுக்கு. மாது சிங் இழப்பை அவனால் தாங்க முடியவில்லை.

மாது சிங், பரத் சிங் இருவரும் இல்லாத நிலையில் ஸ்ரீராமிடம் செல்வதும் ஆபத்து என்று மல்லா நினைத்தான். அதனால்தான் பாபாவிடம் செல்ல முடிவு செய்தான்.

பாபாவிடம் வெறுங்கையுடன் சென்றால் கௌரவம் இருக்காது. பெரிய கொள்ளை ஒன்றை நடத்திவிட்டு செல்லலாம் என்று மல்லா நினைத்தது பூலானுக்கும் சரியென்றுதான் தோன்றியது.

மல்லா யார் முன்பாகவும் தலைகுனிந்து நிற்கக் கூடாது என்பதே பூலானின் எண்ணம்.



பூலான்

# பூலான்தேவி

51

தருவது ரசிகன்

வேராவையும் அழைத்துக்கொண்டு பூலானும் மல்லாவும் கான்பூரில் இருந்து புறப்பட்டனர். மல்லாவின் சகோதரர் ராம்லால் தயக்கத் தோடு விடைகொடுத்தார். அவர் கண்கள் கலங்கின.

"பூலான், நீதானம்மா இந்த முரட்டுப் பயலை பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். நீ புத்திசாலிப்பெண். நல்லாயிருங்கள்." என் றார் நா தழுதழுக்க ராம்லால்.

"கவலைப்படாதே அண்ணா, பூலான் காளியின் அருள் பெற்றவள். புத்லிபாயின் அவதாரம். எனக்கோ, எங்களுக்கோ ஒரு ஆபத்தும் வராது," என்றான் மல்லா, காத்திருக்கும் ஆபத்தை அறியாமல்.

கான்பூரில் இருந்து புறப்பட்டு ஓரை என்னும் ஊரை அடைந்தனர். அங்கு மல்லாவைக் கண்டதும் ஊரே திரண்டுவந்து உபசரித்தது. பூலானை ஊர்ப்பெண்கள் சுற்றிநின்று பிரமிப்போடு பார்த்தார்கள். சிலர் தொட்டும் பார்க்க பூலானுக்கு வெட்கமாகவும், சிரிப்பாகவும் இருந்தது.

'பூலான்தேவி வந்திருக்கிறாளாம்' என்று செய்தி பரவியதுதான் தாமதம்; ஊரில் மிச்சம் மீதியில்லாமல் எல்லோரும் திரண்டுவந்து விட்டனர்.

மல்லாவைவிட பூலானுக்கே மதிப்பு அதிகமாகிவிட்டது. அதனை மல்லாவும் கவனிக்கவே செய்தான். அதற்காக அவன் பொறாமைப்படவில்லை. பெருமைப்பட்டான்.

அந்த ஊருக்குள் பிரவேசிக்க முன்னரே பூலானை சீருடை அணியச் செய்துவிட்டான் மல்லா.

நீண்டநேரம் அங்கே தாமதிப்பது ஆபத்து. பொலிசாருக்கு யாராவது தகவல் கொடுக்கக்கூடும் என்பதால் புறப்பட ஆயத்தமானார்கள்.

தங்கள் மத்தியில் பூலான் நாலுவார்த்தையாவது பேசவேண்டும். அவள் பேசுவதைக் கேட்க ஊரே விரும்புகிறது என்று சொல்லி வற்புறுத்தினார்கள்.

"ம்.... பேசேன், ரொம்பத்தான் விரும்பிக் கேட்கிறார்கள்," என்றான் மல்லா.

பூலானுக்கு அப்படியொரு பெரும் கூட்டத்தின் முன் பேசுவதற்கே நா எழ மறுத்தது. தொண்டை அடைத்துக் கொண்டது.

"வேண்டாம் பிறிதொருநாள் வந்து பேசுகிறேன்" என்றாள்.

"எங்களுக்காக இப்போதே பேசவேண்டும்" என்று பல குரல்கள் ஒரே சமயத்தில் எழுந்தன.

"தைரியமாகப் பேசு!" என்று ஒத்தூதினான் மல்லா. அவனுக்குப் பூலான் எப்படிப் பேசுகிறாள் என்று பார்க்க ஆசையாக இருந்தது.

ஒரு விதமாக தைரியத்தை வரவழைத்துக் கொண்ட பூலான், தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக்கொண்டாள்.

"எங்களை கொடுமை செய்யும் நாய்களைக் கண்டு நாங்கள் ஓடக்கூடாது. ஓடினோம் என்றால் அந்த நாய்கள் துரத்தோ துரத்தென்று துரத்தத்தான் செய்யும். நின்று திரும்பி அடிக்கவேண்டும். அதற்கு துர்க்கையம்மன் அருளும், துணிச்சலும் வேண்டும். என்னை நீங்கள் துணிச்சல்காரி என்று நினைக்கிறீர்கள் என்றால் அதற்கு முழுக் காரணமும் இவர்தான்!" என்று மல்லாவைச் சுட்டிக் காட்டினாள்.

"இவர் இல்லாமல் நான் இல்லை. கொள்ளைக்காரர்கள் என்று எங்களை தூற்றுகிறார்கள். எங்களை கொள்ளைக்காரர்களாக அலையச் செய்தது யார்? கொள்ளைக்காரர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். பொலிஸ்காரர்களைவிட, கிராம அதிகாரிகளைவிட, ஏழைகளை பிழிந்தெடுக்கும் இந்த கெட்ட கூட்டங்களைவிட கொள்ளைக்காரர்கள் எத்தனை நல்லவர்கள் தெரியுமா? நாங்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டோம். நீங்கள் எங்களை நம்பலாம். ஆனால் எங்களைக் காட்டிக் கொடுப்பவர்களை சும்மா விடமாட்டோம்." பூலானின் பேச்சு சூடேறியது. முதலில் இருந்த தயக்கம் காணாமல் போயிருந்தது.

அத்தனைபேரும் திறந்தவாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஊசி விழுந்தால் கூட கேட்கக்கூடிய அமைதி அங்கு நிலவியது. பூலானின் குரல் மட்டும் அந்த அமைதியை கிழித்து காளியின் குரலாக எழுவதுபோன்ற பிரமையில் இருந்தனர் ஊரவர்கள்.

பூலான் பேசி முடிந்ததும், மல்லா தன் கைகளை உயர்த்தியவாறு, "பூலான் தேவிக்கு ஜே" என்று கத்தினான். மல்லாவைத் தொடர்ந்து கூட்டத்தினரும் அவ்வாறே குரல் எழுப்பினர்.

பூலானுக்கு தான் சற்று அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு பேசிவிட்டோமோ என்பது போல் இருந்தது.

ஓரையைவிட்டு செல்லும் வழியில் மல்லா சீண்டினான் பூலானை:

"பொறாமையாக இருக்கிறது உன்மீது. என்னை யாருமே கண்டுகொள்ளவில்லை பார்த்தாயா?"

பூலான் சட்டென்று அவனை திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கிவிட்டன.

"நீதானே என்னை அவர்களிடம் காட்டிக் கொடுத்தாய்? இல்லாவிட்டால் பூலான் என்று யாருக்குத் தெரியும். என்னை ஏன் பேசச் சொன்னாய்? எல்லாம் செய்தது நீ. நீதான். இப்போது பழி என்மீது. எனக்கு இது வேண்டும்தான்." மளமளவென்று பேசினாள். கண்ணீர் வந்துவிடும்போல தயார் நிலையில் இருந்தது.

"சேச்சே.... சும்மா ஒரு பேச்சுக்கு உன்னைச் சீண்டினேன். என்னைப் பற்றி அப்படியா நினைப்பாய்?"

பூலான் சமாதானமானாள்.

எட்டாவா கிராமத்தின் அருகிலுள்ள காட்டுப்பகுதியில் மல்லாவும், பூலானும் அவர்களுடன் வேராவும் தங்கியிருந்தனர்.

மூவரும்தான் அடுத்த திட்டத்தை செயற்படுத்த வேண்டி இருந்தது. இரண்டே இரண்டு கைத்துப்பாக்கிகள்தான் இருந்தன.

"பலத்திற்கு திட்டமிடுவோம்!" என்றாள் பூலான். மல்லாவோ தன் முன்னைய முடிவில் சிறு மாற்றம் செய்தான்.

ஸ்ரீராமிடம் சென்று தன் ஆட்களை ஆயுதங்களுடன் அழைத்துவர நினைத்தான் மல்லா.

"மறுபடி அங்கேயா? என்ன சதித்திட்டம் போட்டிருக்கிறானோ- வேண்டாம்." என்றாள் பூலான்.

"பயப்படாதே பூலான். ஸ்ரீராமால் ஒன்றும் செய்யமுடியாது. பயப்படாதே!" என்றான் அவள் பயம் நியாயம் என்பதை உணராமல்.

இதற்கிடையே மூவரும் சேர்ந்து லொறி ஒன்றைக் கொள்ளையிட்டனர்.

லொறியில் வந்த வர்த்தகரிடம் இருந்த பணத்தை கொள்ளையிட்டுவிட்டு, அவர்களை கீழே இறக்கிவிட்டு லொறியை கடத்திச் சென்றனர்.

மல்லா லொறியை இலாவகமாகச் செலுத்திச் செல்வதை வியப்போடு பார்த்தாள் பூலான். பார்த்துக்கொண்டே இருந்தாள். அதனால் எதிரே தெருவின் குறுக்கே பொலிசார் வழிமறித்து நிற்பதை அவள் காணவில்லை.

மல்லா கண்டுவிட்டான்.

"பொலிஸ்!" என்றான்.

"ஐயைய்யோ எங்கே...ஆம்...ஆம்.... திருப்பு" என்றாள் பதட்டமாக.

"அது முடியாதே!"

என்றான் மல்லா.

(தொடர்ந்து வரும்)

**கடந்த வாரம்**

விக்கிரம் மல்லாவுக்கு சிகிச்சை செய்த டாக்டருக்கு அவர்கள்மீது சந்தேகம் ஏற்படுகிறது. அதனால் மல்லாவும்-பூலானும் கான்பூருக்குச் செல்கின்றனர். அங்கு ஒரு வீடெடுத்து தங்கி இருக்கின்றனர். அப்போது மல்லாவின் தளபதிகளான மாது சிங்கும், பாரத் சிங்கும் பொலிசாரால் கொல்லப்பட்ட செய்தியை பத்திரிகைகள் மூலம் அறிகின்றனர்.

இனி...

## டைனோசர்களின் படம்
## வந்துவிட்டது 'தி லொஸ்ட் வேல்ட்!'

உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கிய படம் ஜுராசிக் பார்க். இலங்கையிலும் பிரமாதமாக ஓடியது, டைனோசரின் கதை. தொழில் நுட்ப பிரமாண்டம் காரணமாக சிறுசுகள் முதல் பெரிசுகள் வரை பார்த்து மகிழ்ந்தனர்.



'ஜுராசிக் பார்க்' என்று தொப்பிகள், ரீசேர்ட்டுக்கள் உட்பட ஏராளமான பெயரைத் தாங்கிய பொருட்கள் மவுசுடன் விற்பனையாகின.

1993ல் வசூலில் உலக சாதனை ஏற்படுத்திய படம் ஜுராசிக் பார்க்தான்.

இப்போது ஜுராசிக் பார்க்- பாகம் இரண்டு வெளிவந்திருக்கிறது. கடந்த மே 23ம் திகதி திரைக்கு வந்துள்ளது. நம் நாட்டுக்கு எப்போது வருமோ தெரியவில்லை. இப்படத்திற்கு 'தி லொஸ்ட் வேல்ட்' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

திரையிடப்பட்ட இடமெங்கும் பயங்கர வசூல். ஜுராசிக் பார்க் படத்தின் வசூலை 'தி லொஸ்ட் வேல்ட்' (காணமல்போன உலகம்) முறியடிக்கப்போகிறதாம்.

இதில் டைனோசர்கள் கூட்டம் கூட்டமாக நடித்துள்ளன. படம் பார்த்தவர்கள் புல்லரித்துப் போயிருக்கிறார்களாம். அமெரிக்காவில் மட்டும் 600 திரையரங்குகளில் திரையிடப்பட்டிருக் கிறது. நான்கே நாட்களில் இதன் வசூல் எவ்வளவு தெரியுமா? 90.1 மில்லியன் அமெரிக்க டொலர். நம் நாட்டுப் பெறுமதியில் 522கோடியே 58 இலட்சம் ரூபாய்கள். இது வரை இல்லாத சாதனை இது.

அமெரிக்காவில் நான்கு நாட்களில் அதிக வசூல் குவித்த படம் 'மிஷன் இம்போசிபிள்'. அதன் நாலுநாள் வசூல் 56.8 மில்லியன் டொலர். அதனை முறியடித்திருக்கிறது 'தி லொஸ்ட் வேல்ட்'.

இதனையும் 'ஜுராசிக் பார்க்' இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல் பெர்க் தான் இயக்கியுள்ளார்.

'ஜுராசிக் பார்க்' உலக அளவில் சம்பாதித்த பேய்த்தனமான வசூல், 913.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு பெறுமதிப்படி 5295 கோடியே 98 இலட்சம் ரூபாய்கள். இந்தச் சாதனையை 'தி லொஸ்ட் வேல்ட்' உடைத்துப்போடப் போகிறது.

'தி லொஸ்ட் வேல்ட்' வெளியானதை அமெரிக்காவில் விழாபோலவே கொண்டாடுகிறார்கள். கடைகளிலும் டைனோசர் குட்டிப் பொம்மைகளுக்கு செம கிராக்கி. இந்தப் பொம்மைகள் சத்தம் போடும் வகையில் செய்யப்பட்டவை.

## சின்ன இளவரசரின் காதல்

டயானாவின் காதல் லீலைகள் சலிப்பூட்டத் தொடங்கிவிட்டதால், இப்போது டயானாவின் புத்திரர் இளவரசர் வில்லியம் பற்றிய காதல் கதைகள் பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.



பிரபல மொடல் அழகி சின்டி கிராபோர்ட்மீது பைத்தியமாக இருக்கிறார் வில்லியம் என்பது தெரிந்த செய்தி.

14 வயது வில்லியம் 36 வயதான சின்டிமீது பைத்தியமாக இருப்பது டயானாவுக்கு கலக்கத்தை கொடுத்துள்ளது.

சின்டி கிராபோர்ட்டை அடிக்கடி சந்திக்கிறார் வாண்டுப் பையனான இளவரசர் வில்லியம். சின்டிக்கு வேறொரு காதலர் இருக்கிறார். ஆனாலும் இளவரசர் வில்லியமுடன் பொழுதைப் போக்குவதும் சின்டிக்கு ஆனந்தமாம். வில்லியம் சின்னப்பையன், எனது ரசிகர். அதனால்தான் அன்புடன் பழகிக் கொண்டிருக்கிறோம். பத்திரிகைகள் அதற்கு வேறு கோணத்தில் அர்த்தம் கற்பிக்க முனைவது அபத்தம் என்கிறார் சின்டி.

## கடத்தலும்-காரணமும்

இந்தி நடிகை மம்தா குல்கர்னியை கடத்த முயன்றார்களாம் சில இளைஞர்கள். மம்தா கதி கலங்கிப்போய் ஏ.கே.47 துப்பாக்கி கேட்டிருக்கிறார். பொலிசார் மறுத்துவிட்டனர்.



இந்தச் செய்தியின் பின்னணியில் உள்ள விவகாரம் கொஞ்சம் விகாரமானது.

மம்தா இந்திப் படவுலகில் தாராளமான கொள்கையுடைய நடிகைகளில் ஒருவர். பிரபல நடிகர்கள் பலருடன் நெருக்கமாகப் பழகியிருக்கிறார். "அதில் ஒன்றும் தப்பேயில்லை. பலர் இதனை இரகசியமாகச் செய்கிறார்கள். நான் வெளிப்படையாகச் சொல்கிறேன் அவ்வளவுதான்." என்று படு அலட்சியமாகச் சொல்லிவிடுகிறார்.

இந்திப் படத் தயாரிப்பாளர் ஒருவருடன் எல்லைவரை சென்றிருக்கிறார் மம்தா. குறிப்பிட்ட தயாரிப்பாளரும் கரன்சி நோட்டுக்களால் பூஜை செய்திருக்கிறார். மம்தாவுக்கு தயாரிப்பாளரின் தொடர்பு திகட்டிவிட்டது. குட்பை சொல்லிவிட்டார்.

தயாரிப்பாளரோ மம்தாவின்மீது கொண்ட மையலில் இருந்து மீளவில்லை. மம்தாவை அழைத்துப் பார்த்திருக்கிறார். மம்தாவோ மறுத்துக் கொண்டிருந்தாராம்.

தாங்க முடியாத தயாரிப்பாளர் மம்தாவை கடத்திக்கொண்டுவர அடியாட்களை அனுப்பிவைத்தார். அடியாட்களுக்கும் மம்தாமீது பிரியமாம். அதனால் காதும் காது வைத்த மாதிரி அவரைக் கடத்திச் செல்வதற்கு பதிலாக விஷமம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மம்தாவும் அவர்களுக்கு ஒத்துழைப்பது மாதிரி போக்குக் காட்டியபடி நைசாக நழுவிப்போய் பொலிசாருக்கு போன் செய்தாராம். அதனால்தான் காரியம் கெட்டுவிட்டது.

பொலிஸாரிடம் தயாரிப்பாளர் விவகாரத்தை மம்தா சொல்லவேயில்லை. சொன்னால் தயாரிப்பாளாரிடமும் பிடி இருக்கிறதாம். மம்தாவின் மயக்கமான தருணங்களில் வீடியோ எடுத்து வைத்திருப்பதாக மிரட்டியிருக்கிறாராம் தயாரிப்பாளர். அதுதான் மம்தா மூச்.

## காதல் குழப்பம்

அமெரிக்க இராணுவத்தில் சேரும் பெண்களுடன் சில்மிஷம் பண்ணிய ஆண் அதிகாரிகள் பற்றி கடந்த வாரம் செய்தி போட்டிருந்தோம்.



இந்தவாரம் அமெரிக்க விமானப்படை பற்றிய செய்தி. சம்பந்தப்பட்ட சூத்திரதாரி ஆணல்ல. பெண்.

அவரது பெயர் கெல்லி ஃபிளின். சாதாரணப் பெண்ணல்ல. போர் விமானங்களை செலுத்தும் விமானிப் பெண்.

இந்த விமானி என்ன செய்தார் என்றால், ஒரே நேரத்தில் இரண்டு ஆண்களை காதலித்து அல்வா கொடுத்திருக்கிறார். இரண்டு ஆண்களும் குடும்பஸ்தர்கள் என்பதால் அவர்கள் குடும்பங்களுக்குள்ளும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

இந்த விடயம் விமானப் படை தலைமைக்கு தெரிய வந்ததும் போர் விமானியை 'போய்வா மகளே' என்று வேலையைவிட்டு அனுப்பிவிட்டார்கள்.


இப்போது விமானப் படைக்குள் கனல் தெறிக்கும் விவாதம் நடக்கிறதாம். "இதென்ன சாதாரண மனித உணர்ச்சிதானே இதற்காக வேலையைவிட்டு நீக்குவது தவறு" என்று ஒரு அணியும், "சரிதான்" என்று இன்னொரு அணியும் கட்சி கட்டி நிற்கிறதாம்.



படிப்பகம்

www.padippakam.com

## புகைப்பவர்களுக்கு ஒரு நற்செய்தி



பெரிய படத்தில் மூக்கைக் காணவில்லை. சிறிய படத்தில் மூக்கை ஒட்டியதுபோல் தெரிகிறது. காரணம் என்ன?

கதையைக் கேளுங்கள்;

சிங்கப்பூரைச் சேர்ந்தவர் லோக்கியூ ஹோங். இவருக்கு 58 வயது. கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்புவரை தினமும் இவர் புகைத்த சிகரெட்டுக்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 60. ஐயா ஒரு செயின் ஸ்மோக்கர். தமிழில் மொழி பெயர்த்தால் தொடர் புகைப்பிடிப்பாளர்.

54 வயதில்தான் ஆரம்பமானது வினை. இழுக்க இழுக்க இன்பம் கொடுத்த சிகரெட் வாயில் புற்று நோயையும் பரிசாகக் கொடுத்துவிட்டது.

முகத்தின் கீழ் பகுதியை வெட்டி எடுத்தால்தான் புற்றுநோய் வேறு பகுதிகளுக்குப் பரவாது என்றனர் டாக்டர்கள்.

மூக்கு, கன்னங்கள், வாய், வாயின் மேற்பகுதி என்பவை வெட்டப்பட்டன. மூக்கு அகற்றப்பட்ட பகுதி ஊடாக நாக்குத் தெரிந்தது. 1993 மார்ச் மாதம் சிங்கப்பூரில் உள்ள தேசிய பல்கலைக் கழக மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நடந்தது.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் இவரைப் பார்த்தவர்கள் நடுங்கினார்கள். முகம் சுளித்தார்கள். இவருக்கும் உண்பது, குடிப்பது எல்லாமே கஷ்டமாக இருந்தன.

அப்படியே நான்கு ஆண்டுகள் கழிந்தபின்னர் சமீபத்தில் மற்றொரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

அதனால் முகம் ஓரளவு சரி செய்யப்பட்டு, செயற்கை மூக்கு பொருத்தப்பட்டுள்ளது.

செயற்கை மூக்கை கழற்றி தன் முகத்தில் உள்ள குழியைக் காட்டினார். பாருங்கள் குழியை! செயற்கை மூக்குடன் காணப்படும் படம்தான் உள்ளே இருக்கிறது.

சிங்கப்பூரில் ஆண்டுதோறும் 30 பேருக்கு மூக்குப் புற்றுநோய் ஏற்படுகிறதாம். புகைப்பது, புகையிலை மெல்லுவது போன்றவையே காரணமாம். ஜாக்கிரதை!

## கம்பீர எழுச்சி



↑ ஹொங்ஹொங்கும் உரிமையாகிவிட்டதில் சீன மக்களுக்கு நிரம்ப நிரம்ப சந்தோஷம். மற்றொரு சந்தோசம் படத்தில் காணப்படுகிறது. சீனாவிலேயே மிக உயரமான கட்டிடம் கம்பீரமாக எழுந்து கொண்டிருக்கிறது.

1998 ஆகஸ்ட் மாதத்தில் முழுமையாக எழுந்துநிற்கும். மொத்த உயரம் 420 மீட்டர். 88 மாடிகளைக் கொண்டது. 80 மாடிகள்வரை கட்டி முடிக்கப்பட்ட நிலையில் உள்ளதையே படத்தில் காண்கின்றோம். இதன் பெயர் ஜின்மா பில்டிங். சீனாவில் ஷங்காய் நகரில்தான் எழுந்துகொண்டிருக்கிறது.



## மலரே! ஓ... மலரே!

← மலர் என்று பெண்ணைச் சொல்லாத கவிஞர் யார் உளர்? (யாராவது இருந்தால் விதி விலக்கு பட்டியலில் சேர்ந்து கொள்ளக் கடவீர்)

படத்தில் பாருங்கள் மலருக்குள் மலர். என்னே ஒரு கவித்துவக் காட்சி! இது எல்சல்வடோர் நாட்டில் 'கிளிக்' செய்யப்பட்டது. இயற்கை வளத்தை பாதுகாக்கும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். ஒரு பெண் மலராக மாறினார். இன்னொரு பெண் மரமாக மாறினார். மாணவர்களிடையே பிரசாரம் செய்கிறார்கள். வளத்தை காக்க அங்கே பிரசாரம். நம் நாட்டில் வளம் மட்டுமல்ல வனமே அழிந்து கொண்டிருக்கிறது போரால்.

## புல் இருக்கப் பசி ஏன்?

↓ புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது என்று சொல்வர். ஆனால் மீன் புல் தின்னும். இவர் மார்போடு செல்லமாக அணைத்துவைத்திருக்கிறார் பாருங்கள் மீன், இது புல்லை ஒருகைபார்க்கிறதாம். இது சீன மீன். நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது. அதுதான் அணைப்பில் ஹாயாக இருக்கிறது. இந்த மீன் புல் தின்பதைக் காண கூட்டம் சேருகிறதாம். அதனால் இந்த 'மொட்' அண்ணருக்கு செம வருமானம்.



தகவல் பெட்டி

## பொட்டு வைத்த பொலிஸ்காரர்

→ சினிமாக்களில் கடைசிக்கட்ட காட்சிகள் (கிளைமாக்ஸ்) பரபரப்பாக இருக்கும். நாற்காலி நுனிக்கு ரசிகர்களைக் கொண்டு வரக்கூடிய கிளைமாக்ஸ்தான் சூப்பர் கிளைமாக்ஸ்.

நிஜ வாழ்க்கையிலும் எத்தனையோ கிளைமாக்ஸ் காட்சிகள் இருக்கவே செய்கின்றன. அப்படிபட்ட சம்பவங்களில் அபூர்வமாக சில மட்டுமே புகைப்படப்பிடிப்பாளர்களின் கமராக்களில் சிக்கிக்கொள்ளுகின்றன.

படத்தில் இருப்பது நிஜமாக நடந்த சூப்பர் கிளைமாக்ஸ். அவசரத்திலும், தூரம் காரணமாகவும் காட்சி மங்கலாக பதிவு செய்யப்பட்டுவிட்டது.

பிரேசில் நாட்டில் கத்தி முனையில் மூன்று சிறுமிகளைக் கடத்தினான் ஒருவன். பொலிஸ் துரத்தியது. இரண்டு சிறுமிகளை விட்டுவிட்டு ஒரு சிறுமியை தூக்கிவைத்தபடி பொலிசாரை எச்சரித்தான். "நெருங்கினால் இவளைக் குத்திக் கொன்றுவிடுவேன்" என்று கூச்சலிட்டான்.

பொலிஸ் நெருங்கியது. "வராதே! வராதே!" என்று கத்தினான். "சரி வரவில்லை, உனக்கு என்ன வேண்டும்?" என்று சற்றே தூரத்தில் நின்று பேச்சுக் கொடுத்தனர் பொலிசார். அப்போது சட்டென்று பிஸ்ரலை உருவி கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் நெற்றியில் சுட்டார் ஒரு பொலிஸ்காரர்.

குறி தவறவில்லை.

சற்றுக் குறி தவறியிருந்தாலும் சிறுமிமீதும் துப்பாக்கிக் குண்டு பட்டுவிடும் அபாயம் இருந்தது. தன்னம்பிக்கையும், கடும் பயிற்சியும் இருந்ததால் துணிந்து சுட்டிருக்கிறார். நெற்றியில் சுடுவதை நம்நாட்டு இயக்கங்கள் பொட்டு வைப்பது என்பார்கள். இது கச்சிதமான பொட்டு. சிறுமிகள் மீட்கப்பட்டனர். கடத்தல்காரன் குளோஸ்!





படிப்பகம்

# பழிக்குப் பழியாக நடந்த நாடகம்
# நடிகையின் கோரிக்கையை மறுத்த தயாரிப்பாளர்!

அன்றைய பெரிய நடிகர் அவர் தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருப்பார். தனக்கு எதிராக யாராவது விமர்சித்தால் போதும், அவர்களை சும்மாவிடமாட்டார். வாழ்க்கையின் ஒரத்திற்கே போகுமளவுக்கு பழிதீர்த்துக்கொள்வார்.

அப்படித்தான் ஒரு சமயம் அவருக்கு எதிரான போட்டி நடிகர் ஒருவர் அவரது ஆண்மையை இழிவுபடுத்தும் வகையில் கேலியாக யாரிடமோ பேசியிருக்கிறார். அது பெரிய நடிகரின் காதுக்கு வந்துவிட்டது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

கேலி செய்த நடிகர் ஒருநாள் படப்பிடிப்பில் இருந்தபோது அவரைக்காண கைக்குழந்தையோடு ஒரு பெண் வந்திருந்தார். அந்தப் பெண் யாரோ ஒரு ரசிகை என்று நடிகர் நினைத்துக் கொண்டார்.

படப்பிடிப்பு இடைவேளையில் அருகில் வந்த நடிகர் "என்னம்மா நீ எந்த ஊரு நீ என் ரசிகையா?" என்றெல்லாம் கேட்டார்!

அந்தப்பெண், "என்னங்க என்னை ரசிகையென்கிறீங்க? நான் உங்க மனைவி, இது உங்கள் குழந்தை" என்றதும் நடிகர் அதிர்ந்து போனார்.

தொடர்ந்து அந்தப் பெண் கைக்குழந்தை சகிதம் நடிகர் செல்லுமிடங்களுக்குப் போய் தொல்லை கொடுத்துக்கொண்டிருந்தார்.

நடிகருக்கு ஒரே மனக்குழப்பம். அதனால் உடல் நிலையும் பாதிக்கப்பட்டது.

ஒருநாள் அந்தப் பெண் நடிகரின் வீட்டுக்கு எதிரே அமர்ந்து "எனக்கு ஒரு பதில் சொல்லாமல் போனால் இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டேன்" என்று கூறியபடி ஒருநாள் முழுவதும் அங்கேயே இருந்துவிட்டார். நடிகர் அன்று முழுவதும் வீட்டைவிட்டு வெளியே போகவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணைக் காணவில்லை.

நடிகர் அதுபற்றி மெதுவாக விசாரித்தபோதுதான் பெரிய நடிகர் பழிவாங்கும் நடவடிக்கையாக அப் பெண்ணை ஏவிவிட்டிருக்கிறார் என்று தெரியவந்தது.

அதன்பின்னர் பெரிய நடிகரைப்பற்றி யாராவது அவரிடம் வாயைக் கிளறினாலும் மவுனம் காத்தார்.

## நடிகர் செய்த குறும்பு

அம்மனின் பெயரை படங்களில் மட்டும் மகமாயி என்று சொல்லாமல் நிஜவாழ்விலும் அப்படியே உச்சரித்துக்கொண்டிருந்த அந்த நடிகர் இன்று வேறொரு மதத்தின் இறைவனின் நாட்டத்தை ஜெபித்துக் கொண்டிருப்பவர்.

இவர் சினிமாவில் பிசியான நடிகர் என்ற நிலையில் இருந்தபோது, ஒருநாள் தன் மனைவியுடனும் (அவர் ஒரு நடிகை) மற்றொரு நடிகருடனும் படப்பிடிப்பொன்றில் பேசிக் கொண்டிருக்கையில், அங்கு முன்னணி 'திலக' நடிகர்களில் ஒருவர் வந்தார்.

வந்தவர் நேராக "என்னம்மா நம்மளைக் கண்டுக்கவே மாட்டேங்கறே" என்று கூறியபடியே அருகில் அமர்ந்து நடிகையின் தொடையில் கையை அழுத்தியபடி பேசத் தொடங்கினார்.

அருகிலிருந்த கணவருக்கு என்னமோ போலாகிவிட்டது. நடிகர் என்னவெல்லாமோ பேச நடிகை எதிர்ப்பதற்கு திராணியற்றவராய் 'உம்' கொட்டிக்கொண்டிருந்தார். "சரி அப்புறமா வாரேன்" என்றுகூறி நடிகர் எழுந்து போனபின்பே நடிகைக்கு நிம்மதி வந்தது.

இதற்கு சில வருடங்களுக்கு பின் நடிகரும் அவரது பூவைப்போன்ற மனைவியான நடிகையும் அந்த 'திலக' நடிகரை வைத்து இரண்டு படங்களை சொந்தமாகத் தயாரித்தனர்.

## கமல் நதியா மோதல்

எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்கத்தில் 'நிலவே மலரே' படத்தில் நதியாவின் இணையாக நடித்தவர் ரகுமான். அதற்கு முன்னர் கமலைக் கேட்டனர். நதியாவுடன் இணையாக நடிக்க கமல் மறுத்துவிட்டார். தனக்கு நதியா பொருந்தாதவர் என்று கமல் நினைத்ததே காரணம்.

கமல் தன்னோடு நடிக்க மறுத்ததை நதியா அறிந்தார். ஒரு நாள் அருணாச்சலம் ஸ்குடியோவில் படப்பிடிப்புக்காக வந்திருந்த ரகுமான், அங்கு வேறொரு படப்பிடிப்பில் கமல் இருப்பதை அறிந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தார்.

அந்த வழியாக வந்த நதியா ரகுமானுக்கு 'ஹலோ' சொல்லிவிட்டு கமலை கண்டு கொள்ளாததுபோல சென்றுவிட்டார். கமல் அதைப் பொருட்படுத்தவில்லை.

இதனையடுத்து பஞ்சு அருணாச்சலம் தன் படமொன்றுக்கு நதியாவை ஒப்பந்தம் செய்தார். ஒன்றரை இலட்சம் கேட்டார் நதியா. "கமலுடன் ஜோடியாக நடிக்கிறீர்கள்" என்று கூறினார் பஞ்சு அருணாச்சலம்.

கமலுடன் நடிப்பதைத் தவிர்க்க விரும்பிய நதியா சில நாட்களின் பின்னர் நான்கு இலட்சம் கேட்டார். பஞ்சு அருணாச்சலம் நதியாவை தன் படத்தில் நடிக்கவைக்கும் எண்ணத்தையே கைவிட்டுவிட்டார்.

## கவர்ச்சிக் காட்சி

பின்னாளில் அரசியலில் பிரபலமான முன்னாள் நடிகை பற்றியது இது. ஜெயம் பெற்றுத் திகழ்ந்த அந்த நடிகை இந்தியில் வெற்றிபெற்று தமிழில் தயாரிக்கப்பட்ட படம் ஒன்றில் நடித்தார். கவர்ச்சியாக நடிக்கவேண்டிய காட்சியென்பதால் மார்பில் கச்சையுடனும், இடுப்பில் ஒரு துண்டுடனும் நடனம் ஆடிக்கொண்டிருந்தார்.

அவர் நடனம் ஆடும்போதே புகைப்படக்காரர் படம் எடுத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் இடுப்புத்துணி விலகியபோது அதையும் பட மெடுத்துவிட்டார். நடிகை அப்படத்தை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லிப் பார்த்தார். தயாரிப்பாளரோ இறுதி வரை ஒப்புக்கொள்ளவில்லை. படவிளம்பர போஸ்டர்களில் அதனை உபயோகித்துக் கொண்டார்.



ஆனந்த்-கஸ்தூரி
படம்: மிஸ் மெட்ராஸ்

## ஒரு நற்செய்தி

ஜொள்ளுப் பிரியர்களுக்கு ஒரு நற்செய்தி. 'போயிங் போயிங்' என்ற பெயரில் மலையாளத்தில் சக்கைபோடு போட்ட படத்தை தெலுங்கில் 'சீலக் கொட்டுடு' என்ற பெயரில் எடுத்தார்கள். அங்கும் ஹிட். அதே படம் தமிழில் 'பாஞ்சாலி' என்ற பெயரில் வரப்போகிறது.

இதில் யாது விசேஷம் என்றால், ஐந்து நாயகிகள் ஆடைக்குறைப்பில் கிளர்ச்சி பண்ணியுள்ளனர். அவர்கள் வருமாறு: கௌதமி, கஸ்தூரி, ஆம்னி, செண்பகம், மதுபாலா. படத்தில் கதாநாயகன் ஜெகபதிபாபு. அவரா முக்கியம்.

## மிஸ்மெட்ராஸ்

நடிகை கஸ்தூரி மிஸ் மெட்ராஸ் பட்டம் வென்றவர் என்பது தெரியும். இப்போது தெலுங்கில் மிஸ் மெட்ராஸ் எந்தச் சான்ஸையும் மிஸ் பண்ணாமல் புகுந்து விளையாடுகிறார்.

தெலுங்கில் கஸ்தூரி நடித்த படம் ஒன்று 'மிஸ் மெட்ராஸ்' என்ற பெயரில் தமிழில் வருகிறது. மிகத் தாராளமாக தன் உடல் வனப்பை காட்டியிருக்கிறார் மிஸ்.

இதுபற்றிக் கேட்டால் "அப்படி ஒன்றும் கிடையாது. சும்மா வதந்தி" என்கிறார். வதந்தியா இல்லையா என்று இங்கு வெளியாகியுள்ள ஒரு காட்சி சாட்சி சொல்லும். இதைவிட அப்பனான காட்சிகளும் உண்டு. மிஸ் ஏன் பொய் பேசகிறார்?

## சுருதி போயாச்சு

'பெரியமனுசன்' படத்தில் மூன்று சத்யராஜ். ஒரு சத்யராஜுக்கு ஜோடி சுருதி. அவரும் சத்யராஜும் நடிக்க பாடல் காட்சியெல்லாம் எடுத்தனர். ஒரு காட்சி சினி விசிட்டிலும் கண்டிருப்பீர்கள். இப்போது சுருதியை தூக்கிவிட்டார்கள். சத்யராஜுக்கு ஈடான கம்பீரம் சுருதிக்கு போதவில்லையாம்.

இப்போது சுருதிக்கு பதிலாக ரவாளி நடிக்கிறார். கம்பீரம் எல்லாம் ஓ.கே. ரவாளி நடித்த படங்களை வீடியோவில் பார்த்த சத்யராஜ்தான் சிபாரிசு செய்தாராம்.

## சினிவிசிட்

## சங்கத்தைப் பிடிப்போம்

நடிகர் சங்கத்தை கைப்பற்றி ராதாரவியை தலைமைப் பதவியில் இருந்து தூக்கிவீச நடிகர்கள் பட்டாளமே திரண்டிருக்கிறது.

விஜயகுமார், நெப்போலியன், சரத்குமார், தியாகு என்று ஒரு பட்டாளமே களத்தில் குதித்திருக்கிறது. கமல் இவர்களின் பின்னணியில் நிற்கிறார். ரஜினி மௌனமாக இருக்கிறார்.

ராதாரவி பக்கம் நிற்பது விஜயகாந்த் மட்டும்தான். நடிகர் சங்கக் கூட்டத்தில் நடைபெற்ற மோதலில் விஜயகாந்த் சமாதானம் செய்யச் சென்றார். அவருடன் மல்லுக்கு நின்றார் சரத்குமார். அதனால் தற்போது மனக்கசப்பில் இருக்கின்றனர் இருவரும்.

## மூன்று சாந்தி

தெலுங்கின் பிரபல இயக்குநர் தாசரி நாராயணராவ் இயக்கும் படத்தில் மூன்று வேடங்களில் நடிக்கிறார் விஜயசாந்தி. அம்மா, மகள், வீரப்பெண் என்று மூன்று விதமான பாத்திரங்கள். கதாநாயகனாக சாமிகுமார் நடிக்கிறார். படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்; 'ரவுடிதர்பார்'.

## மீனா-சங்கவி

'பொற்காலம்' படத்தில் முரளியின் ஜோடிகளாக மீனாவும், சங்கவியும் நடிக்கின்றனர். முரளியின் அப்பாவாக மணிவண்ணன் நடிக்கிறார். வடிவேலு நண்பனாக நடிக்கிறார். தங்கையாக பத்மஸ்ரீ நடிக்கிறார். பாரதி கண்ணம்மா புகழ் இயக்குநர் சேரன் இயக்கும் படம் என்பதால் பெரும் எதிர்பார்ப்போடு தயாராகிறது பொற்காலம்.




சுவலக்ஷ்மி-கீர்த்திரெட்டி
படம்: நந்தினி

## மனைவி வந்த நேரம்

அடிக்கடி போதை மருந்தை நாடி, தன் திறமைகளையெல்லாம் பாழடித்துக் கொண்டிருந்தவர் ரகுவரன். அருமையான நடிகர் இப்படியாகிவிட்டாரே என்று பலரும் வருந்தினார்கள்.

நடிகை ரோகிணியைக் கைப்பிடித்தார். ரோகிணிக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தனர் சிலர். இப்போது அவர்களெல்லாம் வியந்து போய் நிற்கிறார்கள்.

ரோகிணி என்ன மந்திரம் போட்டாரோ, மாயம் செய்தாரோ, ரகுவரன் நல்ல பிள்ளையாகிவிட்டார். மறுபடி பிஸியான நடிகராகியுள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி என்று சகல மொழிப் படங்களிலும் ரவுண்ட் வருகிறார். 'ரட்சகன்' படத்தில் பயங்கர வில்லனாக தோன்றி அசத்தப் போகிறாராம். எப்படியோ ரோகிணியின் புண்ணியத்தில் இழந்த வில்லனை மீட்டுக்கொண்டது திரையுலகம்.

## சங்கவியுடன்...

சங்கவி இளம் ஹீரோக்களுடன் மட்டும்தான் நடிப்பாரா என்ன, ஏற்கனவே விஜயகாந்த்துடன் நடிக்கிறார். இப்போது சங்கவியோடு நடிக்க ராமராஜனுக்கும் கொள்ளை ஆசை வந்துவிட்டது. சங்கவியும் ஓ.கே. சொல்லிவிட்டார்.

ராமராஜன்-சங்கவி இணைய வழிவகுத்துள்ள படத்தின் பெயர்: 'தம்பிக்கு தாய் மனசு' இயக்கம்: தீனதயாள்.



படிப்பகம்

# ...கைகள் சொன்ன ஜோக்

## குஷ்பு

...த்தால் பசுமாதிரி இருக்கிறார் குஷ்பு. அவர் ...யுள்ள ஜோக்கை கேளுங்கள்;

... இரவு விடுதியில் அழகான பெண் ஒருத்தி ... செயின் ஒன்றை அணிந்திருந்தாள். செயினில் ... விமான வடிவில் ஒரு டாலர். அந்த ஆகாய ...தையே இடைவிடாது உற்று நோக்கிக் ...ருந்த இளைஞனைப் பார்த்துக் கேட்டாள்

...த ஆகாய விமானத்தையே பார்த்துக் ...ருக்கிறீர்களே. ஏன்?"

...ன் சொன்னான்;

...ன் பார்த்தது ஆகாய விமானத்தையல்ல, அது ...ற தளத்தை!"

## நக்மா

...தள நக்மா கலகல வென்று சிரித்தபடி ... ஜோக் இது;

நடிகையின் காதல் கதை இது;

1- அவர்களின் கண்கள் சந்தித்தன.
2- அவர்களின் உதடுகள் சந்தித்தன.
3- அவர்களின் வக்கீல்கள் சந்தித்தனர்."

## தேவயானி

நடிகைகளைப் பற்றியே கிண்டலடிக்கும் தைரியசாலி தேவயானிதான் அவர் சொன்ன ஜோக்:

கணவனுடன் காசிக்குப் புறப்பட்டுப்போன நடிகை தனியாகத் திரும்பி வந்தார்.

"உன் கணவரை எங்கே காணோம்?" என்று தோழிகேட்டாள்.

"ஏதாவது ஒன்றை காசியில் கைவிட்டு விட வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் கணவரை விட்டு வந்தேன்" என்றார் நடிகை.

## ரம்பா

கிளு கிளு ஜோக் அடிப்பதில் படப்பிடிப்புக்களில் கலக்குபவர் ரம்பா. உதாரணத்திற்கு ஒன்று தருகிறார்;

தோயாளி சொன்னார்; "என் மகனுக்கு ஃப்ளு ஜுரம் வந்திருக்கிறது டாக்டர்."

"தெரியும். நேற்று நான்தான் ஊசிபோட்டேன்"

"நான் சொல்ல வந்தது உங்களுக்கு புரியவில்லை டாக்டர். என் வீட்டு பணிப்பெண்ணை அவன் முத்தமிட்டுவிட்டான்"

"அவளுக்கும் ஃப்ளு ஜுரம் வந்திருக்குமே?"

"ஆம் டாக்டர். அது எனக்கும் வந்துவிட்டது. நானும் அவளை.."

"புரிகிறது"

"அதன் பின்னர் என் ...னைவியையும் முத்தமிட்...டேன்"

உடனே டாக்டர் பதட்டத்துடன் சொன்னார்; "ஐயைய்யோ அப்படி என்றால் எனக்கும் அல்லவா ஃப்ளு ஜுரம் வந்துவிடும்."

# மினிசினி

* 'அவ்வை சண்முகி' படத்தின் இந்திப் பதிப்பான 'சிக்னி சாஷி' படத்திலும் கமல் பெண் குரலில் பாடியுள்ளார். இந்தப் பாடலை இவருடன் சேர்ந்து ஆஷா போன்ஸ்லேயும் பாடியுள்ளார்.

* கேடி குஞ்சுமோன் தயாரிக்க நாகார்ஜுன்-முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் நடிக்கும் 'ரட்சகன்' படத்தின் தெலுங்கு உரிமை 7 கோடி இந்திய ரூபாய்க்கு விற்பனையாகி இருக்கிறது.

* தமிழில் நளினி, அமலா, ஜீவிதா போன்றவர்களைக் கதாநாயகிகளாக அறிமுகப்படுத்தியவர் டி.ராஜேந்தர். தற்போது இவர் 'மோனிஷா' படத்தில் மும்பாயைச் சேர்ந்த மும்தாஜ் என்பவரைக் கதாநாயகியாக்கியுள்ளார்.

* 'இதயத்தைத் திருடாதே' படத்தைத் தயாரித்த நர்சாரெட்டி என்பவர் அடுத்து ராஜ்கபூர் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இந்தப்படத்தில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* சிவகுமாரின் மகன் சூர்யா, அடுத்து நடிக்கவுள்ள படங்களில் ஒன்றை இயக்கவிருக்கிறார் விஸ்வாஸ் என்ற புதிய இயக்குநர். இவர் சந்தானபாரதி, பிரதாப் போத்தன் போன்றவர்களிடம் இணை இயக்குநராகப் பணியாற்றியவர்.

* தற்போது பாண்டியராஜன் நடித்து வரும் 'மாறுவேஷம்' படத்தில் முதலில் ராம்கி நடிப்பதாக இருந்து பின்னர் மாற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

* கேயாக்யராஜின் 'வேட்டிய மடிச்சுக்கட்டு' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கும் சாய்குமார், விரைவில் பவித்ரன் இயக்கும் படமொன்றில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

* தமிழில் ரஜினி, கமல் உட்பட முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ள வடிவேலு, முதன்முறையாக தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார். இதில் சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கிறார்.

* விஜய் ஜோடியாக 'புதிய தீர்ப்பு' படத்தில் அறிமுகமாகி பிஸியாக நடித்து வந்த கீர்த்தனாவுக்கு சிறிது காலம் படவாய்ப்புக்கள் எதுவுமில்லை. இப்போது மறுபடியும் பிஸியாகியுள்ள இவர் பி.வாசுவின் 'பத்தினி', வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு' உட்பட நான்கு படங்களில் நடித்து வருகிறார்.

* நெப்போலியன்-அருண்பாண்டியன் நடிக்கவிருந்த 'புலி பொறந்த மண்ணு' படம் நிறுத்தப்பட்டுவிட்டது. காரணம் தயாரிப்பாளருக்கும் இயக்குநருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு.

# ஞாபகமிருக்கிறதா? ஞாபகமிருக்கிறதா?

"ஞாபகமிருக்கிறதா
ஞாபகமிருக்கிறதா
மழையில் நனைந்த
ஓவியம் போலே
மனதில் நினைவுகள் உள்ளது
ஞாபகம் இருக்கிறதா?"

என்று தொடங்கும் பாடலை எழுதியிருக்கிறார் வைரமுத்து. பாடல் இடம்பெறும் படம் 'சந்திப்போமா'.

சந்திப்போமா படத்தில் புதுமுகம் ஒருவரை சந்திக்கப்போகிறோம். அவர் பெயர் விஷ்வா. இவர் யாரென்றால், அம்பிகா, ராதா சகோதரிகளின் தம்பி. இரண்டு கதாநாயகர்களில் ஒருவராக விஷ்வா நடிக்க, மற்றொரு கதாநாயகன் பிரகாஷ்ராஜ்.

கதாநாயகி சிம்ரான். முக்கிய கதாபாத்திரங்களில் அம்பிகா, ராதிகா ஆகியோர் நடிக்கின்றனர். இயக்கம்: இந்திரகுமார். இசை: தேவா. "ஞாபகமிருக்கிறதா...." பாடலை பாடியிருப்பவர்கள் உமா ரமணன், ஹரிகரன்.

# குழந்தை

முக்கிய வேடத்தில் பெரிய நடிகர்கள் நடிப்பது தான் வழக்கம். ஆனால் சுஜாதா என்ற குழந்தை முக்கிய வேடத்தில் நடிக்க ஒரு படம் தயாராகிறது. படத்தின் பெயரும் 'குழந்தை'. இப் படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் சுசன்கான். இயக்கம் இளவரசு.

# வரி இல்லாத காதல்

"டாக்ஸ் ப்ரீ. எங்கள் காதல் டாக்ஸ் ப்ரீ. எந்த நாளும் டாக்ஸ் ப்ரீ. எல்லாம் போயிடுச்சு. ஏப்ரல் ஆயிடுச்சு. வாய்யா சைட் அடிக்கலாம். பந்தா தேவையில்லை. பாவ்லா தேவையில்லை. வந்தா கைபிடிக்கலாம்" இது 'கலர் கனவு' படத்தில் வரும் பாடல் வரிகள்.

குஷ்பு-கரண் ஜோடியாக நடிக்கிறார்கள். கல்யாணத்தையே வெறுக்கும் பாத்திரத்தில் நடிக்கிறார் குஷ்பு.



ராஜேந்திரபிரசாத்-ஊர்வசி
படம்: வாசுகி

...ப்பு
...ன் சிரிப்பு
...ட்டத்திலே
...ஜாப் பூ?"



அர்ஜுன்-நிவேதிதா
படம்: தாயின் மணிக்கொடி

# செம்மீன் — 2

இந்திய ஜனாதிபதியின் தங்கப்பதக்கத்தை முதன் முதலில் ...க்கொண்ட மலையாளப்படம் செம்மீன். நம்நாட்டிலும் ...மாக வரவேற்பு பெற்ற படம்.

மலையாள மீனவர் சமூகம் பற்றிய கதை அது. படத்தின் ...வில் கதாநாயகியுடன் கதாநாயகர்கள் இருவரும் இறந்து ...வார்கள். கதாநாயகியின் குழந்தையுடன் அவள் தங்கை (சிறுமி) ...கரையில் அனாதையாக நடந்து போவதைப்போல படம் ...வடையும்.

இப்போது செம்மீன் பாகம் 2 தயாராகிறது. அநாதையான ...ண்டு பேரும் வளர்ந்தபின் அவர்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் ...பதுதான் கதை. இந்தப் படத்துக்கு 'திருகல் அப்புறம்' (அலைகளுக்கு ...புறம்) என்று பெயர் சூட்டியுள்ளனர். சுரேஸ் கோபி, மஞ்சுவாரியார், ...திநாயக் ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றனர்.

# அடித்தது யோகம்

'தலைவாசல்' படம் மூலமாக மடிப்பு அம்சாவாக அறிமுகமாகிய விசித்ராவுக்கு திடீர் அதிஷ்டம். ஒரு படத்தில் கதாநாயகியாக நடித்து வருகிறார். படத்தின் பெயர்; 'என் பிரிய வசந்தமே'.

அசோக்குமார் என்ற புதுமுகம் கதாநாயகனாக நடிக்கிறார். அனுபவமுள்ள விசித்ரா வுடன் ஆடல் பாடல் களில் நடிப்பதற்கு முடியாமல் திண்டாடினாராம் புதுமுகம்.

# காதோடு சொல்லுகிறோம்

**தி**டீர் திருப்பம் சினிமா காதலில் மட்டுமல்ல, சினிமா உலகத்தினரின் காதலிலும் வழக்கம்தான். 'பா' நடிகரை நெருங்கியிருந்த சங்கீதமான நடிகை அவருடன் காய்விட்டிருக்கிறார். 'சீமைப்பசு' நடிகையுடன் நடிகர் வெகுதூரம் ராசியாகிவிட்டதுதான் காரணமாம். இப்போது சங்கீத நடிகை கிராமராஜனுடன் நெருக்கம். தனது படங்களில் தொடர்ச்சியாக வாய்ப்புக் கொடுத்து அன்பை சம்பாதித்தாராம் நாயகன். சமீபத்தில் நடிகைக்கு நகை வாங்கி கொடுத்தார் நாயகன். நளினமான மனைவிக்கு கதை தெரிய ஒரே கசமுசாவாம். கிராம நாயகன் மிரட்டிய மிரட்டில் நளின மனைவியான முன்னாள் நடிகை கப்சிப். நாயகன் லீலைகள் தொடர்கின்றன. படத்தில் பவ்வியமாக நடிக்கும் சங்கீதமான நடிகை திரைமறைவில் விபரமானவர்தானாம்.

**த**மிழில் இருந்து தெலுங்கு சென்று கவர்ச்சிகாட்டும் கஸ்தூர நடிகை ஹைதராபாத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். ஒரு தொழிலதிபர் நடிகைக்கு ஃபோன் செய்தார்; "இந்த ஹோட்டல் வாசலில் உங்களுக்காக ஒரு புது டாடாசுமோ கார் நிக்குது. அந்தக் காரின் சாவி என்னிடம் இருக்கிறது. கார் வேணும் என்றால் என்னிடம் வந்து வாங்கிக்கொள்ளுங்க." என்றாராம் தொழிலதிபர். நடிகைக்கு அவர் அழைத்தவிதம் பிடிக்கவில்லை. கன்னாபின்னாவென்று திட்டிவிட்டாராம். தொழிலதிபர் அரண்டு போனாராம்.

**மா**வீரன் பெயர் கொண்ட நடிகர் அவர். நட்சத்திர குடும்ப நடிகரும் அவரும் நண்பர்கள். சங்க விடயத்தில் ஒரே அணியில் இருப்பவர்கள். நட்சத்திர குடும்ப நடிகரின் மூத்த மகள் விவாகரத்தாகி வீட்டில் இருந்தார். தற்போது தனியாக ஒரு பங்களாவில் குடியேறியிருக்கிறார். மாவீர நடிகரும் அங்கு தவறாமல் செல்கிறார். நட்சத்திர குடும்ப நடிகர் அதனை கண்டுகொள்வதில்லையாம். நட்சத்திர குடும்ப நடிகரின் மனைவியான நடிகையும் அதில் தலையிடுவதில்லையாம்.

**ஆ**க்ஷன் அரசருடன் நடிக்கும் புதுமுக நடிகை அவரது நேரடி கவனிப்பில் இருக்கிறாராம். அடுத்த படத்திலும் வாய்ப்புத் தருவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார் நடிகர்.

**த**மிழக தொலைக்காட்சி ஒன்றில் அறிவிப்பாளரினியாக இருக்கும் அந்த நடிகை பிரபல இயக்குநர் ஒருவரின் பரம விசிறியாம். இயக்குநரும் நடிகையின் உருக்கத்தைப் பார்த்து படம் ஒன்றில் வாய்ப்புக் கொடுத்துள்ளதுடன், வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டாராம். நடிகையோ பூரிப்பில் இருக்கிறார்.

**பூ** நடிகைக்கும் இயக்குநரான காதலருக்கும் இடையே ஏற்பட்ட விரிசல் சமரசமுயற்சி காரணமாக நிரப்பப்பட்டுள்ளதாம். 'ரம்' நடிகைக்கு தொடர்ந்து வாய்ப்புக் கொடுக்கமாட்டேன்' என்று உத்தரவாதம் கொடுத்திருக்கிறார் சுந்தர இயக்குநர். அதன்பின்னர்தான் சமாதானமானாராம் பூ நடிகை.

...ா
...ண்ணிலா

# நடிகர் கொடுத்த இலட்சங்கள்

ரம்பா பற்றிய சமீபத்திய செய்தி ஒன்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் பரபரப்பாக உலாவுகிறது.

ரம்பாவின்மீது அந்த நடிகருக்கு நீண்ட நாளாகவே ஒரு கண். அவரது சமீபத்திய படங்கள் தோல்வி கண்டதால் அவருடன் ஜோடியாக நடிக்க வந்த வாய்ப்பை ரம்பா உதறிவிட்டார். ஜோடியாக நடித்தாலாவது தன் எண்ணத்தை நிறைவேற்றலாம் என்று நினைத்த நடிகருக்கு ஏமாற்றமாகிவிட்டது.

ரம்பா விலக விலக நடிகருக்கும் ஏக்கம் அதிகமாகிக் கொண்டிருந்தது. எத்தனையோ நடிகைகள் அவரது உடற்கட்டில் மயங்கி அலையும்போது ரம்பா மட்டும் விலகிப்போவதை அவரால் தாங்கமுடியவில்லை.

இறுதியாக நடிகருக்கு மிக வேண்டிய தயாரிப்பாளர் ஒருவர் உதவ முன்வந்தார். ஆஜானுபாவான நடிகர் சார்பாக நடிகையை அணுகினார்.

நாலு இலட்சம் ரூபாய்கள் கைமாறியதாம். அதன்பின்னரே நடிகரை சந்திக்க இணங்கினாராம் நடிகை. சந்திப்பு நடந்தது சென்னையில் உள்ள ஒரு பிரபல ஐந்து நட்சத்திர விடுதியில்தானாம்.

# கொஞ்சம் தமிழ்

இளமை- ...குட்டைப் பாவாடை ...சகிதம் படப்பிடிப்புத் ...தளத்தில் சுற்றிவரும் ...சிம்ரானுக்கு இதுவரை 12 ...படங்கள் ஒப்பந்தமாகி ...யுள்ளன.

மும்பாய் அழகி சிம்ரானுக்கு சொந்தப் பெயர் ரிஷி பாலா. வீட்டில் செல்லமாக ஷோனு என்பார்களாம். அப்படியென்றால் சொக்கத் தங்கம் என்று அர்த்தமாம். சிம்ரானுக்கு தெரிந்த தமிழ்வார்த்தைகள் ரொம்ப சிக்கனமானவை; 'வாங்க', 'போங்க', 'விடுங்க', 'வணக்கம்', 'நன்றி', கொஞ்சம் தமிழ் தெரிந் தாலும் அது கொஞ்சும் தமிழாகிறது சிம்ரான் உச்சரிப்பில்.

## முகப்பில்

| ரம்பா படம்:வி.ஐ.பி. | சுகாதினி படம்:நந்தினி |
|---|---|
| ராம்ஜி—மைனா படம்:வீரபாண்டிக் கோட்டையிலே | |



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# அளவான உணவும் அதன் பயனும்

1. **பெ**ண்பிள்ளைகள் 8 வயதிலிருந்தே தினமும் 1600 மில்லிகிராம் கல்சியம் (சுண்ணாம்புச்சத்து) சத்தினைப் பெறவேண்டும். இதனால் எலும்புகள் உறுதி அடையும். பிற்காலத்தில் எலும்புகள் உடையாமலும் கல்சியம் பாதுகாக்கும். பாலிலும் பாலுணவுகளிலும் கல்சியம் கிடைக்கிறது. சூப், புடிங், வெண்ணைக்கட்டி, யோகட் ஆகியவற்றிலும் கல்சியம் கிடைக்கிறது. கொழுப்பு நீக்கிய பாலே சிறந்தது. அதில் மேலதிகமாகச் சேரும் கொழுப்புச் சத்துக்கிடையாது. பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள் ஆகியவையும் உகந்தவை. சூரிய வெளிச்சத்திலும் கல்சியம் இயல்பாகக் கிடைக்கிறது.
2. உடலில் சக்தியைத் தரவல்ல கார்போஜதரேட்டு அரிசி உணவில் கிடைக்கிறது, தீட்டாத அரிசியில் விட்டமின்–B– கலவை செறிவாக உள்ளது. தசைநார்களை உறுதிப்படுத்தக்கூடிய புரதம் பருப்பு வகைகளில் உண்டு.
3. நெய், எணணெய் வகைகளில் பொரித்தெடுப்பதில் உருசி அதிகம்தான். ஆனால் கொழுப்பை இவை அதிகரிக்கவே செய்துவிடும். எண்ணெய், நெய்ப் பொரியல்களை விடுத்து அவித்து அல்லது வறுத்து உணவுகளை உட்கொள்ளலாம். சுவைக்கு ஏலம், கறுவா போன்ற எமது நாட்டு வாசனைப் பொருட்கள் கை கொடுக்கும்.
4. நாம் சொல்லிக் கொடுப்பதை நன்றாகக் கிரகித்து அதன்படி குழந்தைகள் சிரமமின்றிக் கடைப்பிடிப்பார்கள். சுகாதாரத்துக்குக் கேடு தரக்கூடிய பொரித்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்று பக்குவமாகச் சொன்னால் அவர்கள், பெரியவர்களைவிட அதிகம் கட்டுப்பாட்டுடன் உணவு உட்கொள்ளக் கற்றுக் கொள்வார்கள்.
5. சோயாவினாலான பதார்த்தங்கள், கொழுப்பு நீக்கிய உணவுகள் எண்ணெயில் பொரிக்காமல் போறணையில் வதக்கிய அல்லது சுட்ட பதார்த்தங்களையே கடைகளில் தேர்ந்தெடுங்கள். தவிட்டுப் பாண் என்னும் பாண் பேக்கரிகளில் கிடைக்கும் இவை குரக்கன் மா அல்லது கோதுமைத் தவிடு கலந்ததாகும். இதனை உண்பதனால் எக்கேடும் விளையாது.
6. கொழுப்பு அதிகமுள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி வகைகளைத் தவிர்த்து கோழி இறைச்சி மற்றும் மீன் வகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.
   கோழி இறைச்சியை உரித்தெடுக்கும் போதே கொழுப்பை இனங்கண்டு அதனை நீக்கிவிடலாம் இதன் சில பாகங்கள் கொழுப்புச் சத்து அதிகம் கொண்டவை. அவற்றையும் நீக்குதல் நல்லது.
   கோழியை முதல் நாளே சமைத்து சற்று ஆறவைத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துவிட வேண்டும். அடுத்த நாள் எடுத்துப் பார்த்தால் கறிக்குழம்பின் மேல் மட்டத்தில் கொழுப்பு மிதக்கும். அதனை அப்புறப்படுத்திவிட்டு சூடுகாட்டி உண்ணலாம்.
7. அன்னாசிப்பழம், ஆப்பிள் பழம் மற்றும் பப்பாளிப்பழம் ஆகியவற்றில் உள்ள இனிப்பு தீமையற்றது. குழந்தைகளுக்கு ஐஸ்கிறீம் என்றால் ஆசை அதிகம். வாரத்தில் ஒரு நாள் மட்டும் வாங்கிக் கொடுக்கலாம், தனி ஐஸ்கிறீம் கொடுக்காமல் பழங்களுடன் (துண்டுகளாக்கி) சேர்த்துக் கொடுக்கலாம். பழங்களில் குழந்தைகளுக்கு மாதுளம் பழம் உகந்தது.
8. உப்பு-இரத்தக் கொதிப்புத் தோன்றுவதற்கு மற்றுமொரு மூலகாரணம், உப்பை உணவுப் பதார்த்தங்களில் மிகக் குறைவாகவே சேர்த்துக் கொள்வது நல்லது. ஊறுகாயினை உணவு மேசையிலிருந்து அப்புறப்படுத்தி வைப்பதே பொருந்தும். கரட், பீற்ரூட் முதலானவற்றை வேகவைத்து அவற்றின் சாற்றைப் பருகுவது பயன்தரும். அப்பளத்தைப் பொரித்து உண்பதனால் எண்ணெய் சேர்கிறது. இதற்காக சிலர் அப்பளத்தை வெறுமனே சுட்டு உண்போரும் உளர். எவ்வாறாயினும் அப்பளத்தில் உப்பும் எண்ணெயும் கணிசமான அளவு இருக்கவே செய்கிறது.



(மிகுதி அடுத்தவாரம்)

# சமைப்போம் சுவைப்போம்

## கடலைப் பருப்புப் பாயாசம்

தொகுத்துத் தருவது– சுகந்தினி

தேவையானவை:

| | |
|---|---|
| கடலைப் பருப்பு | - 200 கிராம் |
| சவ்வரிசி | - 50 கிராம். |
| தேங்காய் | - 2 |
| சீனி | - 400 கிராம் |
| நெய் | - 2 மே.கரண்டி |
| முந்திரிப்பருப்பு | - 50 கிராம் |
| சீரகம் (தூள்) | - 10 கிராம் |
| ஏலக்காய் (தூள்) | - 5 கிராம் |

செய்முறை:

தேங்காயைத் துருவி மூன்று தடவை பால் பிழிந்து தனித்தனியாக வைத்துக் கொள்ளவும். கடலைப் பருப்பைக் கழுவி வேகவைத்து கரண்டியால் நசித்துப் பொடியாக்கவும். அத்துடன் சவ்வரிசியையும் சேர்க்கவும். அடுப்பில் அளவான சூட்டில் கடலையையும் சவ்வரிசியையும் தண்ணீர் விட்டு கொதிக்கவிடவும். சீனியையும் சேர்த்துக் கலக்கவும். ஒரு கரண்டி நெய்யையும் விட்டுக் கிளறவும். அத்துடன் மூன்றாவது பாலை விட்டு கொதித்து வரும்போது இரண்டாவது பாலை விட்டுக் கிளறவும். வற்றி வரும் போது முதலாவது பாலை விடவும். இதில் முந்திரிப்பருப்பு, திராட்சை வற்றல், ஏலக்காய், சீரகத்தூள் ஆகியவற்றையும் சேர்த்துக் கிளறவும்.

கடலைப் பருப்பு கெட்டியாகும் தன்மை உடையதென்பதால் நீர்ப்பிடிப்புடன் இருக்கும் போதே எஞ்சியுள்ள நெய்யைவிட்டு இறக்கி, அளவான சூட்டில் பரிமாறவும். இப்பாயாசம் 6 பேருக்குப் போதுமானது.

# கண்களில் ஏன் கோளாறு?

**பெ**ண்களின் கண்களுக்குத் தனி மதிப்பு உண்டு. பண்டைக் காலம் முதல் இன்று வரை பெண்களின் கண் அழகை வர்ணிக்காத புலவர்களே இல்லை.

இதனால்தான் பெண்கள் தங்கள் கண்களின் அழகை மட்டுமல்ல, கண்களின் நலத்தையும் பேணிக்காக்க வேண்டிய கடமைப்பாடுடையவர்களாகிறார்கள். கண்களில் எக் கோளாறும் இல்லையென்றால் அவற்றுக்குத் தானாகவே அழகு வந்து விடும்.

கண்பார்வை கெட்டுப்போவதற்குப் பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக கண்களின் சுகாதாரம் பாதிப்படைவதும் ஒரு பிரதான காரணமாகும்.

இப்பொழுதெல்லாம் கண்களுக்குக் கண்ணாடி போடுவது ஒரு 'ஃபாஷனாகிவிட்டது. சிறிதளவு கண் பார்வை மங்கினாலும் அதற்கான உண்மைக்காரணத்தை அறிந்து ஏதாவது குறைபாடு இருந்தால் அதற்கான பரிகாரம் தேடாமல்? கண்ணாடி வாங்கி அணிந்து கொள்கிறார்கள்.

இதனால் கண்பார்வை மேலும் கெட்டுப் போவதுடன் அத்தகைய குறைபாடுகளினால் தலையிலுள்ள நரம்புகள் பாதிப்புக்குள்ளாகி பல்வேறு வியாதிகள் தலையெடுத்து விடவும் கூடும்.

கண், காது, மூக்குப் போன்ற அவயவங்கள் மிக நுட்பமான உறுப்புத் தொகுதிகளினால் இயக்கப்படுகின்றன. இவற்றில் கண்களில் உள்ள உறுப்புக்கள் மிக நுணுக்கமான– மென்மையான பாகங்களைக் கொண்டவை.

ஒரு சிறிய தாக்கத்தையும் இம் மென்மையான இழைகளால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை.

## கவலையும் காரணம்

**சி**லருக்கு கண்பார்வை குறைதல் பரம்பரை வியாதியாகவும் இருக்கும். உணவு முறையில் கண்களுக்கான சத்துக்கள் சேர்க்கப்படாமையினாலும் தீய பழக்க வழக்கங்களினாலும் பார்வை குன்றும். சுற்றுப் புறச் சூழ்நிலையும் கண் பார்வைக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

சுற்றுச் சூழலில் எப்போதும் கண்களால் பார்த்து ஏற்றுக்கொள்ள முடியாத காட்சிகளைக் காணும் போது, கண்கள் மூலம் மனத்திலும் உறுத்தல்கள் ஏற்படுகின்றன. இதனால் கண்ணும் மனமும் பாதிப்படைகின்றன. துர்நாற்றம் மூக்குக்கு எவ்வளவு கெடுதியோ கண்களுக்கும் கேடு விளைவிக்கின்றது.

கண்களுடன் தொடர்புடைய நுட்பமான



உறுப்புகள் பலவீனமடைதலினால் பார்வை மங்குவதுண்டு. போதுமான ஓய்வு இல்லாமை, மனக் கவலை, மூளைக்கு அதிக வேலை, போதுமான முழுக்கு இல்லாமை, எண்ணெய் தேய்க்காமலிருத்தல், வெயிலில் அதிக நேரம் திரிதல், அதிகநேரம் இருளில் இருத்தல் போன்ற காரணங்களால் தலை மண்டையும் முடியும் வரண்டு போய் விடுகின்றன. ஓடும் வண்டிகளிலிருந்தவாறே புத்தகம் படித்தல், போதுமான வெளிச்சமில்லாத இடத்தில் கையால் துணி தைத்தல், அசுத்தமான நீர் பருகுதல், அழுக்கடைந்த காற்றையோ புகையையோ சுவாசித்தல், (ஆண்கள்) மதுபானம் அருந்துதல், புகை பிடித்தல் போன்றவையும் கண் பார்வை குன்றக் காரணங்களாகிவிடுகின்றன.

## கர்ப்ப காலத்தில்

**பெ**ண்கள் கர்ப்ப காலங்களில் சில சந்தர்ப்பங்களில் பார்வைக் கோளாறினால் பாதிக்கப்படுகின்றனர். இக் காலங்களில் அவர்கள் உட்கொள்ளும் மாத்திரைகள், மருந்துகளால் ஏற்படும் பாதிப்பு இதுவாகும்.

கண்பார்வை குறைகிறது என்று கண்டவுடன் தகுதியான வைத்தியர்களை அணுகி தக்க மருத்துவம் பார்க்க வேண்டும். கண்ட கண்ட கை மருந்துகளைச் செய்து அருமையான கண்களைக் கெடுத்துவிடலாகாது.

கண் நோய்கள் வராமல் தடுக்க பல முன்னேற்பாடுகளைச் செய்யலாம். பொன்னாங்கன்னி, முருங்கைக்கீரை, அரைக்கீரை, கொத்தமல்லிக்கீரை ஆகிய கீரை வகைகளையும், ஈர வெங்காயம், கரட், அவரை, வாழைத்தண்டு, வாழைப் பூ, தக்காளி ஆகியவற்றை தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மாம்பழம், பேரீச்சம்பழம், ஆப்பிள் பழங்களையும் போதுமான அளவு சாப்பிடலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? கண்டி வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**ஏ.மேரி அலன்**
29/4, நாகஸ்தன்ன வீதி, கண்டி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** BY

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12-07-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# ஏன் என்ற கேள்வி கேட்காத குழந்தை இல்லை!

**நீ**ம் வீட்டுக் குழந்தைகளில் சிலர் எப்போதும் எதைப்பற்றியாவது கேள்வி கேட்டு எம்மை எரிச்சல் படுத்திக் கொண்டிருப்பார்கள், பொறுமை இழந்த நாம் அக் குழந்தையின் கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில் சொல்லாமல் தட்டிக் கழித்து விடுகிறோம்; சில சமயம் எமக்குக் குழந்தை மேல் கோபம் வரும்; பொறுமை இழந்து இரண்டு அடி போட்டு அடக்கி விடவும் முயற்சிப்போம்.

எதைப் பற்றியாவது எம் குழந்தைகள் கேள்விகள் கேட்டால் கூடுமானவரை அவற்றுக்கு ஏற்ற பதிலைக் கூறத்தான் வேண்டும். தாம் கண் முன்னே காணும் காட்சிகள், நடைபெறும் நிகழ்வுகளெல்லாம் எமக்குப் பரிச்சயமானவையாக இருக்கலாம். ஆனால் எம்குழந்தைகளுக்கு அவை விளங்காத புதிராக– புதுமையாக இருக்கும். ஆகவே அவற்றை அறிந்து கொள்ள– தம் மழலையுடன் கூடிய வினாக்களை எழுப்ப ஆரம்பிக்கின்றனர்.

"ஏன்...? எப்படி....? என்ன...?" என்றெல்லாம் கேள்விகள் பிறக்கும். சில குழந்தைகள் தங்களுக்கான திருப்திகரமான பதில்கள் கிடைக்கும்வரை ஓயமாட்டார்கள். அப்போது பதில் சொல்ல அலுத்துப்போன தாய்க்கோ தகப்பனுக்கோ ஆத்திரமாத்திரமாக வரும். அக்குழந்தைகளை அடக்க பெற்றார் பலதரப்பட்ட அடக்குமுறைகளையும் கையாளுவார்கள். சில சந்தர்ப்பங்களில் அடியும் கொடுத்து அடக்கப்பார்ப்பார்கள்.

"கேள்வி அடையாளம் (?) தான் அறிவு வளர்ச்சிக்கு ஆதாரமான சின்னம்" என்று ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். குழந்தைகள் பேசக் கற்றுக் கொண்ட உடனேயே எதைப் பார்த்தாலும் அதன் தன்மைகளைத் தொட்டு ஆராய்ந்து பார்க்க ஆசைப்படுகிறது. இதனாலேயே பலதரப்பட்ட கேள்விகளும் அந்தப் பிஞ்சு மனத்தில் தோன்றுகின்றன.

சில பிள்ளைகளுக்கு நினைவாற்றல் அதிகமாக இருக்கும். ஒரு முறை கண்டு பழகியவர்களை பலமாதங்களின்பின் மறுமுறை கண்டதும் தனக்கு அறிமுகமானவர் தான் என்பதை தன் புன்சிரிப்பால் உணர்த்தும். ஒன்றரை வயதுக்குள் இவ்வாற்றலைப் பெறும் குழந்தை சிறந்த அறிவாளியாக வளரும் என்பதற்கு ஐயமில்லை.



இரண்டு வயதிலேயே ஓரிரு தடவைகள் நாம் சொல்லிக் கொடுக்கும் எதையாவது அடுத்த நாளே கூறக் கூடிய குழந்தைகள் நல்ல நினைவாற்றல் உள்ளவர்கள் என்பதைக் கண்டு கொள்ளலாம்.

சிறுவர்கள் உள்ளத்தில் பொய், வஞ்சகம், சூது ஆகியவை இருப்பதில்லை; அவ்வாறு பொய் பேசுதல் போன்ற தீய பழக்கங்கள் சிறுவர்களிடம் தோன்றுமானால், அதற்குக் காரணம், பெற்றோரையே சாரும். அடுத்துத்தான் பள்ளிச் சுற்றாடல் மீது பழி போட வேண்டும்.

ஒரு சிறுவனின் முன் நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவத்தை முற்று முழுதாக மறைத்து, அதன் பெற்றாரோ அல்லது வீட்டிலுள்ள பெரியவர்களோ– வேறொருவரிடம் பொய் கூற நேர்ந்தால், அச்சிறுவனின் மனம் வெதும்பும். 'எதற்காக ஒரு பொய்யை இவர்கள் கூறுகிறார்கள்?' என்று அதன் மனத்தில் ஒரு பெரும் சஞ்சலம் தோன்றும். தன் வீட்டுப் பெரியவர்கள் உண்மைக்கு மாறானதைக் கூறு வதைக் கேட்டுச் சகிக்காத குழந்தை, அதே கணத்தில், சகலரின் முன்பாக, உண்மையை உள்ளபடி கூறிவிடும். இதனால் பல பிரச்சனைகள் தோன்றவும் கூடும்.

ஆரம்பத்தில் எந்தப் புத்தகத்தை எடுத்தாலும், கண்கவர் வர்ணம் அதிகமுள்ள படங்களைப் பார்ப்பதில் குழந்தைகள் நாட்டம் கொள்வார்கள். பின்னர் பெரியவர்களிடம் அவற்றைக் காட்டி விளக்கம் கேட்பார்கள். அவற்றுக்கான திருப்திகரமான விளக்கங்கள் தரப்பட வேண்டும்.

நமக்குப் புரியாவிட்டாலும் அவர்கள் நம்பும் விதத்தில் கற்பனைகளையும் இணைத்துக் கதைகளைச் சொல்வதில் பாதிப்பு இல்லை. ஆனால் நாம் கூறும் கற்பனைக் கதைகள் விபரீதமானதாக இருக்கலாகாது.

பறவைகளும் மிருகங்களும் வாய் திறந்து பேசுவது போலெல்லாம் சிறுவர்களுக்கான கதைகள் இருக்கின்றன அல்லவா? அவை உண்மைக்குப் புறம்பானவையாக இருந்த போதிலும் குழந்தைகளின் கற்பனை வளத்தைப் பெருக்கவும் நினைவாற்றலை விருத்தி செய்யவும் இப்புனைகதைகள் உதவுகின்றன.

மிக மென்மையான சின்ன உள்ளங்கள் சின்னப் பருவத்திலேயே சின்னா பின்னப்பட்டுச் சீரழிந்து போகாமல் பார்த்துக் கொள்வது வீட்டிலுள்ள பெற்றார் மற்றும் பெரியவர்களினதும் கடமையாகும்.

# டிப்ஸ்

* தோசைக்கு அரைத்த மாவை உப்புப் போடாமல் எடுத்து வைத்தால் சீக்கிரத்தில் புளிக்காது. தோசை வார்க்கும்போது உப்புப் போட்டுக் கொள்ளலாம்.
* கறிக்கான வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்தால், ஒரு வாரத்திற்குப் பழுக்காமல் இருக்கும்.
* பிரியாணி செய்யும்போது ஒரு எலுமிச்சம்பழத்தை அதில் பிழிந்து விட்டால் சோற்றுப் பருக்கைகள் தனித்தனியாக இருக்கும்.
* இஞ்சியைக் குளிர்ந்த, இருண்ட இடத்தில் வைத்தால் கெடாமல் இருக்கும்.
* கண்ணாடி வளையல் அணிந்து கொள்பவர்களுக்கு வளையல் அடிக்கடி உடைந்துவிடும். எனவே கண்ணாடி வளையல்களை வாங்கியதும் கொதிக்கும் நீரில் போட்டு, ஆறியதும் வளையல்களைப் போட்டுக் கொண்டால் நீண்ட நாட்களுக்கு உடையாமல் இருக்கும்.


தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 18

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## விழிநீரை வழியனுப்பு

நீ தொலைத்துவிட்ட
தேவ குமாரியை
தேவதைகளின் மத்தியில்
தேடியலைகிறாய்;
தெரிந்தவர்களிடமெல்லாம்
விசாரித்துப் பார்க்கிறாய்!
–0–
உனது
உறுதியான அன்புக்கு
மரணம் மாத்திரமே
நிம்மதி தருமெனக்கூறி,
அந்த நிம்மதியை
அரவணைக்கும் நாள்வரை
அலட்சியத்தோடு வாழ்கிறாய்!
–0–
தொலை தூரத்தில் இருந்தவாறு
உன் கேள்விகளுக்குப்
பதில் கூறுமாறு கேட்டிருந்தாய்;
ஆழமான அன்புகள்
பரிமாறப்படும் போது–அதில்
ஆனந்தம் உருவாக வேண்டுமெனக்
கோரியிருந்தாய்!
–0–
பரவாயில்லையே...!
ஐரோப்பிய நாகரிகம்–உனக்கு
அன்பையும் போதித்துள்ளதே!
–0–
அறிவாயா மகானே...?
அளவுக்கு மீறி
அன்புவைத்திருந்த
அனைத்தையும்
விதியிடம்
பறிகொடுத்துவிட்டுத்
துடியாய்த் துடிப்பவள் நான்!
–0–
அன்பைப் பற்றிய
எதனையும்
என்னிடம் போசாதே!
அதன் நாமத்தில்
மீண்டும் மீண்டும்
காயப்பட என்னால் முடியாது!
–0–
ஆனாலும்,
என் உயிரின் சுடர்
நடு நடுங்கி மறையும்போது,
உன் உலகில்
ஒளியை விட்டுவிட்டுப் போவேன்!
வாழ்வை மறுதலித்து
வாழ்கின்ற உன்னை
உலகில் உயிர் வாழ்வதற்காகத்
தயார் படுத்திவிட்டுப் போவேன்!
–0–
உன் பாலைவனப் பயணத்தில்
நிழல் மரமாகக் குறுக்கிட்ட நான்,
தொடரும் உன் பயணத்தில்
ஏக்கமாக இல்லாது
எதிர்பார்ப்பாக இருப்பேன்;
நிழல் தரும் முகிலாக
உனைக் கடப்பேன்!
–0–
நினைத்துப் பார்க்கும் போது,
உன் வாழ்வில்
கண்ணீராகவும்
பெருமூச்சாகவும் இல்லாமல்
நிம்மதியாக இருப்பேன்!
–0–
அறிந்துகொள்வாயாக...!
துயரங்களை எதிர் கொள்ளும்
மனத்தைரியத்தை– அதன்
எல்லைக் கோடுகளைத்
தாண்டிப்போக
விட்டு விடுவாயானால்,
எப்போதும் அழவேண்டுமென்பதே
உனது விதியாகிப் போகலாம்!
–0–
வாழ்க்கையை ஏமாற்றாதே!
விழிநீரை வழியனுப்பு;
மறைந்த புன்னகையை
மறுபடி வரவழைக்க
உன்னால் முடியும்!
–0–

பஹீமா ஜஹான்- மெல்சிரிபுர.

## ஓர் அகதியின் புலம்பல்

அழுகிச் சிதைந்து
நாறிப்போன பிணத்தினுள்
புழுக்கள் புகுந்து
புதினம் பார்ப்பதாய்....
என்னுள் சோகம்!
•••
சோகங்களை!
இறக்கி வைத்து,
அழுது பார்க்கவே
ஓர் ஆசை;
கேவிக் கேவி அழுவதனாலே
அடங்கிப போகுமா சோகம்?
•••
இத்தனை சோகத்திற்குமாய்
எப்படி நான் அழுவது?
அத்தனை துயரையும்
அறுத்தெறியும் படியாய்,
கண்ணீர்த் துளிகூட
கண்வசமில்லையே!
•••
என் பாதைகளெல்லாம்
பாசி(சம்) படிந்ததால்
வாழ்ந்ததை விடவும்
நான் வீழ்ந்ததே அதிகம்!
என் அழுத கதைகள்
அறியும் உன் மனம்!
நான் அலைந்த கதைகள்
அறியுமா நின் மனம்?
•••
வேற்று மதத்தவன்
என்பதால் எனக்கு,
வேறொரு மதத்தவன்
தந்ததிந்த வேதனை!
ஆயின்,
மதங்கள் என்பது
'மனிதம்' அற்றதா?
•••
வேறொரு வேதம்
ஏற்றதால் எனக்கு
வந்தது இந்த
வரண்ட வாழ்வு!
ஆயின்–
வேதங்கள் என்பது
வேதனையூற்றா?
•••
வர்ண வர்ணங்களாய்
கனவு கண்ட நெஞ்சுக்கு,
இன்னுமிந்த–
கவலைகளைச் சுமந்து
தொய்ந்து போக சக்தியில்லை!
•••
அதனால்....
சோகங்களை
இறக்கி வைத்து,
அழுது பார்க்கவே
ஓர் ஆசை;
கேவிக் கேவி அழுவதனாலே
அடங்கிப் போகுமா சோகம்?
•••
பிறந்து புரண்ட
என் ஊரை விட்டும்,
பிரியமாய் வளர்ந்த
என் உறவை விட்டும்,
நான் பிரிந்து போவதே–
'அவர்களின்' பிரியம்;
அதனால் இப்போ,
பிரிந்து போகவே
எனக்கும் பிரியம்!
•••
ஒரு புத்தன்....
ஒரு இயேசு....
ஒரு முகம்மது
ஒரு முருகன்
இவர்களின்–
வெறியர்களில்லாத
தேசமொன்றிற்கு
பிரிந்து போகவே
எனக்கும் பிரியம்;
அங்காவது கொஞ்சம்
அமைதியாக–
வாழ்ந்து பார்க்க....!
•••

தேன்கிண்ணம்

யூயெல் மப்றாக்-
அட்டாளைச்சேனை.

## கடத்திப் போ

உன்னைப் பற்றிய
நெகிழ்ச்சியிலேயே
என் நினைவுகள்
உற்சாகம் பெறுகின்றன!
▫▫
என்– ஆயுளும்
ஆனந்தமும் கூட
உன்னை அறிதலிலும்–
உனக்கென்று
அன்பு செய்வதிலுமே
அடங்கியிருக்கிறது!
▫▫
சலனம்...
சந்தோசம்....
சர்வ சகம் முழுதும்
நீயாகத்தானே
வியாபித்திருக்கிறாய்?
▫▫
விளங்கிக்கொள்...!
என் நேசமும்
நெருக்கமும்
விலகலில் கூட
விலகாமலே இருக்கும்!
▫▫
அல்லும் பகலும்
உன் பெயரை
முணுமுணுத்தபடியே
அவஸ்தையாய்
அலைகிற
கவலைத் தவிப்புகள் கோடி!
▫▫
பிரிவு நெருக்கடியின்
பிடியில்
பிழியப்படுகிறேன்!
அவர்கள்
அழித்தாலும்
ஆசிர் வதித்தாலும்....
பரவசங்கள்
பொங்குகிற
காதலை வணங்கவே
ஆவலுறுகிறேன்!
▫▫
காதலே...! காதலே...!
இந்தக்
காவல்காரர்களைக்
கைது செய்துவிட்டு
நீயாவது
என்னைக் கடத்திப் போ!

மருதூர் அனார்க்கலி

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 140 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

141. இராஜகோபால் விஜிதா
180/2, கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு-14.
142. பாத்திமா ஜுமைனா நஸீர்
109/1, கண்டி வீதி,
வறக்கமுறை, உக்குவளை.
143. எம்.எஸ்.வாணி நளாயினி
11/7பி, ரத்வத்தை மாவத்தை,
பதுளை.
144. கறுப்பையா சிவராஜா
231 1/ஏ, செல்வகந்தை கிராமம்,
பாரதெக்க.
145. எம்.ஆரிப்
888 ஈ, புன்னக்கூடா வீதி,
ஏறாவூர்-3.
146. ரி.நிரோஷன் பெர்னாண்டோ
99, பிரதான வீதி,
அநுராதபுரம்.
147. லெமீனா ஜவ்பர்
25/2, எல்பியன் லேன்,
தெமட்டகொட வீதி, கொழும்பு-9.
148. திருமதி.பூமணி வீரப்பன்
எல்.எல்.டிவிஷன், பீட்ரு எஸ்டேட்,
நுவரெலியா.
149. பி.வித்தியாசாகர்
192/9ஏ, 4ம் தெரு,
உவர்மலை, திருமலை.
150. செல்வி பி.சிவஞானம்
2ஏ, மன்னார் வீதி,
வவுனியா.
151. கே.மஞ்சுளா
55,குருதெனிய வீதி,
அம்பிட்டிய, கண்டி.
152. சண்முகம் மனோகரன்
கல்கந்தை எஸ்டேட்,
அப்புத்தளை.
153. ஏ.எச்.றிஸ்லா
434/ஏ, உஏஹிட்டிவளை,
மல்வானை.
154. திருமதி ரி.பாக்கியலட்சுமி
30, சேவிஸ் றோட்,
புத்தளம்.
155. சி.செந்தில்வாணி
44/14 டீ.சொய்ஸா வீதி,
கொழும்பு-2.
156. மலர்விழி ஆனந்தன்
67, சேர்க்குலர் வீதி,
ஹட்டன்.
157. ஆர்.கணேஷ்
14, பிரதான வீதி,
கந்தப்பளை.
158. பி.யுவிநிரோஜி
வீரபத்திரன் வீதி,
காரைதீவு-2.
159. கே.ஸ்ரீனிவாசன்
280. WELLESEY ST E # 2208 M4X 1G7
TORONTO (ONT), CANADA.
160. செல்வி எம்.எவ்.றிஸானா
ABDULLA-AL THUWAINI P.O.BOX-171
SAFAT-13002, KUWAIT.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## அன்றும் – இன்றும்







அன்று தமிழ் சினிமா உலகில் கவர்ச்சிப் புயலாக வீசிய ஜோதிலட்சுமி இன்று எப்படி மாறிவிட்டார் பார்த்தீர்களா? இன்றும் சற்றும் தளராமல் ஆட ஆரம்பித்திருக்கிறார். ஆனாலும் அந்தநாள்போல் வருமா? இவரது மகள்தான் கவர்ச்சி நடிகை ஜோதிமீனா.

## தாபம்

என்னுள் எழுகிறது
பெரும் தீ.....

எந்த அனுமானும்
மூட்டவில்லை....!

புன்னகை மூட்டிய
தீ....

உன் அருகாமை
மூட்டிய தீ....

உன் கேள்விகள்
மூட்டிய தீ....

எப்படிப் பெண்ணே
அணைப்பேன்?

எந்த நதியில்
மூழ்கி எழுந்தாலும்
இன்னும் எரிகிறதே!

எந்தக் கடலில்
விழுந்து இருந்தாலும்
இன்னும் இன்னும்....

என் உடலின்
வெம்மை கருதி
அருகில் எவரும்
இருப்பதில்லை!

என்னுள் எரியும்
வேட்கைத் தீயை
எப்போது உறிஞ்சுவாய்?

கேட்டபடி
உன்னை அணுகினேன்–
குளிர்மைக்காக!



உன்னுள்ளும் எரியும்
நெருப்பை
கண்டேன்!

சுபா வரன்–கண்டி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(06.07.1997 தொடக்கம் 12.07.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, சஞ்சலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பணக் கஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | மு.ப. 11 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பலவித பேறு, அந்நியர் சகவாசம். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| சனி- உறவினர் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | மு.ப. 10 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, பலவித பேறு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- துன்பம் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, கடன் படல். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் விருத்தி, கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், கடன் தொல்லை. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன். |
| கர்க்கடகம் | - வெள்ளி, புதன். |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

சந்திரன்- கர்க்கடகம், சிம்மம், கன்னி ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம், | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன் - புதிய முயற்சி, பலவித பேறு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நன்மை, பணவரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பணச் செலவு, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தூரஇடப் பயணம், கடன் தொல்லை. | பி.ப. 3 மணி |
| புதன்- வீண் முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனப் பயம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 2 மணி |
| சனி- அந்நியர் சகவாசம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் பேறு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கடன் தொல்லை. | பி.ப. 3 மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |
| சனி- பொருள் விரயம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் உதவி, தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- கடன் சுமை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- குடும்ப மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, கடன் தொல்லை. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தேகசுகம் நன்மை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- கடன் சுமை, மனக் குழப்பம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உறவினர் பகை, தொழில் கேடு. | பகல் 12 மணி |
| புதன்- இனசன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், வீண்குறை கேட்டல். | பி.ப. 1 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. 3. மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7


படிப்பகம்

www.padippakam.com





## வழிகாட்டி மரம்

ஏரும் இன்றி, உழவின்றி,
எடுத்துத் தெளிவித்த விதையின்றி,
நீரும் இன்றி, உரமின்றி
நிலத்தில் முளைக்கும் வண்ண மரம்!

ஆரம் புனைய மலரின்றி
அடியில் ஒதுங்க நிழலின்றி,
தேறும் காய்கள், கனியின்றித்
திசைகள் மதிக்கக் கண்டமரம்!

வேரும் இன்றி, விழுதின்றி
விரிந்த கிளைகள், இலையின்றி,
பாரில் எங்கும் பழுதின்றிப்
பார்க்கக் கிடைக்கும் சின்னமரம்!

பேரூர், சிற்றூர் இவைபோன்ற
பேதம் இன்றி நெடுஞ்சாலை
ஓரம் நின்று வழிகாட்டி
உதவும் கரத்தைக் கொண்டமரம்!

-இளங்குமரன்-

**இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!**

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# இன்னொரு அரிச்சந்திரன்

ஒர் ஊரில் அரிச்சந்திரன் என்பவன் வசித்து வந்தான். அவன் வறுமையில் வாடினாலும் அரிச்சந்திரன் போல உண்மையே பேசுவான்.

அவனிடம் கிளி ஒன்று இருந்தது. அந்தக் கிளியை வாங்குவதற்கு ஒரு பணக்காரன் விரும்பினான். அந்தப் பணக்காரன் அரிச்சந்திரனிடம் வந்து,

"அரிச்சந்திரா! நீயோ வறுமையில் வாடுகிறாய். நீ வளர்க்கும் கிளியை என்னிடம் விற்று விட்டால் உனக்குக் கொஞ்சம் பணம் தருவேன். அதை வைத்துக்கொண்டு நீ ஒரு நாட்கள் கஷ்டமில்லாமல் இருக்கலாம்," என்று கூறினான்.



தனது கஷ்ட நிலையை நன்கு அறிந்துகொண்டு தன்னிடம் இருக்கும் கிளியைக் குறைந்த விலையில் வாங்க அந்தப் பணக்காரன் நினைப்பதைப் புரிந்துகொண்டான் அரிச்சந்திரன். அவன் அந்தப் பணக்காரனிடம்,

"ஐயா! இது ஓர் அதிசயக்கிளி. இதன் காதில் எது கேட்கிறதோ அதை அப்படியே சொல்லும்," என்று கூறி, அதன் விலையையும் சற்றுக் கூடுதலாகச் சொன்னான்.

அரிச்சந்திரன் பொய் சொல்ல மாட்டான் என்பதை அறிந்து பணக்காரன், மறுபேச்சின்றி அவன் கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டு கிளியை வாங்கிக் கொண்டு சென்று விட்டான்.

பல நாட்கள் சென்றன. கிளியை வாங்கிச் சென்ற பணக்காரன் அதற்கு ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லிக் கொடுத்து, அதைத் திருப்பிச் சொல்லச் சொன்னான். ஆனால் கிளி வாயே திறக்கவில்லை.

அந்தப் பணக்காரனுக்கு, அரிச்சந்திரன் மேல் கடுங்கோபம் ஏற்பட்டது. உடனே, நீதிமன்றத்திற்குச் சென்று, அரிச்சந்திரன் பொய் சொல்லி ஏமாற்றி விட்டதாகப் புகார் செய்தான்.

நீதிபதி இருவரையும் நீதிமன்றத்தில் வைத்து விசாரணை செய்ய அழைத்தார்.

நீதிமன்றத்திற்கு வந்த பணக்காரன், அரிச்சந்திரன் பொய் சொல்லி ஏமாற்றி விட்டதாக நீதிபதியிடம் முறையிட்டார். உடனே நீதிபதி அரிச்சந்திரனைப் பார்த்து இவன் சொல்வது உண்மையா என்று கேட்டார்.

"இல்லை ஐயா. நான் இவரிடம் கிளியை விற்கும் போது இதன் காதில் எது கேட்கிறதோ அதை அப்படியே சொல்லும் என்று சொல்லித்தான் கொடுத்தேன். அந்தக் கிளிக்குக் காது கேட்காது. அது கேட்டால் தானே அதைத் திருப்பிச் சொல்லமுடியும்," என்று கூறினான் அரிச்சந்திரன்.

நீதிபதியும், அரிச்சந்திரன் பொய் சொல்லவில்லை, உண்மைதான் கூறினான். என்று தீர்ப்புக் கூறி அவனை விடுதலை செய்தார்.

## வாரம் ஒரு நாடு

### (ஜோர்ஜியா)



முதல் ஜனாதிபதி ஸ்பாய்ட் காங்சகுர்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, முன்னாள் சோவியத் யூனியனின் வெளியுறவு அமைச்சர் எட்வேர்ட் ஷெவர்நாட்ஷே ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார்.

| | |
|---|---|
| தலைநகர் | - திபிலிசி |
| பரப்பு | - 69,700 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 55 இலட்சம் |
| மொழி | - ஜோர்ஜியன், ரஷ்யன் |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - ரூபிள் |
| எழுத்தறிவு | - 99% |
| தனிநபர் வருமானம் | - 850 டொலர் |

**அமைவிடம்:**

பனிமூடிய மலைகள், பெருக்கெடுத்து ஓடும் ஆறுகள், அடர்த்தியான காடுகள், வளமான பள்ளத்தாக்குகள் நிறைந்தது. இதன் மேற்கே கருங்கடலும், தெற்கில் துருக்கி, அர்மீனியா மற்றும் அசர்பைசானும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

முன்னாள் சோவியத் குடியரசுகளில் இருந்தது. 1991 டிசம்பரில் சுதந்திர நாடானது.

**பொருளாதாரம்:**

தேயிலை, எலுமிச்சை, தானியங்கள், திராட்சை உற்பத்தியாகின்றன. உலகில் மங்கனிஸ் உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மது வகைகள், காகித தயாரிப்புக்கள் அதிகமாக உள்ளன.


## மணல் மேடு



உலகின் மிகப் பெரிய மணல் மேடு சகாரா பாலைவனத்தில் உள்ளது. மத்திய அல்ஜீரியாவின் லத் என்ற பகுதியில் உள்ள மணல் மேடு 1411 அடி உயரம் கொண்டது. இந்த மணல் மேடு அடுக்கடுக்காக 5 கிலோமீட்டர் தூரத்திற்குப் பரவி இருக்கிறது.

எகிப்தில் உள்ள பிரமிட்களின் உயரத்தை விட இது மூன்று மடங்கு பெரியது. இந்த மணல் மேட்டைப் பார்ப்பதற்காகத் தினமும் நூற்றுக்கணக்கானோர் லத் பகுதிக்கு வந்து செல்கின்றனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.07.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 200
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 198

பரிசுக்குரியவர்:
ஆர். திலீக்கா,
பெரிய கல்லாறு-01, பெரியகல்லாறு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எ.ஃப். ஷாலின்,<br>நல்லாயன் அரசினர் த.ம.வி., கொழும்பு-13. | டி. டுலிப்,<br>புனித சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை. |
| எம். நளீர்,<br>ஜீலான் மத்திய கல்லூரி, பாணந்துறை. | எஸ். கிருஷ்ணபிரியா,<br>இ.கி. வித்தியாலயம், மண்டூர். |
| நிரோகிஷன் இராஜமோகன்,<br>அரியாலை, யாழ்ப்பாணம். | பி. டிலிஸா,<br>புனித சவேரியார் மகளிர் பாடசாலை, மன்னார். |
| ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ்,<br>கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை. | ஜெ. துஷிந்ரா,<br>வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |
| சி. நவராஜ்,<br>புனித யோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | வி. சத்தியராஜன்,<br>அலெக்ஸாந்த்ரா கல்லூரி, கொழும்பு. |

## விடுகதைகளும் விடைகளும்

1. தாவிப் போகிற தம்பிக்கு முதுகிலே மூன்று சூடு.
   அவன் யார்?
2. இணையாத இருவர் பயணத்திற்கு ஏற்றவர்கள்.
   அவர்கள் யார்?
3. துடிப்பவன் துடிக்காவிட்டால் துயரம்தான்.
   அவன் யார்?
4. சாம்பார் மணப்பதேன், நோயாளி இறப்பதேன்?
5. கல்வீட்டுத்தாத்தா மெதுவாகத்தான் நடப்பார்.
   அவர் யார்?
6. விழுந்தாலும் குதிப்பான், அடித்தாலும் குதிப்பான்.
   அவன் யார்?
7. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம்.
   அது என்ன?
8. திறந்ததை மூட முடியாது.
   அது என்ன?
9. ஒற்றைக்கண்ணன்- கூரான உடம்புக்காரன்.
   அவன் யார்?
10. மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள்.
    அவள் யார்?

**விடைகள்**

1. அணில் 2. தண்டவாளம்
3. இதயம் 4. பெருங்காயத்தால்
5. ஆமை 6. பந்து
7. வளையல் 8. தேங்காய்
9. தையல் ஊசி 10. தவளை.

தொகுப்பு: ஏ. அகல்யா,

## உலகில் தமிழ் பேசுவோர்

உலகளவில் தமிழ் பேசுபவர்கள் சுமார் 7 கோடியே ஒரு இலட்சம் பேர் இருக்கின்றனர். உலகில் தமிழ் பேசப்படும் இடங்களும், தமிழ் பேசுவோர் தொகையும் வருமாறு:

| நாடு | தொகை |
|---|---|
| 1. இந்தியா | 5,14,52,000 |
| 2. இலங்கை | 38,00,000 |
| 3. மலேஷியா | 18,00,000 |
| 4. பர்மா | 3,00,000 |
| 5. ரியூனியன் | 2,50,000 |
| 6. சிங்கப்பூர் | 2,20,000 |
| 7. மொராக்கோ | 1,50,000 |
| 8. பிரிட்டன் | 1,00,000 |
| 9. ஃபிரான்ஸ் | 1,00,000 |
| 10. அமெரிக்கா | 60,000 |
| 11. கனடா | 52,000 |
| 12. இந்தோனேஷியா | 50,000 |
| 13. சவுதி அரேபியா | 34,000 |
| 14. மர்டானிக் | 15,000 |
| 15. கென்யா | 15,000 |
| 16. ஐக்கிய அரபு குடியரசு | 10,000 |
| 17. ஃபிலிப்பைன்ஸ் | 7,000 |
| 18. தென் ஆபிரிக்கா | 6,600 |
| 19. சீனா | 6,000 |
| 20. ஃபிரெஞ்ச் கயானா | 5,500 |
| 21. தாய்லாந்து | 5,000 |
| 22. இத்தாலி | 5,000 |
| 23. ரஷ்யா | 3,000 |
| 24. தென் வியட்னாம் | 3,000 |
| 25. குவாடிலோப் | 3,000 |
| 26. தான்சானியா | 3,000 |
| 27. ஜப்பான் | 1,000 |
| 28. எத்தியோப்பியா | 800 |
| 29. தென் கொரியா | 500 |
| 30. உகாண்டா | 500 |
| 31. எகிப்து | 500 |
| 32. செனகல் | 500 |

(வேறு சில நாடுகளும் தமிழர் தொகையும் இதில் அடங்கவில்லை)

## சிறுத்தையின் வேகம்

விலங்குகளில் அதிவேகமாக ஓடக்கூடியது என்ற பெருமை சிறுத்தையையே சேரும். இது புலிக்குடும்பத்தைச் சேர்ந்தது என்றாலும் தனி இனமாகவே கருதப்படுகின்றது. குறுக்கும், நெடுக்குமாக ஓடுவதில் சிறுத்தைக்கு நிகர் வேறு எதுவுமில்லை.



முதல் 4 மீட்டர் தூரத்திலேயே 50 கிலோமீட்டர் வேகத்தைச் சிறுத்தை எட்டிவிடும். அடுத்த மூன்று மீட்டரை எட்டுவதற்குள் அதன் வேகம் 90 கிலோமீட்டரைத் தொடும். 10 மீட்டர் தூரத்தை நெருங்கும்போது அதிகபட்ச வேகமான- மணிக்கு 104 கிலோமீட்டர் என்ற நிலையைத் தாண்டும்.

தனது ஓட்ட வேகத்தால் துரத்தும் இரையை குறுகிய தூரத்திற்குள் வேட்டையாடிவிடும். சிறுத்தையின் வேகத்திற்குக் காரணம் அதன் நீண்ட கால்களும், வளைந்து கொடுக்கும் முதுகெலும்பும், தொடைப்பகுதித் தசைகளின் மூலம் கிடைக்கும் சக்தியும்தான்.

புலிக்குடும்பத்தில் எல்லா விலங்குகளுக்குமே, கால் நகங்களைத் தேவையான அளவு நீட்டிக்கொள்ளவும், சுருக்கிக் கொள்ளவும் இயலும். இதற்கு சிறுத்தை மட்டும் விதிவிலக்கு. இவை தம் விரல் நகங்களைச் சுருக்கிக்கொள்வதில்லை.

சிறுத்தைகள் தனித்து வாழ்வதில்லை. கூட்டுக் குடும்பமாகவே வாழ்கின்றன. இவற்றின் நடையும், தோற்றமும் கம்பீரமாக இருக்கும். தலை சிறியதாக இருக்கும். நரி ஊளையிடுவதைப் போலவே சிறுத்தை ஒலி எழுப்பும்.

## டாங்கிகள் (TANKS)

இன்று போர்க்களத்தில் பயன் படுத்தப்படும் டாங்கிகள் முதன் முதலில் 1900ம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் பிளவர்கோ என்பவரால் வடிவமைக்கப்பட்டன. அப்போது இவர் தயாரித்த இந்த டாங்கிகள் நீராவியால் இயக்கப்பட்டன.

முதலாம் உலகப் போரில் தான் முதல் தடவையாக டாங்கிகள் பயன் படுத்தப்பட்டன. 1916ல் இங்கிலாந்து டாங்கிகள் ஃபிரான்ஸில் சாகசம் செய்தன. டாங்கிகளுக்கு உண்மையில் நிலக் கப்பல்கள் என்று பெயர்.





படிப்பகம்

www.padippakam.com





மைத்ரேயி ரிஸீவரை வைத்துவிட்டு கோபம் கொந்தளிக்கும் மனதோடு ஹாலை நோக்கி வந்தாள். மூளைக்குள் கேள்விகள் வெடித்தன.

'ஃபோனில் யார் அவள்?'

'அவளை எப்படிக் கண்டுபிடிப்பது?'

சோபாவில் காத்திருந்த தமிழ்ச்செல்வி புன்னகையோடு மைத்ரேயியை ஏறிட்டாள். "பேட்டியைக் கண்டினியூ பண்ணலாமா...?"

"ஸாரி.."

"ஏன்...?"

"ஃபோன்ல ஒரு அவசர மெஸேஜ். நான் கொஞ்சம் வெளியே போக வேண்டியிருக்கு..."

"அப்படியா...? மறுபடியும் பேட்டியை எப்போ வெச்சுக்கலாம்..?"

"ரெண்டு நாளைக்குள்ள நானே உங்க பத்திரிகை ஆபீஸுக்கு ஃபோன் பண்ணி என்னிக்கு வரணும்னு சொல்றேன்."

"ஓ....கே... தேங்க்யூ..." தமிழ்ச்செல்வி எழுந்து வெளியேறினாள். அவள் பார்வையை விட்டு மறையும் வரை அப்




படியே நின்றிருந்த மைத்ரேயி பின் வாசல் கதவைச் சாத்திவிட்டு டெலி ஃபோனுக்கு வந்தாள்.

கையில் ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயலில் எண்களை ஒத்தினாள்.

மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

"ஹலோ..."

பாஸ்கரின் குரல் கேட்டது.

"பாஸ்கர்...!"

"என்ன மைத்ரேயி...?"

"உங்ககிட்ட உடனடியா கொஞ்சம் பேசியாகணும்."

"ரொம்பவும் அவசரமா....?"

"ஆமா..."

"வீட்டுக்கு வரட்டுமா?"

"வேண்டாம்...."

"பின்னே எங்கே...?"

"கூட்டமில்லாத ஏதாவது ஒரு இடத்துக்கு போயிடலாம்."

"சரி... போட் க்ளப் ரோட்டுக்கு உன்னோட காரை எடுத்துட்டு வந்துடு. பேனியன் அவென்யூக்குள்ளே போயிட்டா இந்நேரத்துக்கு யாரும் இருக்க மாட்டாங்க..."

"வர்றேன்..."

"எத்தனை மணிக்கு புறப்படறே...?"

"இன்னும் ஒரு அரைமணி நேரத்துக்குள்ளே அங்கே இருப்பேன்...."

"என்ன குரல் ஒரே டென்ஷனா இருக்கு..."

"டென்ஷன்தான்.... நேர்ல வந்து சொல்றேன்." மைத்ரேயி ரிஸீவரை வைத்துவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு போர்ட்டிக்கோவுக்கு வந்தாள்.

காத்திருந்த மாருதிக்குள் நுழைந்து ட்ரைவிங் சீட்டை ஆக்கிரமித்து இக்னீஷியனை உசுப்பிக் கிளப்பினாள்.

★★★

போட் க்ளப் ரோடு.

பேனியன் அவென்யூ அந்த மத்தியான நேரத்தில் ஆள் சந்தடியின்றி நிசப்தமாய் இருந்தது. காற்றுக்கூட தயங்கித் தயங்கி வீசியது.

அடர்த்தியாய் ஆலமரங்கள் மண்டிய அந்த பகுதிக்குள் காரை நுழைத்த மைத்ரேயி, ஒரு பெரிய மரத்துக்குப் பின்னால் போய் நிறுத்தினாள். பாஸ்கரன் கண்களில் படவில்லை.

மைத்ரேயி ஸ்டீயரிங்கை பிடித்தபடி ட்ரைவிங் சீட்டுக்கு சாய மனசுக்குள் டெலிஃபோன் பேசிய பெண் வந்தாள்.

'யார் அவள்....?'

'எனக்குத் தெரிந்தவளா...?'

'இல்லை... தினேஷுக்கு தெரிந்தவளா-?'

யோசனைகளில் பத்து நிமிஷம் கரைந்திருந்தபோது, பைக் படபடக்கும் சத்தம் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள்.

பாஸ்கர்தான்!

பைக்கை நிறுத்திவிட்டு காருக்கு வந்தான் பாஸ்கர்.

"என்ன மைத்ரேயி.... உம் புருஷன் டெல்லி போயிட்டானா... இல்லையா...?"

"அவர் போய்ட்டார்..."

"சரி...! என்ன ப்ராப்ளம்....?"

"ஒரு பொண்ணு டெலிஃபோன் பண்ணி மிரட்டிக்கிட்டிருக்கான்னு சொன்னேனே...?"

"ஆமா..."

"அவளை யார்ன்னு உடனடியா நாம கண்டு பிடிக்கணும் பாஸ்கர்... இல்லேன்னா நாம நிம்மதியா இருக்க முடியாது...."

"இன்னிக்கு மறுபடியும் ஃபோன் பண்ணியிருந்தாளா?"

"ஆமா..."

"என்ன சொன்னா....?"

"உம் புருஷன் டெல்லிக்குப் போயிருக்கிற தைரியத்துல உன் தாலிகட்டாத புருஷனோடு ஆட்டம் போடக்கூடாது. எனக்கு ஆயிரம் கண்கள். எந்த தப்பை நீ பண்ணினாலும் சரி, என்னோட கோர்ட்டுக்கு அந்த தப்பு வந்துடும்ன்னு துணிச்சலா பேசறா...."

"பணம் ஏதாவது கேட்டாளா....?"

"இல்லையே. அப்படி ஏதாவது பணம் கேட்டாலும் குடுத்துடலாமே... அவ ப்ளாக் மெயில் பண்றது பணத்துக்காக இல்லை. நான் தாலிகட்டின புருஷனுக்கு துரோகம் செய்யக்கூடாதாம்..."

# கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

"இதுவா அவளோட கோரிக்கை?"

"ஆமா...?

"இவ்வளவு அக்கறை எடுத்துக்கிறவ நிச்சயமா உனக்கோ, உன் புருஷனுக்கோ தெரிஞ்சவளாத்தான் இருக்கணும்... குரலை நல்லா அப்சர்வ் பண்ணியா...?"

"பண்ணினேன்."

"குரல் பிடிபட்டதா...?"

"இல்லையே... எவ்வளவு முயற்சி பண்ணியும் குரல் பிடிபடவேயில்லை..."

உதட்டைக் கோணலாய்க் கடித்துக் கொண்டு சில விநாடிகள் யோசித்த பாஸ்கர் பின் நிமிர்ந்தான்.

"மைத்ரேயி! என் மனசுக்குள்ளே இப்போ சின்னதா ஒரு சந்தேகப் பொறி தோணியிருக்கு.."

"சொல்லுங்க..."

"உன்னோட புருஷன் டெல்லிக்குப் போகிற விஷயம் உனக்கு எப்போ தெரிஞ்சுது...?"

"சுமார் ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி."

"இந்த டெல்லி விஷயம்... உனக்கு ஃபோன் பண்ணின இந்த பொண்ணுக்கும் தெரிஞ்சிருக்கு..."

"ஆமா..."

"அதுவும் இவ்வளவு சீக்கிரத்துல...."

"ஆமா..."

"உன் புருஷன் டெல்லி போற விஷயம் இவ்வளவு சீக்கிரத்துல தெரியணும்ன்னா... அந்தப் பொண்ணு உன் புருஷனுக்குப் பக்கத்துலதான் இருக்கணும்."

மைத்ரேயி அதிர்ச்சியாய் நிமிர்ந்தாள்.

"பாஸ்கர்! நீங்க என்ன சொல்றீங்க...?"

"டெலிஃபோன்ல பேசின பெண் ரொம்பத் தூரத்தில் இல்லை. உன் புருஷனோட ஆபீஸுக்குள்ளதான் இருக்கணும்."

"ஆபீஸிலா...?"

"எஸ்... அங்கே வேலை பார்க்கிற பெண்ணாக இருக்கலாம். உன் புருஷனோட டெல்லி விசயம் இவ்வளவு சீக்கிரம் ஒரு பொண்ணுக்குத் தெரியணும்ன்னா இது ஒண்ணுதான் சாத்தியம்...."

மைத்ரேயி தலையசைத்தாள்.

"எனக்கு நீங்க சொல்றதுதான் சரின்னு மனசுக்குப் படுது; ஆனா..."

"என்ன...?"

"ஆபீஸில் கிட்டத்தட்ட எழுபது பெண்கள் வெவ்வேறு செக்ஷன்ல வேலை பார்க்கிறாங்க... அதுல யார்ன்னு கண்டு பிடிக்க முடியும்?"

"கொஞ்சம் முயற்சி செஞ்சா முடியுமே...?"

"எப்படி....?"

"நீ ஆபிஸுக்கு அடிக்கடி போறதுண்டா?"

"இல்லை... எப்போதாவது... போவேன். ஆயுத பூஜை ஃபங்ஷனுக்குப் போறதுண்டு..."

"டெலிஃபோன்ல பேசின பெண்ணோட குரல் உனக்கு ஞாபகம் இருக்கா?"

"இருக்கு..."

"சரி.... இப்பவே நீ ஆபிஸுக்குப் புறப்பட்டுப் போ."

"போயி...."

"அங்கே வேலை செய்யற பெண்கள் கிட்ட கேஷுவலா பேசிப்பாரு..."

"இத்தனை நாளும் இல்லாத வழக்கமாய் இன்னிக்கு திடீர்ன்னு ஆபீஸுக்குப் போய் பேசினா நல்லாயிருக்குமா?"

"நீ கம்பெனியோட முதலாளி மனைவி! உன் புருஷன் டெல்லிக்குப் போயிருக்கிற இந்த நேரத்துல ஆபீஸைப் பார்த்துக்கற மாதிரி அங்கே போலாமே..."

"இருந்தாலும்..."

"இதோ பார்... மைத்ரேயி... இந்த தயக்கமெல்லாம் இருந்தா உண்மைகளை கண்டுபிடிக்க முடியாது... நாம இப்போ இக்கட்டான நிலமையில் இருக்கோம்... எப்படியாவது முயற்சிபண்ணி நம்மை ஸ்மெல் பண்ணிட்ட அந்தப் பெண்ணைக் கண்டுபிடிச்சு இல்லாமே செய்யணும். உண்மை தெரிஞ்ச அவளை விட்டு வெச்சா... நாம நிம்மதியா இருக்க முடியாது."

"சரி... நான் ஆபீஸுக்குப் போய் எப்படி பிஹேவ் பண்ணணும்..?"

"ஆபீஸ்ல உன் புருஷனோட ரூம்ல போய் உட்கார்ந்துக்க. மானேஜரைக் கூப்பிட்டு ஆபீஸ் எப்படி நடக்குதுன்னு கேளு... ஆபீஸையும் ஃபேக்டரியையும் சுத்திப் பார்க்கணும்ன்னு சொல்லு. அவர் கூட்டிட்டுப் போவார். போ, ஆபீஸைப் பார்க்கிற மாதிரி அங்கே வேலை செய்யற ஒவ்வொரு பெண்ணோட முகபாவத்தையும் கவனி. அதுல ஏதாவது ஒரு பட்சி மாட்டும்."

"முகபாவத்தை வெச்சு எப்படிக் கண்டுபிடிக்கிறது?"

பார்த்தாலே தெரியும். உனக்கு ஃபோன் பண்ணி பேசின பெண் அங்கே இருந்தா அவ கொஞ்சத்துக்கு கொஞ்சமாவது டென்ஷன் ஆவா. அந்த டென்ஷனே நமக்கு போதும்.... இது ஒரு முயற்சி தானே?"

"ம்....ம்....ம்....ம்.."

"என்ன யோசனை...?"

"இது வொர்க் அவுட் ஆகுமா...?"

"போய்ப் பார்த்தாதானே தெரியும்?"

★★★

**கா**ரை அங்கிருந்து கிளப்பிக் கொண்டு மைத்ரேயி ஆபீஸ் போய் சேர்ந்தபோது, மத்தியானம் மூன்றுமணி.

மூன்று மாடிகளைக் கொண்ட அந்த ஆபீஸ் சத்தமில்லாமல் இயங்கிக் கொண்டிருந்தது. பின்பக்க கார்டன் பராமரிப்பில் இருந்தது.

காரை போர்டிகோவில் சொருகி விட்டு மைத்ரேயி கீழே இறங்க, கண்ணாடிக்கதவருகே நின்றிருந்த வாட்ச்மேன் வணக்கம் தெரிவித்துவிட்டு பவ்யமாய் கதவைத் திறந்துவிட்டான்.

உள்ளே நுழைந்தாள்.

டெலிஃபோன் பேசிக்கொண்டிருந்த அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர் ரிஸீவரை அப்படியே வைத்துவிட்டு ஓடோடி வந்தார்.

"குட்... ஈவினிங் மேடம்!"

**(தொடர்ந்து வரும்)**

## இதுவரை

தினேஷ்—மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்ற விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயியிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு போன் வருகிறது. போனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி— பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்டுகிறது. போனில் மிரட்டுவது யார் என்று தெரியாமல் மைத்ரேயியும், பாஸ்கரும் குழம்புகின்றனர்.

வேலை விடயமாக தினேஸ் திடீரென டெல்லி புறப்படுகிறான். திலகம் பத்திரிகை உதவி ஆசிரியர் மைத்ரேயியை வீட்டில் பேட்டி காண வருகிறார். பேட்டி நடுவே மீண்டும் போனில் அதே பெண் மிரட்ட, மைத்ரேயி கோபமடைகிறாள்.

**இனி...**

## அரங்கம்













பெயர்: யூ.ராஜு.
வயது: 24
முகவரி: பிரதான வீதி, காரைதீவு-07.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: வி.நிர்மலாதேவி.
வயது: 23
முகவரி: ZIP.CODE-32076, P.O.BOX-4560, HAWALLI, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: எஸ்.பஞ்சலிங்கம்.
வயது: 38
முகவரி: REST FREI HOF, ST GALLER STR.4, MORSCHWIL -9402, SWITZERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எல்.பௌஸர்.
வயது: 20
முகவரி: பமுனுகம, முறியகடவல, ககடகஸ்திகிலிய.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ்.அனஸா.
வயது: 20
முகவரி: 54, ஏ.பி.எச்.ஒழுங்கை, காத்தான்குடி-06.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம்.ஹஸன்.
வயது: 41
முகவரி: P.0.BOX-13001, SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், சினிமா.

பெயர்: எம்.றுவைஸ்.
வயது: 22
முகவரி: மன்னார் வீதி, மாங்குளம், நேரியகுளம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.பௌனி.
வயது: 19
முகவரி: 39, ஹிஜ்ரா கொலனி, வறக்காமுர, உக்குவளை.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, கதைப்புத்தகம்.

பெயர்: எஸ்.ஜெயகணேஷ்.
வயது: 17
முகவரி: 234, பிரதான வீதி, இரத்தினபுரி.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. முகுந்தன்.
வயது: 20
முகவரி: 492/6, காலி வீதி, கொழும்பு-06.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: வை.திலீப்குமார்.
வயது: 19
முகவரி: 104, பிரதான வீதி, நோர்வூட்.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: ஏ.கரீம்.
வயது: 18
முகவரி: 25, பிரதான வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

www.padippakam.com

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பாசமாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்களா மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேசனும் தேடிவருகிறான். கட்டு வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள். **இனி...**

# கனவு மெய்ப்பட வேண்டும்

## பிரபஞ்சன்

## அத்தியாயம் 18



ஓர் இரவு மீட்டிங் முடிய இரவு பதினொன்றரை ஆயிற்று. சுமதி புறப்பட்டாள். இடையில் தன் அலுவலகத்துக்குத் தொடர்பு கொண்டு கார் அனுப்பி வைக்கச் சொல்ல மறந்து போயிருந்தாள் சுமதி. சக அதிகாரியும், அவள் மேல் மரியாதையும் அன்பும் கொண்ட தர்மராஜன், "மிஸஸ் கணேசன்... நான் உங்களை வீட்டில் 'டிராப்' செய்கிறேன். நானும் அந்தப் பக்கம்தானே போகவேண்டியிருக்கிறது," என்றார். தயங்குவது நன்றாக இருக்காது என்பதாலும், சக அதிகாரிக்கு அது இழுக்காகவும் இருக்கும் என்பதாலும் சுமதி ஒப்புக் கொண்டாள்.

துரதிர்ஷ்டம் என்பது இதுதான் போலும். கணேசன் வாசலிலேயே அமர்ந்திருந்தான்.

சுமதி கார்க் கதவைத் திறந்து கொண்டு கீழ் இறங்கி நின்று தர்மராஜனைப் பார்த்து "நன்றி" என்றாள். அதே சமயம், கணேசன் அங்கு வந்து நின்றான். ஒரு மரியாதை கருதி, சுமதி கணேசனைத் தர்மராஜனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

"இவர் மிஸ்டர் கணேசன். இவர் மிஸ்டர் தர்மராஜன்." கணேசன் தர்மராஜனிடம் கேட்டான்:

"மிஸ்டர் தர்மராஜன், என் மனைவி இந்த அளவுக்கு அழகாய் இல்லாமல் இருந்தால், நீங்கள் அவளைக் காரில் டிராப் பண்ண முன் வந்திருப்பீர்களா? அல்லது ஆணாக இருந்தால்: இந்த உதவியைச் செய்திருப்பீர்களா?"

தர்மராஜன் என்கிற கௌரவமிக்க, நடுவயது அதிகாரி அவமானத்தால் சிறுத்துப் போனார். அவர் சொன்னார்:

"செய்வேன் மிஸ்டர் கணேசன்! இந்த உதவியை அவர் பெண் என்பதால் செய்யவில்லை. என் சக அதிகாரி என்பதால் செய்தேன்."

"பொய் சொல்லாதீர்கள்! நீங்கள் எல்லாம் இவளைச் சுற்றி எதற்கு அலைகிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா? இவள் சிவப்புத் தோல். நீங்களும் சிவப்புத் தோல். என்னைப் பாருங்கள். நான் கறுப்புத்தான். இவளை நம்பாதீர்கள். சரியான ராட்சசி. ஜாக்கிரதை!" என்றான் கணேசன்.

பதில் பேசாமல் போய்ச் சேர்ந்தார் தர்மராஜன்.

அலுவலகம் புறப்பட்டுக் கொண்டிருந்தாள் சுமதி. கணேசன், பனியன், லுங்கியோடு கட்டிலில் படுத்திருப்பதைக் கண்ட சுமதி, கேட்டாள்,

"என்னங்க..... காலேஜ் போகலையா?"

அவன் அமைதியாய் சொன்னான்,

"ஒரே சோர்வாய் இருக்கிறது.... எங்காவது போய் வரலாம் என்று தோன்றுகிறது. இன்று மதியம் கோவை எக்ஸ்பிரசுக்கு இரண்டு டிக்கெட் புக் பண்ணியிருக்கிறேன். கிளம்பு" என்றான் அவன் கறாராக.

"ஐயையோ, என்னங்க இது. திடீரென்று சொன்னால் எப்படி? இன்றும் நாளையும் மீட்டிங் இருக்கே...."

அவன் பக்கத்தில் இருந்த ஃபோனில் என்னவோ எண்களைச் சுழற்றினான். மறுமுனையில் பேச்சு கேட்டதும் அவன் சொன்னான்,

"நான் கணேசன் பேசுகிறேன். சுமதி என் மனைவி. அவளுக்கு உடம்பு சரியில்லை. இன்னும் ஒரு வாரத்துக்கு அலுவலகம் வரமாட்டாள். சரியா?... என்னது? முக்கியமான மீட்டிங்கா? ஏ! எல்லாம் எனக்குத் தெரியும்பா! உங்களுக்கு மீட்டிங் என்றாலே, ஸ்வீட்டும் முந்திரிப் பருப்பும்தானே! இல்லை, உங்கள் மீட்டிங் முடிந்த பிறகு இந்த நாட்டு மக்களின் தலையெழுத்தே மாறிவிடப் போகிறதா? ஃபோனை வையுங்கள்!" என்று ரிசீவரை வைத்தவன், அவளிடம் சொன்னான்,

"கிளம்பு."

அவள் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டு நின்றாள்.

**ர**யில், விரைந்துகொண்டிருந்தது. பயணம் முழுவதும் புத்தகத்தில் மூழ்கி இருந்தாள் அவள். அவன் உறங்கிக் கொண்டிருந்தான். அவ்வப் போது மனசைக் கவ்வி இழுக்கும் இயற்கைக் காட்சிகள் எவையாவது தென்படும். அதை எவரிடமாவது சுட்டிக்காட்டி ரசிக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றும். அவனோ உறங்கிக் கொண்டிருப்பான். கோவையில், ஒரு டாக்சி ஏற்பாடு செய்து கொண்டு ஊட்டிக்குப் பயணம் ஆனார்கள். மலையில் ஏறும்போதே இருட்டிக்கொண்டு வந்தது. அதோடு உடலை ஊடுருவும் பனியும் சேர்ந்து கொண்டது.

"ஏங்க வண்டியைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்களேன்."

"எதுக்கு?"

"சூட்கேசில் கோட் இருக்கு; சால்வையும் அதில் இருக்கு. டிக்கியில் தானே சூட்கேஸ் இருக்கு. வண்டியை நிறுத்தி அதைக் கொஞ்சம் எடுத்துக் கொடுங்களேன்."

"குளிரால் ஒன்றும் செத்துடமாட்டாய்." என்றான் கணேசன். தன் கோட் பட்டனைப் போட்டுக் கொண்டான். வெடவெடவென நடுங்கிக் கொண்டே வந்தாள் சுமதி.

அறைக்குள் வந்து சேர்ந்த பிறகு ஹீட்டரைப் போட்டாள். கட்டிலில் இருந்த கம்பளியை எடுத்துத் தன் உடம்பில் சுற்றிக் கொண்டாள் அவள். குளிர் அவளைக் கொன்றுவிடும் எனும்படி அவள் அரை உணர்வு நிலையை இழந்து, நடுங்கிக் கொண்டிருந்தாள். கணேசன் அவளைக் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல், பாத்ரூமுக்குள் சென்றான். கால் மணி கழித்து, அவன் குளியல் அறையிலிருந்து ஆவி பறக்க வெளியே வருகையில், சுமதி முடங்கிய படி, கம்பளிக்குள் புதைந்திருந்ததைக் கண்டான் கணேசன்.

"ஏய் சுமதி, எழுந்திரு" என்று கத்தினான்.

சுமதி திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

"கிளம்பு... கொஞ்சம் வெளியே போய் வரலாம்."

"ஐயோ... எனக்கு உடம்பே சரியில்லீங்க. ஜுரம் காய்கிற மாதிரி இருக்கு. தயவு செய்து என்னைத் தூங்க அனுமதியுங்களேன்."

"நாயே! தூங்குவதற்கா இவ்வளவு செலவு செய்து கொண்டு இங்கு வந்திருக்கிறோம்? கிளம்பு!" என்று கத்தினான் அவன்.

அவள் சிரமப்பட்டு எழுந்து அமர்ந்தாள். பெட்டியைத் திறந்து கோட்டை எடுத்து அணிந்து கொண்டாள். சால்வையைப் போர்த்திக் கொண்டாள்.

அவன் அறையைச் சாத்திக் கொண்டு படி இறங்கினான். அவள் அவனைப் பின் தொடர்ந்தாள். வரவேற்பில் இருந்த ஒருவரிடம், கார் ஒன்றை வாடகைக்குக் கேட்டு எடுத்துக்கொண்டான் கணேசன்.

அவர்கள் காபியும், தேயிலையும் சரியாக வளர்ந்து நிற்கும் தோட்டங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். நிலவு காய்ந்து கொண்டிருந்தது. நிலவொளியில் தேயிலைத் தோட்டங்கள் பசுமையில் பொங்கி வழிந்து கொண்டிருந்தன. திடீரென்று அமைதியைக் குலைத்துக் கொண்டு அவன் கேட்டான்:

"சுமதி என்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்....?"

அவள் திகைத்தாள். எதற்கு இந்தக் கேள்வி? ஜாக்கிரதை உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது.

"நான் உங்களை விரும்பித்தான் கல்யாணம் செய்து கொண்டேன்."

"இப்போதும் என்னை விரும்புகிறாயா?"

"இதென்ன கேள்வி. விருப்பம் அடிக்கடி மாறும் பொருளா?"

"அப்படியானால் நான் சொல்வதைக் கேட்பாயா?"

"என்ன சொல்லுங்கள்."

"நீ வேலையை விட்டு விட்டு வீட்டோடு இரு."

அவள் தீர்மானமாகச் சொன்னாள்:

"இதை கல்யாணத்துக்கு முன் சொல்லியிருந்தால் நான் உங்களைத் திருமணமே செய்து கொண்டிருக்கமாட்டேன்."

"என்னைவிட உனக்கு வேலை முக்கியமா?"

"வேலையையும் உங்களையும் ஒப்பிடாதீர்கள். அது தெய்வங்களை ஒப்பிடுவது மாதிரி. எனக்கு இரண்டும் வேண்டும்."

"நீ ஒண்ணைத்தானே தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும்!"

"என்னங்க. இந்த வேலை எவ்வளவு பெரிய பொறுப்புள்ள வேலை. இதனால எவ்வளவு நல்ல காரியங்கள் செய்யலாம்? அதை விட என்னால் முடியாது."

கார் சட்டென்று நின்றது. அவன் இறங்கி அவள் பக்கம் நடந்து வந்தான்.

"இறங்கு!" என்றான் அவளைப் பார்த்து.

அவள் இறங்கினாள்.

"இங்கேயே கிடந்து செத்துப் போ."

அவன் வண்டியில் ஏறி அமர்ந்து, அதை ஓட்டிக்கொண்டு மறைந்தான்.

அவள் வயிற்றில் பயம் கவ்வியது. எப்பக்கம் நோக்கினும் இருட்டு கண்ணைக் கூசிற்று. உயிர்பொருள் எதுவும் அவளுக்கு அங்கிருக்கும் என்று தோன்றவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக அவள் தன் நினைவு மறந்தாள். மயங்கி பாதையிலேயே விழுந்தாள்.

* * *

"உங்கள் பெயர் என்னம்மா?"

மயக்கம் தெளிந்த சுமதி சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒரு பெரிய வீட்டின்மாடி அறையில் தான் படுத்திருந்தது அவளுக்குத் தெரிந்தது. அவளை ஒத்த வயதுடைய பெண் ஒருத்தி கட்டிலில் அமர்ந்திருந்தாள். டாக்டர் என்று தோன்றிய, ஸ்டெதஸ்கோப் மாட்டிய இளைஞன் ஒருவனும், பெண்ணுக்குக் கணவனாக இருக்கக்கூடும் என்று தோன்றிய ஒருவரும் கட்டிலின் அருகில் நின்றிருந்தார்கள்.

"சுமதி"

"அந்தத் தனியான வழியில், ஆள் அரவம் அற்ற இடத்தில் மயங்கி விழுந்து கிடந்தீர்களே, எப்படி?"

சுமதி அந்தச் சூழ்நிலையை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்தாள். பிறகு சொன்னாள்:

"நானும் என் கணவரும் காரில் வந்தோம்...."

"அப்புறம்?"

தனக்கும் கணவனுக்கும் இடையே நடந்த குடும்பச் சண்டையை மூன்றாம் மனிதர்களுக்குச் சொல்ல வேண்டுமா என்று தோன்றியது அவளுக்கு.

"எப்படியோ நான் மயங்கி விழுந்து விட்டேன்." என்றாள் அவள்.

"தங்கள் கணவர் எங்கு போனார்?"

"ஓட்டலில் இருப்பார்."

"எந்த ஓட்டலில்."

"ஓட்டல் பாக்ஸ்."

"கணவர் பெயர்?"

"மிஸ்டர் கணேசன்."

"நான் போய் ஓட்டலுக்குப் ஃபோன் செய்துவிட்டுவர்றேன்." என்றவாறு அந்த இளைஞன் நகர்ந்தான்.

டாக்டராகத் தோன்றிய இளைஞன் சொன்னான்:

"நீங்கள் தாய்மை அடைந்திருக்கிறீர்கள். இப்படியெல்லாம் நடப்பது உங்கள் உடலுக்கு மட்டும் இல்லை, குழந்தையின் உடம்புக்கும் சரியாகாது."

அவளுக்கு அழ மட்டுமே முடிந்தது.

அந்த இளம் பெண் அவள் தலையில் தடவிக் கொடுத்தாள்.

அந்த டாக்டர் சொன்னார்:

"நான் கொடுத்த மாத்திரைகளைச் சாப்பிடச் சொல்லுங்கள். தேவைப்பட்டால் மாலை வருகிறேன்."

அவர் புறப்பட்டுப்போன பிறகு அந்தப் பெண் சொன்னாள்:

"சுமதி. என் பெயர் ஜெய்சி. என் கணவர் சச்சு என்று நான் கூப்பிடும் சச்சிதானந்தம். இருவரும் இங்குள்ள ஒரு கல்லூரியில் விரிவுரையாளர்களாக வேலை பார்க்கிறோம். சரி. இப்போது சொல்லுங்கள். உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் ஏதாவது தகராறா? நாங்கள் ஏதாவது உதவமுடியும் என்றால், சந்தோஷமாகச் செய்வோம். எங்களை நீங்கள் நம்பலாம். மனம்விட்டுப் பேசலாம்."

சுமதியின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"சொல்லுங்கள்."

"எனக்கும் என் கணவருக்கும் கொஞ்சம் மனவருத்தம்தான்."

"நான் எதிர்பார்த்தேன். எதுவானாலும் கவலைப்படாதீர்கள். நீங்கள் வேலை பார்க்கிறவரா?"

"ஆம்."

"என்ன வேலை?"

சொன்னாள்.

ஜெய்சி திடுக்கிட்டாள். அவள் முகம் தீவிரம் அடைந்தது.

(தொடர்ந்து வரும்)

# பொழுது விடியும்

## சௌம்யா

**வே**ணியை எழுப்பிக் குளிப்பாட்டி தலைக்கு எண்ணெயிட்டுப் பின்னலிட்டாள். சேரிப்பகுதியில் வசித்தாலும் திருமணத்திற்கு முன் கிராமத்தில் வாழ்ந்ததால், எதுவுமே நறுவிசாக இருக்க வேண்டும் அன்னத்திற்கு.

மகளுக்கு முதல் நாள் ஆட்டிவைத்திருந்த சாமை அரிசி மாவில் தோசை வார்த்துப் போட்டாள். சாப்பிடும் மகளின் முகத்தையே பெருமையோடு பார்த்தாள்.

வேணியின் வாத்தியாரம்மா, அவள் நன்கு படிப்பதாகச் சொன்னாள். அன்னமும் அவளூரில் ஐந்தாமாண்டுவரை படித்திருக்கிறாள். பொம்பளப்புள்ளைங்களுக்கு அதுவே அவளூரில் பெரிய படிப்பு.

'நம்ம தலையெழுத்து குடிகாரங்கிட்ட மாட்டிக்கணும்னு. நம்ம பொண்ணையாவது எந்த பாடுபட்டாவது டீச்சராக்கிடணும். புள்ள படிக்கிறமட்டும் படிக்கட்டும். அவசரப்பட்டு கல்யாணங்கட்டி வைக்கக் கூடாது. அந்த ஆள் என்ன அடிச்சு, உதைத்தாலும் சரி. அடி தான் நமக்குப் பழகிப் போச்சே. புதுசாவா அடி வாங்க றோம் பயப்படறதுக்கு?' என்று எண்ணியவள் மகளின் தலையைப் பிரியமாகத் தடவினாள்.

சாப்பிட்டு முடித்த மகள் எதையோ சொல்லத் தயங்குவது தெரிந்தது. "என்ன ராசாத்தி, என்ன வேணும்? மிட்டாய் வாங்க காசு வேணுமா? இந்தா" என்று சுருக்குப் பையை அவிழ்த்து பத்துச் சதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"அதில்லம்மா, நீ அன்னிக்கு வேல செய்யற வீட்டில இருந்து காய்குழம்பும், அரிசிச்சோறும் கொண்டாந்தியே. அந்த சோறு ரொம்ப நைசா தொண்டையில இறங்கிறதே தெரியல்லம்மா.

நம்ம ஊட்லயும் ஒரு நாளைக்கு அந்தக் குழம்பும் சோறும் ஆக்கும்மா. நிறைய திங்கலாம். தினமும் பாணும், ரேஷன் அரிசியும் சாப்பிட்டு சலிச்சுப் போச்சும்மா." என்று கெஞ்சிய மகளைப் பரிவோடு பார்த்த அன்னம்,

"சரிம்மா, இன்னிக்கு எனக்கு சம்பளம் தருவாங்க. உனக்காக நம்ப பாய் கடைல நல்ல அரிசி அரைகிலோ வாங்கி சோறும், குழம்பும் ஆக்கி வைக்கிறேன். இப்ப என்



கண்ணு, திங்கறதப் பத்தி நினைக்காம பள்ளிக்குப் போய் வருவியாம்!" என்று மகளை சமாதானப்படுத்தி அனுப்பினாள்.

நினைப்பை செயலாக்க எண்ணியவள், மீனாம்மா வீட்டிற்குச் சென்று வேலையைப் படபடவென்று செய்தாள். அந்தம்மா கரெக்டாக ஒவ்வொரு மாசமும் 7ந் தேதி சம்பளம் தந்து விடுவார்கள். ஆனால், வேலை செய்யும் இடத்திற்கே வந்து தலையைச் சொறிந்தவாறு பணத்தை வாங்கி விடுவான் அவள் புருஷன்.

இவளும் வீட்டுக்கார அம்மாவின் முன் அடி வாங்க அவமானப்பட்டுத் தந்துவிடுவாள்.

அன்றைக்கு ஏனோ குழந்தையின் ஆசையை நிறைவேற்ற கணவனிடம் பொய் சொன்னால் பரவாயில்லை என்றிருந்தது.

மீனாம்மாவிடம் நிலைமையை எடுத்துச் சொன்னாள். அவள் நிலைக்கு இரக்கப்பட்டு, வந்து நின்ற வீரண்ணனிடம் "தான் இன்னும் சம்பளம் தரவில்லை" என்று கூறிவிட்டாள் மீனாம்மா.

மூச்சுமுட்டக் குடிக்கலாம் என்ற ஆசையில் வந்தவன் ஏமாற்றத்தில் பல்லை நறநறவென்று கடித்தவாறு சென்றான்.

மனதுள் இன்றிரவு கிடைக்கப்போகும் பூஜையை நினைத்து ஒருகணம் நடுங்கியவள், 'இதென்ன நமக்குப் புதுசா, இந்தக் கட்டை அடிவாங்கி மரத்துப் போனதுதானே!' என்று மீதமிருந்த பாத்திரத்தைக் கழுவச் சென்றாள்.

எஜமானியம்மா தந்த சம்பளப் பணத்தில், ராசாத்தியுடன் சென்று ரேஷன்கடையில் சிலபொருட்கள் வாங்கினாள். பின் மளிகைக் கடையில் நல்ல அரிசி அரைகிலோவும் மசாலா செலவு 2 ரூபாய்க்கும் வாங்கினாள்.

"என்னடி வீட்டுல விசேஷமா? தினமும் 100 கிராம் கத்திரிக்கா, கொத்தவரங்காய்க்கு மேல வாங்கமாட்டே: இன்னிக்கு இங்கிலிஷ் காயெல்லாம் வாங்கிறியே?" என்று அதிசயத்த முத்தம்மாவிடம் தன் பெண்ணின் ஆசையைக் கூறி விட்டு வீட்டுக்குச் சென்றாள்.

ஸ்கூலிலிருந்து மகள் வருவதற்குள் சூடாக மசால்குழம்பு வைத்தாள். சாப்பாட்டுப் பாத்திரத்தை கஞ்சி வடிவதற்காக அடுக்களையில் கவிழ்த்து வைத்தாள்.

வந்த மகளிடம், "குட்டி நீ உங்கப்பன் வரதுக்குள்ள சூடா சாப்பிட்டுரு. கஞ்சி வடிஞ்சதும் சோறு போட்றேன். நீ நிதானமா, வயிறார சாப்பிட்டுட்டு விளையாடப் போயிடு. குடிக்கக் காசு தரல்லேன்னு ரகளை பண்ண வருவான். நீ கை, கால் கழுவிட்டு வா!" என்று சோற்றுப் பானையை நிமிர்த்த குத்துக்காலிட்டு அமர்ந்தாள்.

அந்த நிமிஷம் உள்ளே நுழைந்த வீரண்ணன்,

அவளின் முடியைப்பற்றி இழுத்துப் போட்டான். "ஏண்டி, தடிக்கழுதை. சம்பளமே தரல்லைன்னு பொய் சொல்லிட்டு இங்கு அம்மாவும், மகளும் விருந்தா ஆக்கி சாப்பிடுறீங்க. என்ன திமிருடி உனக்கு? எச்சக்கலநாயே!" என்று எட்டி அவள் வயிற்றில் உதைத்தவன், அதே காலால் சோற்றுப் பானையையும் எட்டி உதைத்தான்.

சோறு, அடுக்களையெங்கும் பரவியது. ஆசையாய் மகள் திங்கயிருந்த சோறு சேற்றில் பரவியது கண்டு அன்னம் பதறினாள். மகளின் அழுகையும், பாலாய்ப் பரவிய சோறும் கண்டு பயங்கரமான ஆவேசம் வந்து விட்டது அன்னத்திற்கு.

"டேய் வீரண்ணா!" என்று மரியாதை விட்டு அழைத்தாள். "இதோபாரு, இத்தனை நாளு இந்த மஞ்சக்கயித்த நீ கட்டிப்புட்டான்னு மரியாதைக்குக் கட்டுப்பட்டு அடி, உதையைத் தாங்கிட்டு வாழ்ந்து கிட்டிருந்தேன். என்னிக்கு அநியாயமா, குடிக்க காசு தரலன்னு எம்புள்ள ஆசையா சாப்பிட இருந்த சோத்தை மண்ணுல எட்டி உதச்சியோ உனக்கும் எனக்கும் உள்ள உறவு இன்னியோட அத்துப் போச்சு.

இனிமே இந்த வீட்டுக்குள்ள நீ கால எடுத்து வெச்ச, சோத்துச் சட்டிய உதைச்ச கால வெட்டிடுவேன். ஜாக்கிரதை! இந்த மஞ்சக் கயித்தையும் இப்பவே கழட்டி எறிஞ்சிடுவேன்; ஆனா இத எனக்கு ஒரு காவலா மட்டும்தான் வைச்சிக்கிறேன்; மரியாதையா நீ வெளியே போயிடு!" என்று உரக்கக் கத்தினாள்.

இத்தனை காலம்-வாய் பேசாமல் அடி வாங்கியவள் இன்று எரிமலையாய்ப் பொங்கிய ஆவேசம் கண்டு பயந்த வீரண்ணன் வேகமாக வெளியேறினான்.

பயந்து நடுங்கிய மகளை அணைத்து ஆசுவாசப்படுத்தியவள், "கவலைப் படாதே, கண்ணு உனக்கு நான் நாளைக்கு இதே மாதிரி சோறாக்கிப் போடறேன் தாயி. தத்தாரி தகப்பன் போயிட்டான்னு கவலைப்படாதே. தோள்மேல தாங்கி உன்னை வளர்க்கிறேன்!" என்று மகளைத் தொடைமீது படுக்க வைத்தாள்.

சிறிதாக எரிந்த சிம்னி விளக்கு வெளிச்சத்தில் மோட்டுவளையை சிறிது நேரம் வெறித்துப் பார்த்தவள், நாளைய பொழுது விடிந்தவுடன் பலமாக உழைக்க உடலைத் தயார் செய்ய கையையே முட்டுக் கொடுத்து- அடி, உதை வாங்காமல்- பல வருடம் கழித்து- நிம்மதியாய் உறங்கிப் போனாள்.



படிப்பகம்

www.padippakam.com

# ரவுன்ஸ்

## ரவுன்ஸ்ச கீழேபோடுவோம் என்று நினைக்க பின்னால ஜீப் சத்தம் கேட்டுது....

மழை பெஞ்சு தண்ணி ஓடி ஓஞ்சுபோன வாய்க்கால்ல தான் அந்த ரெண்டு ரவுன்சும் கிடந்துச்சு. ஒண்ணோட ஒண்ணு இணைஞ்சு, இணைஞ்ச இடத்தில கறள் கட்டிப்போய் கிடந்துச்சு. முதல்ல எடுக்க பயமாத்தான் இருந்திச்சு. பிறகு என்ன ஆனாலும் ஆவட்டுமுன்னு எடுத்து பக்கட்டுக்க போட்டுட்டன். இந்த ரவுன்ஸ்ச வைச்சு பள்ளிக்கூடத்தில என்னப் பெரியாளா காட்டிக்கணும் எண்ட நினைப்பிலதான் எடுத்து வைச்சிக்கிட்டன். வகுப்பில எல்லாரும் என்னச்சுத்தி நிக்கிறப்போதான், அலட்சியமா எடுத்துக்காட்டணும். எனக்கு எல்லாம் தெரிஞ்சமாதிரி அலட்டிக்காம நிக்கணும். ஒவ்வொருத்தனும் ஒவ்வொன்னு சொல்லுவான். ஏ.கே.47 ரவுன்ஸ்னுவான், ரீ.56 ரவுன்ஸ்னுவான். எல்லாரும் சொல்லு மட்டும் பொறுமையாக இருந்திட்டு, ஒருத்தரும் சொல்லாத துவக்கிட பேர் சொல்லி அதோட ரவுன்ஸ்னு சொல்லணும். ரவுன்ஸ்ச வாங்கி அலட்சியமா பொக்கட்டுக்க போட்டுக்கணும். முக்கியமா கணக்கு வாத்திக்கு நான் ரவுன்ஸ் கொண்டு வந்தத தெரியப்படுத்தணும். அப்பத்தான் கணக்கு வாத்தி அடிக்கேக்க சாடயா முறச்சுப் பார்த்தா அதோட அடிக்கிறத விட்டாலும் விட்டிடுவார்.

அப்பருக்கு தெரியாமத்தான் வீட்ட கொண்டே வைக்கணும். அப்பருக்குத் தெரிஞ்சுதெண்டா முதுகு பிஞ்சிடும். அண்ணாச்சி கள்ளக் கரண்டெடுக்க கொண்டந்த வயற கொல்லையில கிண்டித்தாட்டவர், ஆமி ரவுண்டப்பண்ணினா புடிச்சிட்டுப் போகும் என்று. நான் ரவுன்ஸ் வச்சிருக்கிறது தெரிஞ்சுதெண்டா கொல்லையில ரவுன்ஸ்சுக்குப் பதில் என்னதான் புதைச்சிடுவார்.

பதுங்கி பதுங்கி வீட்டுக்கு போகேக்க அப்பர் இல்ல, அம்மா தான் குசினிக்க நிக்கிற சத்தம் கேட்டுது. விறு...விறு எண்டு வீட்டுக்க பூந்து முதல் வேலையா கொப்பி நடுப்பக்கத்தாளக் கிழிச்சு அதில ரவுன்ஸ்ச சுத்தி, புத்தக பேக்கிண்ட அடிப்பக்கத்தில வச்சிட்டன்.

♦□□□♦

பெட்டிக் கடக்காரர்- ரவுண்டப் போல கிடக்கு எண்டு கத்திக்கொண்டு போனார். நெஞ்சு விறைச்சுப் போச்சு. கை, கால் எல்லாம் நடுக்கம் புடிச்சிட்டுது. என்ன செய்யிறதெண்டு தெரியாம விறைச்சுப் போனன். அம்மாதான் குசினிக்க நிண்டு கத்தினா, "டேய் தம்பி பள்ளிக்கூடம் போற மாதிரி புத்தக பேக்க தூக்கிட்டுப் போடா!" டக்கெண்டு வெளிக்கிட்டு புத்தக பேக்கையும் தூக்கிக் கிட்டு எங்கட ஒழுங்கையால வந்து சந்தியில ஏறினன். நாலஞ்சு ஆமிக்காரன்கள் துவக்கோட நிக்கறாங்க. எனக்கு பயம் புடிச்சிட்டுது. துணிஞ்சு விறு....விறு... எண்டு



-கௌரிபாலன்-

நடக்கிறன். அவங்கள் என்னக் கவனிச்ச மாதிரி இல்ல. கொஞ்சம் தள்ளிப் போய் பஸ்சுக்கு நிக்கிறன். பஸ் ஒண்டு வேகமா வருது. அவங்களப் பார்த்தபடியே பஸ்ஸ மறிச்சு அதில ஏறிற்றன்.

ஏறினாப்பிறகுதான் தெரியுது அது ஆமி பஸ்சுண்ணு. ஆனா ஒருத்தரும் என்னப் பார்க்கல்ல என்ர புத்தக பேக்கத்தான் முறைச்சு முறைச்சு பாக்கிறாங்க. பஸ் வேகமாப் போகுது. டக்கெண்டு செக் பொயிண்டுக்கு முன்னால நிக்குது. பஸ்ஸில இருந்து வதவத எண்டு இறங்கிட்டன். பஸ் வேகமாப் போயிட்டுது. பஸ்சால இறங்கி னோன்ன ரவுன்ஸ்சத் தூக்கி கீழ போடுவம் என்னு நினைச்சன். ஆனா செக் பொயிண்டுக்கு முன்னால நின்னு புத்தக பேக்க திறக்கக் கூடாது. ஏனெண்டா, முந்தி ஒருத்தர் செக் பொயிண்டுக்கு முன்னால நின்று வெத்தில போட, இடுப்பில இருந்து வெத்தில பேக்க உருவினவராம், அவர் இடுப்பில இருந்து துவக்க எடுக்கிறார் என்னு நினைச்சு சுட்டுப் போட்டாங்களாம். அதால தள்ளிப் போய் பேக்கத் திறப்பம் என்னு, விறு விறு என்னு நடக்கிறன். செக் பொயிண்டுல நிண்டவங்களும் ஒண்ணுங்கேக்கேல்ல. தள்ளிப்போய் நின்னு பேக்கத் திறந்து ரவுன்ஸ்ச எடுத்துட்டன்.

ரவுன்ஸ்ச கீழ போடுவம் என்னு நினைக்க பின்னால ஜீப் சத்தம் கேக்குது. திரும்பிப் பார்க்கிறன். இரண்டு ரவுன்ஸ் இணைஞ்சமாதிரி இரண்டு கூர் முன்னால நீட்டினாப்போல, இங்கிலீஸ் படத்தில வாறப் போல ஒரு ஜீப் வேகமா வருது. உத்துப் பார்க்கிறன்; கணக்கு வாத்தி முன்னாடி இருந்து கத்துறார். "அவன்தான்... அவன் தான்..." கால் தள்ளாட தள்ளாட வேகமாக ஓடுறன். அதவிட வேகமா ஜீப் துரத்துது. விடாம ஓடிக்கொண்டே இருக்கிறன்.

திடீர் என்னு முன்னால எங்கட வகுப்பு மொனிட்டரும் நாலஞ்சு வகுப்புப் பொடியன்களும் என்ன பிடிக்க வாறாங்கள். அவங்களை எல்லாம் தள்ளி விட்டுட்டு ஓடுறன். பின்னால கணக்கு வாத்தியும், மொனிட்டரும் தொடர்ந்து துரத்துறாங்கள். எனக்கு மூச் சிரைக்குது, இனி ஓடேலாது என்னு நினைக்க, முன்னால பள்ளிக்கூட வாசல் தெரியுது. பள்ளிக்கூட வாசல தள்ளிக் கொண்டு உள்ள ஓடுறன். பள்ளிக்கூட தோட்டக்காரன் பூப்பாத்திக்கு தண்ணி அடிச்சுக்கொண்டு நிக்கிறான். படக்கெண்டு கதவத் தள்ளி உள்ள வந்ததால, "ஆர்றா அவன்?" என்னு கத்திக் கொண்டு தோட்டக்காரன் திரும்ப, கைல இருந்த பைப் தண்ணி என்ர உடுப்பெல்லாம் நனைச்சுப் போட்டுது.

உடம்பில மெல்ல குளிர் பரவ திடுக் கிட்டுப் போய் முழிச்சுப் பார்க்கிறன்; எல்லாம் இருட்டாக் கிடக்குது. கண்டது முழுக்க கனவுன்னு நினைக்க சந்தோசமா இருந்துச்சு. உடம்பெல்லாம் நனைஞ்சு போயிருக்குதுன்னு பாத்தா....தலமாட்டில வைச்சிருந்த தண்ணிச் செம்பு உருண்டு போய்க் கிடக்கு. நிமிர்ந்து மேசையைப் பாக்கிறன். குளத்தில கழுத்தளவு தண்ணியில எருமை தலையை மட்டும் மேல தூக்கிட்டு அமைதியா நிக்குமே... அது போல மேசையில புத்தக பேக் அமைதியா இருக்குது- இருட்டில தெரியுது. விடிஞ்சதும் முதல் வேலையா கொல்லையில கிண்டி இரண்டு ரவுன்சையும் தாக்கோணும் என்னு நினைக்கிறன். ஊர் முழுக்க நாய் கண்ட மாதிரியும் குரைக்குது. விடிய ரவுண்டப் போட்டாலும் போடுவாங்க என்னு நினைக்க, உடம்பு எல்லாம் கூதல் எடுத்து நடுங்குது.

---

## "எனக்கு இழப்புன்னு சொல்ல ஏதுமில்லை" என்றான் சுரணையற்று.

வன்னிப் பிரதேசத்துக்குரிய செஞ்சிலுவைச்சங்க ஊழியனாக வந்த நான் ஒவ்வொரு அகதிமுகாமாகப் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன்.

இரட்சிக்கப் போகும் இரட்சகனைக் கண்ட எழுச்சியில் மலர்ந்தவர்கள், சோகத்தில் புரண்டு கிடந்த அப்பாவி ஜனங்கள். நம்பிக்கை எதிர்பார்ப்புக்கள் மின்ன, தத்தம் இழப்புக்கள் ஒவ்வொன்றையும் அழுகை, அரற்றல்களுக்கிடையே சொல்லிக் கொண்டார்கள். நிறையவே எதிர்பார்ப்புக்கள்...!

ஒவ்வொரு இழப்புக்களுக்குள்ளும் இரத்தம் தோய்ந்த வடுக்கள் அழுத்தும் வலிப்பு புரையோடிக் கிடந்தது.

எந்தவொரு முகத்திலும் நிம்மதி,

# இருந்ததும் போச்சு..!



ஜெயமணி

சந்தோசத்தின் ரேகை மெல்லியதாகக்கூட நிழலிடவில்லை.

அத்தனை வேதனை நிறைந்த விழிகளை இதுவரை உணராததுபோல் ஒரு விசனம் படர்ந்தது என்னுள்.

பெற்றோர்களை, பிள்ளைகளை, அண்ணனை, தங்கையை ஒத்தையாக, குடும்பமாக சொத்துக்களை, வீட்டை, தோட்டத்தை இவற்றுள்ளே வாழ்க்கையைத் தொலைத்துவிட்டோமென்ற நியாயமான ஏக்கங்கள்...

சே...! போர் என்ற தலைப்பில் இப்படியொரு துயரச்சுமைகளை எதுக்காக சுமத்துகிறார்கள்.? எதைச்சாதிக்க நினைக்கிறார்கள்.? மனித உரிமைகளை நசுக்கி, மிதிச்சு நடந்து சென்று எதை நிலை நாட்டப்போகிறார்கள்? மனித நேயத்தையா? மனித உடல் மீது ஏறி நின்று மானிட தர்மத்தை, தார்மீகக் கொள்கையைத்தக்கவைக்கப்போகிறார்களா?

என்னிதயம் புலம்பியது.

ஒவ்வொரு குடிசையாக வந்து இறுதியில், அந்தக் குடிசையை நெருங்கும்போது இப்படியொரு வேதனை என்னைத் தொடக் காத்திருக்கிறது என நினைக்கவில்லை.

ஏற்கனவே நொந்து கிடந்த என் உணர்வுகள் அந்த நிமிசத்தில் உடைந்துப்போய் விட்டது.

முதலே எனக்கவன் நன்கு பரிச்சயமானவனாயிருந்தும் சட்டென்று அடையாளம் காணமுடியவில்லை.

அவனாகவே "ஐயா என்னைத் தெரியலியா?" எனக்கேட்டான். உற்றுப்பார்த்த என்னுள் அதிர்வலைகள் எழுந்தன.

"சபா...நீ...நீ....நீயா?"

என் குரல் மாறிக் கரகரப்பில் அமுங்கியது.

என்னைவிட ஒரு ஐந்தாறு வயசு சின்னவன். என்வேலை கருதி ஐயா என மரியாதையாகவே அழைப்பான். அவனது தன்னம்பிக்கையில் எனக்கு நிறையவே மரியாதையுண்டு. யாழைவிட்டு அகதிகளாக வெளியேறுவதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் அவனைக் கண்டிருக்கிறேன். "சுதந்திரமாக, நம்ம கையாலை உழைச்சு சாப்பிடறதே ஒரு தனி சுகம். பிறருடைய தயவிலை வாழ்றது அவமானம். அதுவே என்னுடைய குறையை எனக்கு நிதமும் உணர்த்துவது போலாகிவிடும்."

"இந்நிலையில் முடியுமா?" என நான் வியப்புடன் கேட்ட ஒரு சமயம் அவன் பட்டென்று கூறியதும் என் மதிப்பில் மேலும் உயர்ந்து நின்றதும் ஞாபகத்துக்கு வந்தது.

ஏனென்றால் பிறவியிலே இரண்டு கால்களும் சூம்பியவன். பிறரிடம் இடிபட்டு வாழ விரும்பாத மனசுமட்டும் புத்தம் புதிய தெம்புடன் இருந்தது. இப்போது உணர்ச்சியற்று இறுகிப்போன முகமும், சோர்வடைந்த கண்களுமாக, சூனியத்துள் புதையுண்டு எதற்குமே இலாயக்கற்ற ஜடமானதொரு முண்டமாக அவன்.

என்னுள் புரண்டெழுந்த உணர்வலைகளை வாய்விட்டுச் சொல்ல முடியாதவனாக அவனைப் பார்த்தேன்.

"எனக்கு இழப்புன்னு சொல்ல ஒண்ணுமேயில்லை!" என்றான் சுரணை அற்று.

எனக்குள் வியப்பு.

பலமாகச் சிரித்தான். சிரிப்பில் கோடி துயரம் கொப்பளித்தது. "ஆண்டவன் ஏற்கனவே அரை குறையாத்தந்த கால்களையே எடுக்கணும் எனத் தீர்மானிச்சுட்டான். இதுக்கு மேல் இழக்க என்ன இருந்தது என்னிடம்?" எனக் கேட்டபோது அவனது உணர்வுகள் வெடித்துச் சிதறலை ஏற்படுத்தியதை விழிகளில் உருண்டு தள்ளுவண்டிக்குள் துண்டிக்கப்பட்டுக்கிடந்த தொடைகள் மீது விழுந்த கண்ணீர்த்துளிகள் உணர்த்தின.

துன்ப நெருப்புள் விழுந்து துடித்து நின்றவனின் அந்த வார்த்தைகள் தந்த துயரச் செறிவு என்னுள் பற்றிக் கொண்டது.

என்ன விபரத்தை சேகரித்து எவருக்குக் காட்டியென்ன, யார் எதைச் செய்யப்போகிறார்கள்? எல்லோரையும் ஏமாற்றும் ஒரு வித்தை அது. வெறுப்புடன் என் கைகளில் கனத்துக்கொண்டிருந்த விபரங்களடங்கிய தாள்களைக் கிழித்தெறிந்துவிட்டு நின்றேன். உள்ளே தீ புயலாக வீசிக் கொண்டிருக்கிறது. அது என்றோ ஒருநாள் இவைகளை எரித்துப் பொசுக்கிவிட்டுத்தான் அடங்குமென என் உள்ளுணர்வுகள் எனக்கு உணர்த்திக் கொண்டிருந்தன.

---

# காலப் பழி

"முதலில் நீ நம்பித்தானாகணும் நான் சுத்தம்தான். உன் மகளை நீயே சந்தேகப்பட்டால்!"

'ஏண்டி இப்படியாச்சு...? சொல்லடி எப்படி உனக்குத் தொடர்பு?'

'.....................'

"அங்கையும் மௌனமாகவே இருந்தாய்; இங்கும் அப்படியே இருந்தால் என்னடி அர்த்தம்? ஏண்டி 'உன் புத்தி இப்படிப் போச்சு?"

இரண்டு கைகளினாலும் தலையில் அடித்துக் கொண்டு தாய் புலம்பியது அவளுக்குள் எரிச்சலாக இருந்தது. இல்லாததையும் பொல்லாததையும் உருவாக்கி தாயே தன்னை இக்கட்டில் ஆக்கிவிடுவாளோ என்ற அச்சம் அவளிடம் மேலோங்கியிருந்தது. உள்ளூர அதிகமாகவே தயங்கிக்கொண்டாள்.

"இப்போ நீயேம்மா வீணா கத்துறே...?"

"வீணாக் கத்துறேனா! அடியே நீயும் ஒரு தாய் நிலைமைக்கு வந்த பின்னர்தாண்டி உனக்கு இது புரியும். எவ்வளவு சிரமப்பட்டு அந்த இடத்தை உனக்கு பேசிமுடிச்சிருக்கேன் என்று நல்லாத் தெரிஞ்சிருந்தும் இப்படியாயிடுச்சே. அவங்க முகத்துல நான் விழிக்காத படியாக்கிட்டியேடீ. தட்டுமாத்தி, திகதியெல்லாம் குறிச்சு, தாலிக்குப் பொன் உருக்கக்கொடுத்த பின்னர் சர்வசாதாரணமாக கல்யாணத்தை பிறகு பார்த்துக்கலாம் என்று சொன்னவுடன் நான்பட்ட அவஸ்த்தை யாருக்குடி புரியப்போகுது...? பிறகு பார்க்கலாம் என்றால் என்னடி அர்த்தம்! இந்த சம்பந்தமே வேண்டாம் என்று ஒதுங்குவது தானே? ஐயோ கடவுளே! என்ன சோதனை? ஏன் எங்களுக்கு இப்படி?"

"அலட்டாதம்மா. இப்போ என்னை என்ன செய்யச் சொல்றே....?" சற்று ஆத்திரப்பட்டதை அவள் முகம் தெளிவாக்கியது.

"அதுதான் உன்கிட்ட நான் கேட்கிறேன் ஏன் இப்படியாச்சு....?"

"நான் ஒண்ணும் இஷ்டப்பட்டுச் செய்யல. தேவையில்லாத கேள்விகளையெல்லாம் கேட்டு வீணா அவன்கள் என்னைத் தொடர்பு படுத்திப் போட்டானுகள்."

"என்ட ஆத்திரத்தைக் கிளறாதே. ஏண்டி! ஊருக்குள்ளே எத்தனையோ ஆயிரக்கணக்கான குமருப்பெட்டைகளெல்லாம் இருக்கும் போது குறிப்பா உன்னைமட்டும் என்றால்....! யாரடி இதை நம்புவாங்க?"


"முதல்ல நீ நம்பித்தான் ஆகணும். நான் சுத்தம்தான். உன்ட மகளை நீயே சந்தேகப்பட்டால் ஊரார் ஏன் சந்தேகப்படாமல் இருக்கப் போகிறார்கள்....?"

"அடியே இது சந்தேகமில்லடி- வயிற்றெரிச்சல். இங்க எல்லாக் குமருகளும் நிம்மதியா இருக்கும்போது எண்ட மகள்ட வாழ்க்கை மட்டும் சீரழியப்பாக்குதே எண்ட வயிற்றெரிச்சல். இனிமேல் நீதான் நிம்மதியாக வாழ்ந்திட முடியுமா...?"

"..........................."

"முடியாதுடி. அது உன்னால் முடியாது. இனிமேல் உனக்கு, எனக்கு, நம்ம முழுக்குடும்பத்திற்குமே நிம்மதி இருக்காது."

தாயோட வார்த்தைகளில் உண்மை பகிரங்கமாகத் தெரிவதையுணர்ந்து கொண்டாள். தன்மீது வீணே வீழ்ந்த பழியை எப்படித்தான் மற்றவர்களுக்குப் புரியவைப்பது என்ற பிரச்சனையை விட தன்னைச் சுற்றிப் படரவிடப்பட்டுள்ள பிரச்சனை மீண்டும் தன்னைத் தாக்கி தன் எதிர்கால வாழ்வை சீரழித்துவிடக்கூடாது என்ற எண்ணமே அவளிடம் மேலோங்கியிருந்தது. இரண்டு நாட்களுக்குள் எத்தனை பேர்கள் வந்து விசாரித்துவிட்டுப் போயுள்ளார்கள். வந்தவர்களுள் எத்தனை பேர்கள் எப்படியான எண்ணங்களுடன் போயுள்ளார்கள்



தி. இளையவன்

என்பதை யார்தான் அறிவார்கள். இரண்டு நாட்களாக வெளியில் தலை காட்டாமல் உள்ளே இருந்தவள் ஒருமுடிவுக்கு வந்தாள். யார் எது சொன்னாலும் பரவாயில்லை. இன்று தொடக்கம் வீட்டைவிட்டு வெளியே சென்று வழமையான கடமைகளை நிறைவேற்றியே தீருவது என்று முடிவுக்குள்ளானாள்.

"அம்மா....!"

"சாப்பாட்டை எடுத்து வை! நான் வேலைக்குப் போகவேண்டும்."

தீயை மிதித்தது போன்ற அதிர்ச்சியுடன் முகத்துக்கு நேரே மகளை நிமிர்ந்து பார்த்து, பார்வையினால் எரித்தாள்.

"வேலைக்குப் போகப்போறியா...? அப்போ மான அவமானங்களைப் பற்றி எந்தக் கவலையும் உனக்கில்லை! அப்படித் தானே...?"

"ஐயோ அம்மா நீ என்ன விசர் கதை கதைக்கிறே....? இதுல மான அவமானம் என்ன கெட்டுப் போகப்போகுது? எனக்கு மட்டுமென்ன இது புதுசா? அல்லது நான் மட்டும் தான் இப்படியா....?"

"அம்மாடி நான் உன்னோட வாதத்திற்கு வரவில்லை. என்ட செல்லம் சந்தோசமா நல்லதொரு இடத்தில வாழணும்! அதுதான் என்ர ஆசை. இப்போ பெயர் கெட்டுப் போய் நிற்கின்ற உன்னோட எதிர்காலத்தை நினைச்சுத்தான் கலங்கிப்போய் புலம்புகிறேன்."

மகள் பதட்டப்படாமல் நாற்காலியை விட்டு எழுந்து, கலைந்திருந்த கூந்தலை ஒன்று கூட்டி விரல்களினால் உருட்டியெடுத்து, 'கேரளா' அமைப்பில் உச்சிக் கொண்டை போட்டுக்கொண்டே தாயை நெருங்கினாள்.

தாயின் தலையைத் தடவி முகத்தில் வழிந்திருந்த கண்ணீர்க்கோடுகளை அழித்த பின்னர், தாயின் தலையைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். இரண்டு உள்ளங்களுக்குள்ளும் சற்று அமைதி நிலவியது.

"அம்மா! அந்த விசயத்தை நான் வெளியில் சொன்னால் யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதனாலதான் மௌனமாக இருந்து பழியைச் சுமந்துகொண்டேன். உன் கிட்ட அதை நான் சொல்லித்தானே ஆக வேண்டும்!. வழக்கமா நான் வேலைக்கு போகும்போது 'பஸ் ஸ்டாண்ட்' சந்தியில் இருந்து ஒருவன் எப்பவும் 'லவ் பன்றியாடீ, வாறியாடீ' என்றெல்லாம் தரக்குறைவா கேட்பான்.

ஒருநாள் வீதியென்றும் பார்க்காமல், பஸ் ஸ்டான்டில் அதிகமான ஆட்கள் இருக்கும்போதே, என்னை மறந்த நிலையில், காலில் இருந்து செருப்பைக் கழட்டி "இதால தான் பதில் கிடைக்கும்" என்று சத்தமாகவே சொன்னேன். அன்று முதல் அவன் தொல்லையிருக்கவில்லை. பின்னாடிதான் எனக்கு எல்லாமே புரிஞ்சது." மகளின் கண்ணீரைத் தாய் அழுத்தமாகவே துடைத்து விட்டாள். தனது நெஞ்சுடன் அவள் தலையை அணைத்துக் கொண்டு,

"பிறகு என்ன செல்லம் நடந்திச்சு...?"

"பயங்கரவாதிகளுக்கு நான் சப்போர்ட் என்று என்னை கைது செய்து நாலைந்து நாட்களாக அடைச்சு வைத்திருந்த நாளெல்லாம் அவன் கூட்டுக்குள்ளே வந்தான். "பதிலாடி சொன்னாய்? அதுக்கு இதுதான் தண்டனை!" என்று சொல்லி சிரிச்சுக்கிட்டே போயிடுவான். எனக்கு அப்போதான் தெரிந்தது அவன் அவைக்கு தேவைப்பட்ட ஆள் என்று." மகளின் விம்மலுடன் தாயின் சோகமும் கலந்தது. நாளை அவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை யாரறிவார்....?


படிப்பகம

www.padippakam.com

# இலக்கிய நயம்



## கவிதை

ர
சி
க
ன்

கிளைவிட்டு கிளைதாவும்
மந்தியைப் போல்
என் மனம் தாவக் கண்டேனடி!

உறைவிட்டுக் கிளம்புகின்ற
வாள்போல்
உன் விழி பாயக் கண்டேனடி!

இடிகேட்டு மிரள்கின்ற
நாகம்போல்
எனைக் கண்டு ஏன் பயந்தாயடி?

திருவோடு ஏந்தி வந்த
யாசகன் நான்
அருளோடு காதல் தருவாயடி!

பூங்கொத்து நீயென்றால்
பொன்வண்டு நானாவேன்!
தாங்கென்று நீ படர்ந்தால்
நான் இங்கு மரமாவேன்!

முன்னிரண்டு மோகமுள்
மூடிவைத்ததும் ஏனோ சொல்?
செப்புக் கலசமோ செவ்விளநீரோ
என கம்பனும் எறிந்தான் கல்!

கண்ணோடு கண் கலக்க
கள்ளோடு கள் கலக்கும்
என் நெஞ்சுக்குள் ஊற்றெடுக்கும்
மண்மீதில் ஊன்றாமல் கால் பறக்கும்!

தோள்மீது பாய்ந்த விழி
துளைக்கக் கண்டேன்
வேல் விழியோ-வில் விழியோ
காமன் கூடத்தில் கடைந்தெடுத்த
கொல் விழியோ- பதில் உடனே
சொல் கிளியே!

மின்னல் கண்டு மலரும்
என்பார் தாழம்பூவை.
பூ முகத்தாள் நீ ஒருக்கால் புன்னகைத்தால்
மின்னல் என்று நம்பியந்த
தாழம்பூவும் மலந்துவிடும்!

என் மனமும்
சத்தியமாய் தாழம்பூதான்
மின்னலிடு
நிச்சயமாய் மலந்துவிடும்!

பூங்கொடியாய்
நீ எதிரே தோன்றும்போது
தாங்கொண்ணா சந்தேகம் எனக்கு வரும்.
பூங்கொடியில்
பூக்கள்தான் இருத்தல் உண்டு.
பூங்கொடியே உன்மீதில்
இரு மணிக்குடங்கள் என்ன விந்தை?!
பூங்கொடிக்கு வலிக்காதோ
பொன் உடம்பு சலிக்காதோ
போதும் பாரம் என களைக்காதோ?

கமுகு என்பர் கழுத்தை
வாழை என்பர் காலை
வழுக்கித்தான் போனேனடி
கண்டதும் இந்தக் காளை!

ஒரு நாள்தான்
கண்டேனடி உன்னை.
திரு நாள்தான்
அன்றென்று சொல்வேன்.
பிறந்த நாள்
அன்றுதான் இனிமேல்.
நான் புதிதாய்
பிறந்தநாள் அன்றுதானே!

கருவறையில்
சுமந்தாள் என் அன்னை

காதல் மணவறையில்
சுமப்பாயோ என்னை?

சொல்லிவிடு-சொல்விடு
கண்ணே!
சொக்கிவிட-சொக்கிவிட
மனமே!

தையல் என்றும் சொல்லிடுவார்
பெண்ணை,
தையலிடு உன் மனதில்
என்னை!

மையலடி-மையலடி
உன்மேல்
மாலையிட மனதை வைப்பாய்
என் மேல்!

பாலையடி-பாலையடி
நீ இல்லாத மனது
பாவையடி நீ பொழிவாய்
பருவ மழைதான்!

கடைந்தெடுப்போம்
காதல் அமுதத்தை கடைந்தெடுப்போம்!
திசையெட்டும் அதிர
காதல் முரசத்தை அறைந்திடுவோம்!

நகத்தோடு தசையாக
நாமிருவர் உறைந்திருப்போம்!

மறந்திருப்போம்-மறந்திருப்போம்
பசியை மறந்திருப்போம்!
மறந்திருப்போம்-மறந்திருப்போம்
பகல், இரவை மறந்திருப்போம்.
மறந்திருப்போம்-மறந்திருப்போம்!
நாமிருவர் என்பதையே
மறந்திருப்போம்!

ஆணைகள் இல்லை அங்கே
ஆடைகள் இல்லை அங்கே
சுமைகளே சுகங்களாகும்
சுகங்களே சுமைகளாகும்
ஜாடைகள் பரிமாறலாம்
மேடைகள் பல காணலாம்
நாடகம் அரங்கேறலாம்
நாமதில் கரைகாணலாம்!

சொல்லிவிடு-சொல்லிவிடு
கண்ணே!
பொறுக்குதில்லை-பொறுக்குதில்லை
மனமே!

மாறன் எழுதிய
மடல்
மலர் விழியின் கரத்தில்!

## சூடு தவிர்

மடல் முழுக்க
கவித்தனப் புலம்பல்!

புலம்பலும் இனிக்கும்
காதல் களத்தினில்
இறங்கிய காதலர்க்கு!

மலர் விழி நினைத்தாள்;
சொல்லிவிடு என்கிறாரே
சொல்ல நான் நினைத்து
சொல்லாமல் போனதை
கொள்ளையர் அறியாரோ?

மடல் மீதுதான்
நீர் வரைந்தீர் கவிதை.
மனம் மீதெல்லாம்
நான் வரைந்தேனே உம்மை!

துள்ளும் தோள் கண்டேன்
வெல்லும் வாள் கண்டேன்
வீரர் நீர் என்னும்
தீராப் புகழ் கேட்டேன்
தாரும் மனதென்று
நானும் வரம் கேட்டேன்
நீரும் அறியாமல்
நெஞ்சுக்குள் விதை போட்டேன்.

நெஞ்சில் மரமாகி
காதல் உரமாக
விருட்சம் நீரானீர்.

மலர் விழி நினைத்தாள்
மலரிலும் இனிய
நெஞ்சினை தடவிக்கொண்டாள்.
மெல்லச் சொல்லிக்கொண்டாள்
"வருட வலிக்கிறதா
திருடா சொல்வாயா?"

தோழி அப்போது
சூடாய் பால் ஏந்தி
பணிவாய் கொண்டு வந்தாள்.

"ஆறட்டும் தோழி
அப்புறம் குடிக்கிறேன்"

"சூடாய் வேண்டும் என்று
கேட்பது நீங்கள்தானே!"

மலர்விழி சிரித்தாள்
"அன்று
நெஞ்சுக்குள் யாருமில்லை
இன்று நெஞ்சுக்குள் ஒரு திருடர்.
சூடாக நான் குடித்தால்
திருடர் அன்றோ துடித்திடுவார்!"

மலர்விழி சொல்ல
தோழிக்கு உடனே
திருக்குறள் நினைவிலடித்தது.

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து"

*குறள்-1128- அதிகாரம்-113*

---

★ கிழக்கில் கோணேஸ்வரி பாலியல் வல்லுறவு படுகொலை விடயத்தில் பெண்கள் அமைப்புக்கள் ஏன் தீவிரம் காட்டவில்லை?

வி.சசி, எலதுவ, மத்துகம.

*கிருஷாந்தி விடயத்தில் குரல் கொடுத்து, குரல் கொடுத்து குரல் கம்மிப்போனதுதான் கண்டபலன் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. பெண்கள் அமைப்புக்கள் எதுவும் போதிய வலுவுடன் இல்லாததும் ஒரு குறை.*

❀ ⇨ ❀

★ யாழ் நூலக மீளமைப்பு முயற்சி தொடர்பாக என்ன நினைக்கிறீர்?

சி. சதாசிவம், கொழும்பு-15.

*நல்ல முயற்சிதான்! எனினும் நூலகம் கட்டுமான, புதுப்பித்தல் பணிகள் பற்றிய பிரசாரம் சற்று மிகையாகவும், நூலக மீளமைப்பு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான பாரிய நிவாரணம் போலவும் சித்தரிப்பதுதான் தித்திக்கவில்லை.*

❀ ⇨ ❀

★ தமிழ்க்கட்சிகள் யாவும் கூடிப்பேசியிருக்கின்றனவே, நல்லது நடக்குமா?

ஜெ. பிரகாஷ், மட்டக்களப்பு.

*நீங்கள் ஒன்று! உள்ளதையும் கெடுத்திருக்கிறார்கள்! தாங்கள் யாவரும் ஏதோ ஒன்று கூடி சிந்திப்பதாக தமிழ்மக்கள் நினைக்கட்டும் என்பதற்காக இவர்கள் ஆடும் நாடகத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் நீதியமைச்சர். "தமிழ்க்கட்சிகளுக்குள் ஒற்றுமை கிடையாது" என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார். நன்மை செய்ய முடியாதபோது தீமையாவது செய்யாதிருக்கலாம் என்பதை தமிழ்க் கட்சிகளுக்கு சொன்னாலும் புரியவா போகிறது? விடுங்கள்.*

❀ ⇨ ❀

★ சனத் ஜெயசூரியாவின் அதிரடி ஆட்டம் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

எம். நியாஸ், மருதானை.

*நான் என்ன சொல்வது? 'உலகில் ஆபத்தான ஆரம்ப துடுப்பாட்ட வீரர்' என்று இந்திய விளையாட்டு சஞ்சிகையான 'ஸ்போர்ட்ஸ் ஸ்ராட்' பாராட்டியிருக்கிறதே!*

❀ ⇨ ❀

★ கமலஹாசன் இயக்கும் 'மருதநாயகம்' படம் எப்போது ஆரம்பமாகும்?

செல்வி கே. கௌரி, திருகோணமலை.

*அதற்கு முன்னரே இந்தியில் இயக்குநர் அவதாரம் எடுத்துள்ளார் கமல். அவ்வை சண்முகி படத்தை இந்தியில் இயக்கவிருந்த இயக்குநரை நீக்கிவிட்டு, கமலே இயக்கப் போகிறாராம். இந்தி 'அவ்வை சண்முகி' பெயரும் மூன்றாவது தடவையாக மாற்றப்பட்டுள்ளது. புதிய பெயர் 'ஸ்திரீ 420'. இந்தியச் சட்டவிதி 420 என்பது மோசடி-பித்தலாட்டங்கள் பற்றியது. முன்னர் 'ஸ்ரீ 420' என்றொரு படம் இந்தியில் சக்கைபோடு போட்டது. என்ன... தகவல் போதுங்களா?*

❀ ⇨ ❀

★ மனிதனுக்கு கிடைக்கக் கூடாததெல்லாம் கிடைத்துவிட்டால்.... அவன் நிலை?

செல்வன் நீலகண்டன், ஆள்கரனோயா.

*சகமனிதனை சாப்பிட்டுவிடுவான்.*

❀ ⇨ ❀

★ காதல்- காமம் எது சிறந்தது?

ந. பாலகனேஷ், வவுனியா.

*இரண்டும் கலந்திருப்பது.*

❀ ⇨ ❀

★ 'மாதராய்ப் பிறக்க மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்பது இக் காலத்திலும் பொருந்துமா?

செல்வி ஆர். மேசி, கொழும்பு-08.

*மாதராய் மட்டுமல்ல, மானிடராய்ப் பிறப்பதே கவலைக்கிடமான சமாச்சாரம்தான்.*

*ஒரு சிம்பன்சிக் குரங்கு இன்னொரு சிம்பன்சியின் கைரேகையைப் பார்த்துவிட்டு ரொம்பச் சோகமாக சொன்னது:*

*"அடடா.... உன் எதிர்காலம் சோகமாக இருக்கும்போல தெரிகிறதே. நீ மனிதனாகப் பரிணாம வளர்ச்சி பெறப்போகிறாயே!"*

❀ ⇨ ❀

★ சங்கவியின் முன்னேற்றத்திற்குக் காரணமான சங்கதி என்ன?

எஸ். ஸாகீர், அக்குறணை.

*முன்னேற்றத்தில் அவர் காட்டும் துடிப்புத்தான் காரணம்.*

❀ ⇨ ❀



விஜயகாந்த்—சங்கவி (உளவுத்துறை)

★ டியர் சிந்தியா! அவசரக்காதல் என்றால் என்ன அர்த்தம்? அதுவும் வெற்றியில் முடியுமா?

வி. குணசீலன், மன்னார்.

*இப்படியும் முடியும்:*

*விடுமுறையைக் கொண்டாட அந்த இளைஞனும் பெண்ணும் ஒரு நவநாகரிகமான ஹோட்டலில் சந்தித்தனர்.*

*அந்தப் பெண் சொன்னாள்:*

*"மிக்கி, ஒரு சந்தோஷமான செய்தி: நான் தாயாகப்போகிறேன்!"*

*இளைஞன் பதறினான்:*

*"நீ என்ன சொல்கிறாய்? இன்னமும் ஆரம்பிக்கவேயில்லையே?"*

*பெண் பதில் சொன்னாள்:*

*"மிக்கி! வீணாகக் கவலைப்படாதே! பதட்டப்படாதே! நான் தாயாகப்போகிறேன் என்று சொன்னது என்னவென்றால், அடுத்த மாதம் உன் தந்தையை மணந்துகொள்ள இருக்கிறேன், என்பதைத்தான் அப்படிச் சொன்னேன்!"*

❀ ⇨ ❀

★ அஜித்குமார், அப்பாஸ், பிரசாந்த்-விஜய் இவர்களில் முன்னணியில் நிற்கும் ஹீரோ யார்?

கே. வின்சன்ட், சத்துருக்கொண்டான்.

*அப்பாஸ்!*

❀ ⇨ ❀

★ சிந்தியா! தர்க்கவாதம் என்றால் என்ன?

மு. எட்வேர்ட், கற்பிட்டி.

*கடைத்தெருவில் ஒரு பொருள் திருடியதற்காக ஒருவனை பிடித்தார்கள். அவனிடம் கள்ள நோட்டு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு குற்றத்துக்காகவும் வழக்குத் தொடுத்தனர். அவனது சட்டத்தரணி சொன்னார்;*

*"இவன் திருடியது உண்மை. ஆனால் பொய்நோட்டு வைத்திருந்த குற்றம் மட்டும் இவன்மீது சுமத்தமுடியாது." என்றார் சட்டத்தரணி.*

*"எப்படிச் சொல்கிறீர்கள்?"*

*"அவன்தான் திருடியதை ஒப்புக்கொண்டுவிட்டானே, திருடும்போது நல்ல நோட்டா, அல்லது பொய் நோட்டா என்று எப்படிப் பார்க்க முடியும்?" என்று கேட்டார் சட்டத்தரணி.*

❀ ⇨ ❀

★ எப்படியான ஆண்களை பெண்கள் நம்பலாம்?

கே.எம்.சுரேஷ், வத்தளை.

*'லவ் டுடே'யில் நாயகன் பற்றி பெருமையாக நாயகியிடம் தோழிகூறும் வசனம்; இது "மாரைப் பார்த்துப் பேசும் ஆண்கள் மத்தியில் அவன் மனதைப் பார்த்து பேசுகிறவன்!" சுரேஷ் நீங்கள் எப்படி?!*

❀ ⇨ ❀

★ 'உல்லாசம்' படத்தில் மகேஸ்-அஜித் ஜோடிப் பொருத்தம் எப்படி சிந்தியா?

ஜெ. நர்மதா கொழும்பு-12.

*சல்லாபத்தில் மட்டும் தேறுகிறார்கள். பொயிலர் கோழிமாதிரி மாற்றிவிட்டார்கள் மகேஸ்வரியை. பாவமப்பா!*

❀ ⇨ ❀

★ ஒரு கடி ஜோக் கிடைக்குமா?

ஏ. உருத்திரன், கண்டி.

*சமீபத்தில் படித்த கடி:*

*"இயக்குநர் சங்கர் கிராமியப்படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பார்?"*

*"வேஷ்டி "*

❀ ⇨ ❀

★ சிந்தியா! இந்தியாவின் ஜனாதிபதியாக சேஷன் வருவாரா?

செ. காண்டீபன், திருமலை.

*மாட்டார். வந்தால் தங்கள் தலையைத் தின்றுவிடுவார் என்று அரசியல்வாதிகளுக்கு தெரியாதா என்ன? நாராயணன்தான் அடுத்த ஜனாதிபதி. மற்றொரு நல்ல செய்தி, முதன் முதலாக இந்தியத் துணை ஜனாதிபதியாக ஒரு பெண் தெரிவு செய்யப்பட இருக்கிறார்.*

❀ ⇨ ❀



பிரபுதேவா—சிம்ரான்(வி.ஐ.பி)

★ மனிதன் செய்யும் தவறுகளில் பெரும் ஏமாற்றம் தரும் தவறு எது?

ஏ.எல்.அமீர் ஹுசைன், கல்முனை-03.

*தன்னை மட்டுமே புத்திசாலியாக நினைக்கிறான் பாருங்கள், அது!*

---

ஸ்போர்ட்ஸ்

# தந்தை எவ்வழி தனயன் அவ்வழி!

## கிரிக்கெட்டில் வாரிசுகள்!

ஒரே விளையாட்டில் தந்தையைப் பின்பற்றி மகனும் விளையாடுவது என்பது அபூர்வமான விஷயம். கிரிக்கெட் விளையாட்டில் அப்படி ஆடிய தந்தை-மகன்கள் சிலரே. அவர்களது பட்டியல் இதோ:-



சொயாப்



ஹனீப்

* இந்தியாவும், பாகிஸ்தானும் ஒன்றாக இருந்தபோது 1932-36வரை இந்திய அணிக்காக விளையாடியவர் டாக்டர் மஜீத்கான். பின்னர் இந்தியாவும், பாகிஸ்தானும் பிரிந்ததும் இவரது மகன் ஜஹாங்கீர் கான் பாகிஸ்தான் அணிக்காக விளையாடினார்.
* இந்திய அணியில் 1934-46வரை விளையாடிய நவாப்பட்டௌடி, இந்திய அணிக்குக் கப்டனாகவும் இருந்தார். பின் இவரது மகன் மன்சூர் அலிகான் பட்டௌடி 1961-75வரை விளையாடி, கப்டனாகவும் இருந்துள்ளார்.
* 1947-53வரை இந்திய அணிக்காக விளையாடியவர் லாலா அமர்நாத். பின்னர் இவரது மகன்கள் மொஹிந்தர் அமர்நாத்தும், சுரேந்தர் அமர்நாத்தும் விளையாடியுள்ளனர்.
* இங்கிலாந்து அணியில் 1937-55வரை விளையாடியவர் லென் ஹட்டன். இவரது மகன் றிச்சர்ட் ஹட்டன் இங்கிலாந்துக்காக விளையாடியுள்ளார்.
* நியூஸிலாந்தின் பிரபல வீரர் வோல்டர் ஹாட்லிக்குப் பின்னர் அவரது மகன் றிச்சர்ட் ஹாட்லியும் நியூஸிலாந்திற்காக விளையாடினார்.
* 1946-59வரை இந்தியாவுக்காக வினுமன்கட் விள்ளயாடினார். அவரது மகன் அசோக் மன்கட் பின்னர் இந்தியாவுக்காக விளையாடி இருக்கிறார்.
* 1951-61வரை இந்திய அணிக்காக விளையாடியுள்ள டாட்டாஜி ராவ்கெய்க்வாட்டைத் தொடர்ந்து அவரது மகன் அன்சுமன் கெய்க்வாட் 1974-85வரை விளையாடியுள்ளார்.
* 1951-61வரை இந்தியாவுக்காக விளையாடியவர் பங்கஜ் ராய். பின் இவரது மகன் பிரணாய் ராயும் விளையாடியுள்ளார்.
* 1951-65களில் இந்திய அணிக்காக விளையாடியவர் விஜய் மஞ்ச்ரேக்கர். இவரது மகன் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் இந்திய அணியில் தற்போது விளையாடி வருகிறார்.
* வில்லியம் அன்டர்சன் 1945ல் நியூஸிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர். இவருக்குப் பின்னர் 1976-78வரை இவரது மகன் ரொபேட் அன்டர்சனும் தொடக்க ஆட்டக்காரராக விளையாடியுள்ளார்.
* 1947ல் தென் ஆபிரிக்காவுக்காக விளையாடியுள்ளார் ஜோன் லிண்ட்சே. பின்னர் இவரது மகன் டென்னிஸ் லிண்ட்சேயும் விளையாடி இருக்கிறார்.
* பாகிஸ்தானுக்காக நஸார் முகம்மட் 1952-53 வரை விளையாடியவர். 1976-89களில் இவரது மகன் முடசார் நஸார் விளையாடினார்.
* பாகிஸ்தானின் இன்னொரு வீரர் ஹனீப் முகமட், 55 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். தற்போது இவரது மகன் சொயாப் முகமட் பாகிஸ்தான் அணியில் விளையாடி வருகிறார்.
* இங்கிலாந்து அணியில் 1954-75களில் விளையாடிய கொலின் கவுட்ரியைத் தொடர்ந்து அவரது மகன் கிறிஸ் கவுட்ரியும் விளையாடியுள்ளார்.
* லான்ஸ் கெய்ரன்ஸ் 1973-86வரை நியூஸிலாந்துக்காக விளையாடினார். இப்போது இவரது மகன் கிறிஸ் கெய்ரன்ஸ் நியூஸிலாந்து அணியில் விளையாடி வருகிறார்.
* மைக்கல் மிக்கிஸ் ஸ்ருவட் முன்னாள் இங்கிலாந்து வீரர். தற்போது இவரது மகன் அலெக் ஸ்ருவட் இங்கிலாந்துக்காக விளையாடி வருகிறார்.
* பீட்டர் பொல்லொக் தென் ஆபிரிக்காவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர். இப்போது இவரது மகன் ஷோன் பொல்லொக் தென் ஆபிரிக்காவுக்காக விளையாடி வருகிறார்.

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 90

இராமபிரான்- வாலிமகன் அங்கதனை வாழ்த்தி வழி அனுப்பிவிட்டு, அவன் சென்ற திக்கினையே பார்த்தபடி இருந்தார். மீண்டும் சீதாப் பிராட்டியாரின் நினைவில் மனவேதனைப்பட ஆரம்பித்துவிட்டார் அண்ணன், என்று ஊகித்துக்கொண்டார் தம்பி இலக்குமணன். தன் அண்ணனின் மனத்துயரைப் போக்கும் நோக்குடன், "அண்ணா! புதிய அம்புகள் பலவற்றை செய்து வைத்திருக்கிறேன். முறையாகப் பூஜை செய்து, அவற்றுக்குரிய மந்திர உச்சாடனங்களையும் செய்தாக வேண்டும். காலதாமதம் செய்யாமல் ஆயத்தங்கள் செய்ய

## அங்கதன் தூது

வேண்டும். தயவுசெய்து எழுந்தருளுங்கள். பூஜைக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன," என்று இராமபிரானிடம் கூறினார்.

இராமபிரானுக்கு அவர் தம்பியின் தன்மை நன்கு தெரியும். தன்னுடைய புலன்களை வேறுபுறம் திருப்புவதற்காகவே இப்பொழுது தன்னை தம்பி அழைக்கிறான் என்பதைக் கண்டு கொண்டார். ஒரு புன்முறுவலை உதிர்த்துவிட்டு இலக்குவன் முன் செல்ல, அவர் பின்னே பர்ணசாலையை நோக்கி நடக்கலானார். அங்கு ஆயுத பூஜைக்காகவே தென்கரையிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த வேதியர்கள் ஓமகுண்டங்களில் தீ வளர்த்து மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டிருந்தனர். புனிதமான ஓமப்புகை பரந்து பரவி எங்கும் தெய்வீகமணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

### அரண்களை வலம்வந்த அங்கதன்

அங்கதன் கடற்கரையை அடைந்து சமுத்திர தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து, தற்காப்பு மந்திரங்களை ஓதியவண்ணம் கரையோரமாகவே நடந்து இலங்காபுரிக் கோட்டையின் வடவாயிலருகில் போய் நின்றான். வாயிலில் காவல் பலமாக இருந்தது. காற்றுக்கூட நுழையாதபடி அசுர வீரர்கள் கொடிய ஆயுதங்களை ஏந்தியவர்களாக அங்கு

**இராஜகுமாரன்**

உலவிக்கொண்டிருந்தனர்.

ஏற்கனவே வட வாயிலைக் காக்கும் பொறுப்பினை இராவணனே ஏற்றிருந்தான். அவனுடைய நேரடிப்பார்வையின்கீழ் பயிற்சிபெற்ற பல இலட்சம் வீரர்கள்தான் வடதிசையில் குவிக்கப்பட்டிருந்தனர். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை மற்றும் காலாட்படை என்னும் நான்குவகைப் படைகளும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இலங்காபுரிக் கோட்டை அமைப்பு எவ்வாறானது என்பதனை- ஏற்கனவே இராமதூதனாகச் சென்று பார்வையிட்ட ஆஞ்சநேயர்- வானரப்படை முக்கியஸ்தர்களுக்கு விளக்கிக் கூறியிருந்தார். ஆகவே, வட வாயில் எவ்வாறான தோற்றமுடையது என்பதனை அங்கதன் மனக் கண்ணால் கண்டு மனத்திரையில் படம் வரைந்திருந்தான். அனுமன் வர்ணித்த அத்தனை அம்சங்களும் ஆங்கே பொருந்தியிருப்பதை அங்கதன் அவதானித்தான். ஏனைய திசைகளுக்கும் சென்று ஒவ்வொரு வாயிலிலும் எத்தகைய பாதுகாப்பு அமைப்புக்கள் இருக்கின்றன என்பதையும் பார்வையிடுவதென அங்கதன் தீர்மானித்தான்.

வடதிசையிலிருந்த பெருமரம் ஒன்றில் தாவி ஏறி கிழக்குத் திசைவாயிலை அடைந்தான். அங்கு அரக்கர் படையின் பிரதான தளபதி தலைமையில் கடல்போல் அரக்க வீரர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கான அறிவுரைகளை தளபதி விளக்கிக் கொண்டிருந்தான். இக் காட்சியை நோட்டமிட்ட வண்ணம் தெற்கு நோக்கி அங்கதன் சென்றான். அங்கு அரக்கர் படையைச் சேர்ந்த இரு பெரும் வீரர்களான மகோதரனும் மாபெரும்பக்கனும் தங்கள் படை அணிகளைப் பார்வையிட்ட வண்ணம் கட்டளைகளைப் பிறப்பித்தபடி நின்றனர்.

அடுத்ததாக அங்கதன் மேற்குத்திசை சென்றான். இராவணன் மகனும் இந்திரனை அடிமைப்படுத்தியவனுமான இந்திரஜித்தன் நின்றிருந்தான். அவனுடைய தேக அமைப்பைக்கண்டு அங்கதன் வியப்படைந்தான். இருவருக்கும் ஏறத்தாழ ஒரே வயது தானிருக்கும் என்று அங்கதன் கணித்தான். போர் பொருத நேர்ந்தால் இப்பேர்ப்பட்ட ஒரு வீரனுடன் தான் நேரடியாக மோத வேண்டும் என்று அங்கலாய்த்தான். அவ்வாறு நினைக்கும்போதே அங்கதனுடைய தோள்கள் தினவெடுத்தன. உடனே பாய்ந்து சென்று இளவரசன் இந்திரஜித்தனைத் தாக்கி விடலாமா என்று கூட ஆசைப்பட்டான்.



ஆனால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டான்.

### அரக்க மாந்தரின் அச்சம்

நான்கு திசைகளிலுமுள்ள கோட்டை வாயில்களினூடாகக் கோட்டைக்குள் செல்வதைத் தவிர்த்து, வானில் தாவி கோட்டைக்குள் குதித்து விடுவதே நலமென அங்கதனுக்குப் பட்டது. இதே நோக்குடன் வடபுற வாயிலின் அருகேயிருந்த நெடிதுயர்ந்த மரம் ஒன்றின் மீது தாவி ஏறினான். உச்சியை அடைந்து, எவரும் காணாமல் கோட்டை மதிலின் மீது குதித்தான். பின்னர் சந்தடி குறைவாக இருந்த ஒரு சாலையில் பாய்ந்தான்.

சாலையில் வந்து குதித்த வானரத்தைக் கண்டனர். சில அரக்கமாந்தர். சில தினங்களுக்கு முன்னர் அங்கு வந்து அனர்த்தங்கள் பல புரிந்த அனுமனே மீண்டும் வந்து விட்டாரரோ என்று அச்சமடைந்தவர்களாக ஓட்டம் பிடித்தனர். சிறிது நேரத்தில் எங்கும் பதற்ற நிலை எழுந்தது. காட்டுத்தீபோல், வானரம் கோட்டைக்குள் புகுந்துவிட்ட கதை எங்கும் பரவியது. மீண்டும் நகரம் தீப்பிடித்து எரியப்போகிறது என்றும் கோட்டை கொத்தளங்கள் எல்லாம் இடிந்து தகரப்போகின்றன என்றும் திகிலுடன் அரக்கர்குடி மக்கள் திக்குமுக்காடித் திணறினர்.

காவலர்களின் காதுகளுக்கு இத்தகவல் எட்டியதும் நூற்றுக்கணக்கில் அவர்கள் திரண்டு பலவிதமான ஆயுதங்களுடன் அங்கதனை அணுகினர். பயந்தவண்ணமே அவர்கள் அங்கதனை நோக்கிச் சென்றனர். எந்த விதமான எதிர்ப்பும் காட்டாமல் பரமசாது போல நின்ற அங்கதனை தொலைவிலிருந்தே சுருக்கு வீசிக் கட்டினார்கள். ஆடாமல் அசையாமல் நின்ற வானரத்தை- பெரும் சாதனை படைத்தவர்கள்போல்- வீதிவழியே ஆர்ப்பரித்து, ஆனந்தக்கூத்தாடி இழுத்துச்சென்றனர்.

இதற்கிடையில் இராவணனுக்கும் தகவல் எட்டிவிட்டது. குரங்கைப்பிடித்து நேரடியாகத் தன்னிடமே கொண்டு வந்து சேர்க்கும்படி இராவணன் கட்டளையிட்டிருந்தான். அதற்கேற்ப அங்கதனை இராவணன் முன்னால் கொண்டு போய்விட்டனர்.

அங்கதனைக் கண்டதும்- ஆஞ்சநேயர் தானோ என்று ஆரம்பத்தில் நினைத்தான். ஆனால் இளமைத் தோற்றத்தைக் கண்டதும் சந்தேகம் நீங்கியவனாக "யார் நீ? எதற்காக நீ இங்கே வந்தாய்?" என்ற வினாக்களைத் தொடுத்தான்.

### "வாலியின் புதல்வன் நான்!"

"இலங்காபுரியை ஆட்சிபுரியும் இராவணேசனே! உம்மை முன்பு ஒருமுறை தன் வாலினால் கட்டி இழுத்து ஊர்வலம் சென்ற வானரர்கோன் வாலியின் புதல்வன் நான்!" என்று கூறியதும் இடை மறித்த இராவணன், "என்ன- என் நண்பன் வாலியின் மைந்தனா? அதாவது இளவரசன் அங்கதனா? வா வா வா....! அதோ அந்த ஆசனத்தில் அமர்வாயாக!" என்று உபசரிக்கலானான். அங்கதனும் அமர்ந்து கொண்டான்.

"நல்ல சந்தர்ப்பத்தில் இங்கு வந்திருக்கிறாய்! உன் தந்தையை நயவஞ்சகமாகக் கொன்ற அந்த இராமன் என்னுடன் போர் புரிய பெரும் படை திரட்டிவந்து இந்நகரைச் சூழ்ந்து கொண்டிருக்கிறான். என் நண்பனான உன் தந்தையைக் கொன்ற அந்த நரனை நான் நிச்சயம் பழிதீர்க்கப்போகிறேன்! இந்த வேளையில் நீயும் இங்கு வந்து சேர்ந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

மகனே அங்கதா! எனது காவலர்களுக்கு உன்னை யார் என்று தெரியாமல் அவமதித்து விட்டிருப்பார்கள். ஏற்கனவே இராமன் அனுப்பிய தூதுவன் ஒருவன் இங்குவந்து பெரும் அனர்த்தங்களைச் செய்துவிட்டுப் போய்விட்டான். அதனால்தான் அவனுடைய தோற்றத்தில் உன்னைக் கண்டதும் அவ்வாறு காவலர்கள் நடந்திருக்கிறார்கள். ஆகவே எதையும் மனதில் வைத்துக்கொள்ளாதே!"

இராவணன் மிகக் கனிவாக இவ்வாறு கூறினான். ஆனால் அங்கதன் அதனைப் பொருட்படுத்தவில்லை. "இலங்காதிபதியே! நான் உம்முடன் சேர்ந்து எவரையும் பகைமையுடன் பழி தீர்த்துக்கொள்ள இங்கு வந்தவனல்ல. நீர் எதிரியாகக் கருதும் உத்தமோத்தமர்- சாட்சாத் இராமபிரானின் தூதுவனாகவே இங்கு வந்துள்ளேன்!" என்று அங்கதன் துடிப்புடன் பதிலளித்தமை இராவணனுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்ததுடன் கோபத்தையும் ஊட்டியது.

அங்கதன் தொடர்ந்தான்: "இராமபிரானுடைய தர்ம பத்தினி சீதாப்பிராட்டியாரை உடனடியாக விடுவித்து அவரிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்! தவறினால் யுத்த முனைக்கு வந்து போர்புரியத் தயாராக இரு! போரில் நீர்மட்டுமல்ல, உம்முடைய வம்சமும் தொடர்ந்து அரக்கர் இனமுமே முற்றாக அழித்தொழிக்கப்படும்! இதுதான் இராமபிரானின் அறிவித்தலாகும். இதில் எதை விரும்புகிறீர் என்று உம்மிடம் கேட்டு அறிந்து வரும்படி என்னைத் தூதுவனாக அனுப்பிவைத்தார்!" என்று அங்கதன் கூறினான்.

அடக்க முடியாத சினம் கொண்டவனாக சிம்மாசனத்திலிருந்து குதித்தெழுந்த இராவணன், "என்ன சொன்னாயடா? மன்னிப்புக் கேட்பதா? மூவுலகங்களையும் ஆட்டிப்படைக்கும் இந்த இலங்கேஸ்வரன்- கேவலம், நாட்டைவிட்டுத் துரத்தி அடிக்கப்பட்ட ஒரு நரனிடம் மன்னிப்புக் கேட்பதா?" இவ்வாறு கொக்கரித்த இராவணன் சற்றுக் குரலைத் தாழ்த்தி, "மகனே அங்கதா! உன் தந்தையிடம் நான் ஒருகால் தோற்றுப் போனவன்தான். இருப்பினும் உன் தந்தையைக் கொன்று- உனக்குக் கிடைக்க வேண்டிய கிட்கிந்தை இராச்சிய பரிபாலனத்தை- அந்தத் துரோகி சுக்கிரீவனுக்குக் கொடுத்தவன் அந்த இராமன். அவனுடன் உனக்கென்ன உறவு? நான் சொல்வதைக் கேள்! கிட்கிந்தைக்கு உன்னையே அரசனாக்குகிறேன். என் பேச்சைத் தட்டாதே!" என்று மிகவும் குழைவுடன் கேட்டான் இராவணன்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 88**
**சரியானவிடை:- மேற்குத்திசை.**

1. கா.சுபாஷ், 92, தலதா வீதி, கண்டி.
2. க.தமிழ்ச்செல்வி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
3. எம்.கிரிஜா, 86, பிரதான வீதி, திருமலை.
4. எப்.ஷிஹானி, 196,மடவளை ரோட், கட்டுகஸ்தோட்டை.
5. ம.நிருபன், 45/24 A, ஃபிரெட்ரிகா வீதி, கொழும்பு-06.

**போட்டி இல. 90** கேள்வி:- எத்திசை வாயிலை இராவணன் தேர்ந்தெடுத்தான்?

ஜூலை. 12 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
இராமாயணப் போட்டி – இல.90, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.

# கனவில் இனிக்கும் கலைஞர் முழக்கம்

காதிலை பூ கந்தசாமி

சட்டத்தரணி: நீர்தான கலைஞர் கருணாநிதி என்பவரோ?
கலைஞர்: நான்தான் என்று சொல்லமாட்டேன்!
சட்: ஏன்தான் சொல்லமாட்டீர். விளக்கம் தேவை?
கலைஞர்: நான்தான் என்றேன் என்றால் என் அண்ணன் இதயமன்னன் அண்ணா கேட்பார் ஏன்தான் என் தம்பியாய் இருந்தாயோ என்று!
சட்: புரியவில்லையே?
கலைஞர்: புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, அறிந்தது, அறியாதது, உருண்டது, உருளாதது, திரண்டது, திரளாதது, மருண்டது, மருளாதது, கனிந்தது, கனியாதது.
சட்: (முடியைப் பிய்த்துக் கொள்கிறார்) கம் ரு த பொயிண்ட் மிஸ்டர் கருணாநிதி.
கலைஞர்: நேரடியாக பொயிண்டுக்கு சென்றதாக பழந்தமிழ் இலக்கியம் எதிலும் ஒரு துளி உதாரணம்கூட கிடையாது. காதல் இலக்கியத்தில் என்றாலென்ன, களப்போர் காவியத்தில் என்றாலென்ன நேரடியாகப் பொயிண்டுக்கு சென்றதில்லை.
சட்: ஆதாரம்?
கலைஞர்: ஏராளம் உண்டு! எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன் கேளும்; காதல் இலக்கியத்தில் தலைவனும் தலைவியும் இதயமறிவது முதல் கட்டம். அறிந்த இதயங்களை அன்போடு பரிமாறிக் கொள்வது இரண்டாம் கட்டம். கண்ணோடு கண்பேசிய பின்னர் இதழோடு இதழ் பேசும் கட்டத்தை எட்ட இடமறிந்து, யாராவது உள்ளனரோ என ஒற்றறிந்து சந்திப்பது மூன்றாம் கட்டம். அதன்பின்னர் பதமறிந்து... எதிர்த்தரப்பு சட்டத்தரணியான உம்வாயில் ஈ நுழைவது இப்போது ஒரு திருப்பக்கட்டம்.
சட்: (அசடுவழிந்தபடி) ஹி...ஹி...ஹி.
கலைஞர்: களச் சமரில் உளவறிவது முதல் கட்டம். இடமறிவது இரண்டாவது கட்டம். ஊடறுத்து உள்புகுந்து இலக்கை குறி வத்து மோதுவது மூன்றாம் கட்டம். கட்டம் மூன்றின் பின்னர்தான் இரண்டு சமர்களிலும் பொயிண்டுக்கே போகிறார்கள்.
சட்: தாங்க்யூ. தாங்கள் எப்போது பொயிண்டுக்கு வரப்போகிறீர்கள்.
கலைஞர்: மன்னிக்க வேண்டும், மறுபடி கேளுங்கள் முதல் கேள்வியை?
சட்: நீர்தான் கலைஞர் கருணாநிதி என்பவரோ?
கலைஞர்: நான்தான் என்று சொன்னால் என் அண்ணாவின் கொள்கையை கொடுவாளால் அறுத்தவனாவேன்.
நான் என்று சொல்வது சர்வாதிகாரம். நாம் என்று சொல்வது ஜனநாயகம். நான் என்று உச்சரித்தால் நம் உதடுகள் கூட ஒட்டிக்கொள்ளாது. நாம் என்று சொல்லும்போது நம் உதடுகள்கூட ஒன்றுபடுகிறது. எனவே நான் என்ற வார்த்தையை யாம் சொல்லுவதில்லை.
சட்: (தன்னைமறந்து கைதட்டுகிறார்) சபாஷ் சரியான விளக்கம்.
நீதிபதி: (எரிச்சலுடன்) நீவிர் எதிர்த்தரப்பு சட்டத்தரணி என்பதை நினைவில் கொண்டுள்ளீரா?
சட்: உள்ளேன் ஐயா.
கலைஞர்: சட்டம் ஒரு இருட்டறை வக்கீலின் வாதம் ஒரு விளக்கு என்றார் அண்ணா. ஆனால் இவரோ என்னைப் பார்த்து விளக்கு விளக்கு என்று கேட்கிறார். விளக்கை என்ன வீட்டிலே வைத்துவிட்டு வந்துவிட்டாரா? (மன்றத்தில் சிரிப்பொலி)
சட்: (கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொள்கிறார்) விடுதலைப் புலிகளை நீங்கள் ஆதரித்தீர்களா இல்லையா?
கலைஞர்: ஆம்!
சட்: ஏன்?
கலைஞர்: அவர்கள் இனத்தால், மொழியால், இனமான உணர்வால் எம்மவர்கள் என்பதால்! எம் உடன் பிறப்புக்கள் என்பதால்!
சட்: பொய்!
கலைஞர்: அது உமக்கேயுரியது என்பதே மெய்!
சட்: கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லும் போதும்!
கலைஞர்:
கேட்கும் கேள்விக்கும் விடை கொடுத்து, கேளாத கேள்விக்கும் பதில் கொடுத்து இனிக் கேட்கவே கேள்வியில்லையென்று எல்லை வேலி தாண்டி ஓடவைக்கும் மரபுக்கு சொந்தக்காரர்கள் நாங்கள்!
சட்: ஆணவமான பேச்சு
கலைஞர்: இல்லை, ஆணித்தரமான கூற்று.
சட்: விடுதலைப் புலிகள்மீது தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்காதது ஏன்?
கலைஞர்: உரிய நடவடிக்கையைத்தான் அவர்களே உடனுக்குடன் எடுத்துக் கொண்டிருந்தார்களே, யாம் வேறு என்ன நடவடிக்கை எடுப்பது?
சட்: பத்மநாபா கொலைக்கு யார் காரணம்?
கலைஞர்: பத்மநாபாதான் காரணம்.
சட்: எப்படி?
கலைஞர்: அந்தமானுக்கு செல்க என்றேன், கேட்டிருந்தால் இந்த மாநிலத்தில் அந்த விபரீதம் விளைந்திருக்காது!
சட்: விடுதலைப் புலிகள் பற்றிய உங்கள் அபிப்பிராயம்?
கலைஞர்: தமிழக மக்கள் ஒவ்வொருவருக்கும் என்ன அபிப்பிராயம் உண்டோ அதுதான் என் அபிப்பிராயம்.
சட்: அதுதான் என்னவென்று கேட்கிறேன்?
கலைஞர்: நீரே ஒரு தமிழர் என்பதால் நீரே அதைச் சொல்லும் என்கிறேன்!
சட்: விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில்லை, வேண்டுமானால் இலங்கைத் தமிழர்களை ஆதரிக்கலாம் என்கிறேன்.
கலைஞர்: புலிகள் வேறு தமிழர் வேறு என்பதும் ஒன்றுதான், உயிர்வேறு உடல் வேறு என்பதும் ஒன்றுதான்! ஆமைகளாய் ஊமைகளாய் புன்மைத் தேரைகளாய் பழம்பெருமை பேசிக்கிடந்த தமிழ்க்குடி புதுப்பெருமை பேசிட வைத்தது யார் வீரத்தால்? யார் தீரத்தால்? எண்ணிப்பாரும் ஆனந்தக் கண்ணீர் பாயும்! ஆரியனுக்கு ஆலவட்டம் பிடிக்கும் மரபிலே நீர் உதித்திருந்தால் திராவிட வீரம் திகட்டத்தான் செய்யும்!
சட்: இது விதண்டாவாதம்; சகோதர இயக்கங்களை பலவீனப்படுத்தியது யார் குற்றம்?
கலைஞர்: ஒரே ஒரு இயக்கம் பல இயக்கங்களை பலவீனப்படுத்த முடிந்திருக்கிறது என்றால் அவை பலமாக இருந்தன என்று எப்படி உளமார சொல்லமுடியும்?
சட்: ஆயுதபலத்தில் மேலோங்கியிருந்தனர் அதனால் ஏனைய இயக்கங்களை அடக்கினர்.
கலைஞர்: ஆயுதம்! அது யார் கொடுத்தது? அனைவருக்கும்தானே இந்தியா கொடுத்தது! ஆள் கணக்கின் அடிப்படையில் ஏனைய இயக்கங்களைவிட குறைந்தளவு ஆயுதம்தானே புலிகளுக்கு கிடைத்தது.
சட்: பணம் கொடுத்து வாங்கியிருப்பார்கள்.
கலைஞர்: ஏனையோரும் வாங்கியிருக்கலாமே, எவர் தடுத்தார்கள்!
சட்: பணம் வேண்டுமல்லவா?
கலைஞர்: புலிகள் மட்டும் என்ன பணம் காய்ச்சி மரமா வைத்திருந்தார்கள்?
சட்: வியாபாரம் செய்திருப்பார்கள்?
கலைஞர்: கூடாது என்று யாருமே கூறவில்லையே? இயக்க நிதிதிரட்ட எல்லோரும்தானே வியாபாரம் செய்தனர். காரணம் அதுவல்ல கனம் நீதிபதியவர்களே!
நீதிபதி: வேறு என்ன காரணம்?
கலைஞர்: புலிகளிடம் திட்டமிடும் ஆற்றல் இருந்தது! ஏனையோரிடம் கொட்டமிடும் ஆற்றல்தான் இருந்தது! புலிகள் கட்டுப்பாடான இயக்கம் தோற்றுவித்தனர்! இவர்களோ கெட்டுப்போன ஆட்களைத் திரட்டி இருந்த கட்டுப்பாட்டையும் தோலுரித்துக்கொண்டிருந்தார்கள்! திரட்டிய நிதியில் அவர்கள் தேவையானதை வாங்கிச் சேர்த்தனர்! இவர்களோ எது தேவையில்லையோ அதையதையெல்லாம் வாங்கிச் சேர்த்தனர்! புலிகள் ஆயுதபலத்துக்கு ஏற்பவே ஆட்பலத்தை சிறுகச்சிறுக பெருக்கினார்கள்! இவர்களோ எண்ணிக்கை சொல்வதற்காகவே விரலுக்கு மிஞ்சிய வீக்கத்தைப் பெருக்கினார்கள்! ஆகவே! கனம் நீதிபதியவர்களே! பலம் என்பது ஆயுதம் சார்ந்ததும் அல்ல. ஆட்பலம் சார்ந்ததும் அல்ல அல்ல!



சட்: வேறு எது சார்ந்தது என்று விளக்கும்?
கலைஞர்: மறுபடி கேட்கிறார் விளக்கு (சிரிப்பொலி) இப்போது உமது முறை நீர் விளக்கும். ஆயுதம்தான் பலம் என்றால், ஆயுதம் ஆயுதமாய் குவித்துக் கொண்டு, பலமடங்கு பல பல நூறு மடங்கு ஆட்பலத்துடன் போன நம் படையை அவர்களது சிறுபடை எப்படி நார் நாராய் கிழிக்க முடிகிறது? பெரும் வல்லரசாம் அமெரிக்கப் படையை சிறு வியட்நாம் படை எப்படி வெற்றி கொள்ள முடிந்தது? விளக்கும். விளக்கும்.
சட்: வந்து அது.... மனோபலம் ஐ மீன் ஆத்ம பலம்.
கலைஞர்: (சிரித்தபடி) இப்போதுதான் நீர் பொயிண்டுக்குள் புகுந்திருக்கிறீர் (சிரிப்பொலி) புத்திமுனைப்பும் இல்லை. கத்தி முனைப்பும் இல்லை, அதனால்தான் சித்தியடையாமல் போயினர் ஏனைய இயக்கத்தார் என்கிறேன்! ஆகவேதான் யாரால் முடியும் என்று கண்டறிந்து அவர்களுக்கே கழக ஆட்சி கரம் கொடுத்து ஆதரித்தது! பலம் கண்டு பூரித்தது! எனவே எவ்வகையிலும் குற்றமாகாது! என் தமிழ் மக்களுக்காக ஒருமுறையல்ல ஒரு நூறு முறை ஆட்சி போனாலும் அதை வெறும் காட்சியாக, நம் தியாகத்தின் மாட்சியாக எடுத்துக் கொள்ளும் பக்குவத்தினர் நாங்கள்!
அன்பழகன்: (தலைதெறிக்க ஓடிவந்து கலைஞரின் காதில் சொல்கிறார்) தலைவரே! அமோகமாக பதிலளிக்கிறீர்கள்! தங்கநிகர் கருத்துக்கள்! மாசு மறுவற்ற உண்மைகள்! ஆனால் இப்படித்தான் பேசியிருக்க வேண்டும் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்திருந்தால்! இப்போது தாங்கள் முதல்வர்!
(கலைஞர் சட்டென்று விழித்துக்கொள்கிறார்.)



படிப்பகம்

Regd as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# வண்ணமேனி



↓ அபூர்வமான இந்தப் பிராணியை எங்கும் நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள்.

அவுஸ்திரேலியாவிலும் சுற்றியுள்ள சில சிறு தீவுகளிலும் மட்டுமே இது காணப்படும். சிறிய உடலமைப்பைக் கொண்டது. 'புரோமிங் பெட்டோங்' என்பது இதன் பெயர். மேற்கு அவுஸ்திரேலியா தான் இவற்றின் வசிப்பிடம். இதன் நீளம் 35 சென்டி மீட்டர்தான். வால் மட்டும் 30 செ.மீ. எடை (ஆண்) 1.3 கிலோ: (பெண்) 1.0 கிலோ.

இவை மிக மிக எச்சரிக்கையுடன்தான் நடமாடித் திரியும். இரவில்தான் இரைதேடி-பொந்துகளிலிருந்து வெளியேறும். சுற்றுவட்டாரத்தைப் பலமுறை அவதானித்து-தன்னைத் தாக்கக் கூடிய எதிரிகளில்லாத சமயம் பார்த்துத் தாவிக் குதித்தோடும். குள்ள நரிகள்தான் இவற்றின் பரம விரோதி. இவ்வினத்தை அழிவிலிருந்து காப்பாற்றும் நோக்குடன் வன விலங்குப் பாதுகாப்பு அமைப்புகள் இச்சிறு பிராணிகளைப் பிடித்துத் தின்னும் நரிகளையும் காட்டுப் பூனைகளையும் இவை வாசம் செய்யும் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்திவிட்டன. அதனால் இவை தொந்தரவின்றி வாழ்ந்து வருகின்றன. தற்போது மே.அவுஸ்திரேலியாவில் ஆக 5000 மட்டுமே உயிர் வாழ்கின்றன. ஏற்கனவே இப்பிராணிகள் வாழ்ந்த தொகையில் ஒரு சத வீதம் மட்டுமே தற்போது தப்பிப் பிழைத்துள்ள எண்ணிக்கையாகும்.



ஜுவல்லர்ஸ்
ஸ்ரீ கல்யாணி
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11



← பறவைகள் காலத்துக்குக்காலம் கண்டம் விட்டுக் கண்டம் பறந்து செல்லும் பழக்கமுடையவை. அவுஸ்திரேலியாவில் கடும் குளிர் தாக்கும்போது அவை வடக்கே மங்கோலியாவரை பறந்து சென்று விடுவதில்லை. இலங்கைக்கும் அவுஸ்திரேலிய நாரைகள் வந்து, அங்கு குளிர்காலம் கடந்து வசந்த காலம் பிறந்ததும் மீண்டும் பறந்து விடுகின்றன. உலகனைத்துமுள்ள நாடுகளுக்கு பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து பறந்து செல்லுகின்றன.

தூர கிழக்கிலுள்ள ஃபீஜித் தீவுகளுக்கு சில காலங்களில் வட அமெரிக்காவிலிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்களைப் பறந்து கடந்து வரும் பல வர்ணக் கிளியைத்தான் படத்தில் காண்கிறோம். ஆஹா என்ன ஒரு வர்ணம்! இவ்வாறு பல நாடுகளிலுமிருந்து பறந்து வரும் பறவைகள் ஃபீஜியின் தவே யுனித் தீவிலுள்ள மரங்களில் தங்குகின்றன. இதனை ஐ.நா.உதவியுடன் பறவைகள் தேசிய சரணாலயமாக அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. குறிப்பிட்ட காலங்களில் இப்பறவைகளைப் பார்க்கவே வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகின்றனராம்.

# ஆக 5 ஆயிரம்



# பேஷ் பேஷ்




→ கல்யாணச் சமையல் சாதம் காய் கறிகளும் பிரமாதம் கூடவே பாம்புக்கறியும் பேஷ் பேஷ். என்ன குமட்டுகிறதா?

மீன் உண்ணாதவர்களுக்கு மீன் உண்பவர்களைக் கண்டால் குமட்டுவதில்லையா? அதுபோலத் தான் பாம்புக்கறி என்றால் எமக்கும் ஒரு மாதிரி இருக்கலாம். ஆனால் சீனா உட்பட பல நாடுகளில் பாம்புக் கறியை ஒரு பிடி பிடிப்பவர்கள் இருக்கிறார்கள்.

பர்மா உணவு விடுதி ஒன்றின் சமையலறையில் பாம்புக் கறிச் சமையல் களைகட்டிக் கொண்டிருக்கும் காட்சியைப் பாருங்கள். எத்தகைய விஷப்பாம்பையும் பிடித்து, தோலுரித்து, பொரியல், பால்கறி, குழம்புக்கறி என்று பல அயிட்டங்களில் ஒரு பிடி பிடிக்கிறார்கள். சீனர்கள் சுவைத்து உண்ணும் உணவுகளில் பாம்புப் பிரட்டலும் ஒன்று. பாம்பில் பல வர்க்கங்கள் இருக்கின்றன. இவற்றின் தகுதிக்கேற்ப உருசியும் வேறுபடும். விலையும் மாறுபடும்.

சீனர்களிடம் ஆதியிலிருந்து வேரூன்றிய பாம்பு தின்னும் பழக்கம் மொங்கோலிய இனத்தைச் சார்ந்தவர்கள் வாழும் பிராந்தியங்களுக்கும் பரவியது. மியன்மார் என்று இப்பொழுது அழைக்கப்படும் பர்மா நாட்டின் தலைநகரான ரங்கூனில் உள்ள பிறநாட்டு உல்லாசப் பயணிகள் தங்கும் விடுதிகள் சூழ்ந்த தெயின் கீ சந்தைதான் பாம்பு இறைச்சி விற்பனையில் முன்னணியில் உள்ளதாம். வெளிநாட்டவர்களும் இப்போது இந்தச் சந்தையில் பாம்பு இறைச்சி கொள்முதல் செய்வதால் விலையும் கிடுகிடுவென்று உயர்ந்துள்ளதாம். விஷப் பாம்புகளுக்கு உடம்பு முழுவதும் விஷம் இல்லை. அதன் வாயிலுள்ள பிரத்தியேகப் பல்லின் அடிப்பாகத்தில்தான் விஷப் பொதி இருக்கும். கோபம் கொண்டு கொத்தும் போது பல்லின் வழியே விஷம் கொத்தப்பட்ட காயத்தினூடாக வெளியேறி நம் உடம்பினுள்- இரத்தத்துடன் சங்கமிக்கும் போதுதான் இறப்பு ஏற்படுகிறது. அதனால் விஷப்பாம்புக்களைக்கூட விஷம் இல்லாமல் பேஷாக சமைத்து உண்கிறார்களாம்.

# செந்தமிழ் வீரர்




← இலங்கை கிரிக்கெட் அணியில் ஒரே ஒரு தமிழ்பேசும் வீரர் முரளிதரன். இந்தியக் கிரிக்கெட் அணியில் எவரும் கிடையாது. தமிழ் பேசும் கிரிக்கெட் இரசிகர்கள் மிகவும் அங்கலாய்க்கும் விடயம் இதுதான். ஆனாலும் முரளிதரன் அசத்திக் கொண்டிருப்பது ஆறுதலான சந்தோசம்.

இந்தியக் கிரிக்கெட் அணிக் கப்டனாக தமிழக வீரர் ஸ்ரீகாந்த் முன்னர் கலக்கல் நடத்தினார். இப்போதும் துடுப்பாட்டத்தில் ஒரு தமிழ் பேசும் வீரர் சர்வதேச அரங்கில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். யார் அவர்?

பக்கத்திலே பாருங்கள். இவர்தான்! இங்கிலாந்து அணிவீரர். பெயர் நசீர் உசைன். இந்தியாவில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இங்கிலாந்தில் குடியேறி அங்கு தேசிய அணியிலும் இடம் பிடித்துக் கொண்டார்.

தற்போது இங்கிலாந்து. அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே ஆஷஸ் கிண்ணத்துக்கான டெஸ்ட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இங்கிலாந்து. அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையான பாரம்பரிய டெஸ்ட் போட்டித் தொடர்தான் ஆஷஸ் கிண்ணப் போட்டி. நான்கு வருடத்திற்கு ஒருமுறை இப்போட்டிகள் நடைபெறும்.தற்போதைய ஆஷஸ் கிண்ணப் போட்டியில் முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து வென்றது. 9 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலியாவை சாய்த்தது. இந்த வெற்றிக்கு காரணமான நாயகன் நசீர் உசைன்.

நசீர் உசைன் குவித்தது 207 ரன்கள். அதில் 38 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என்பனவும் அடக்கம். ஆஷஸ் கிண்ணப் போட்டியில் முதன் முதலாக அதிக ஓட்டங்கள் குவித்தவர் என்ற பெருமையும் சேர்ந்திருக்கிறது.

நாலாவது விக்கெட்டுக்கு நசீர் உசைனும், கிரஹாம் தோப்பும் ஜோடி சேர்ந்து 288 ஓட்டங்களை சேகரித்து அணியை நிமிர்த்தினார்கள்.

நசீர் உசைன் இங்கிலாந்து அணியில் முன்னரே இடம்பிடித்தாலும் தற்போதைய ஆஷஸ் கிண்ணப் போட்டிதான் அவர்பக்கம் கிரிக்கெட் ரசிகர்களின் வியப்பான பார்வையை திருப்பியிருக்கிறது. நசீர் உசைனுக்கு இனிமேல் ஏறுமுகம்தான்.

# அதிஷ்டப் பட்டு



முரசின் பட்டுச் சேலைப் பரிசுப் போட்டியில் வென்ற பட்டுச் சேலையுடன் காணப்படுகிறார் செல்வி வீ.இராஜேஸ்வரி. 34 குமாரவேலியார் கிராமம், செங்கலடி.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] அச்சகத்தில் ஜூலை 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
படிப்பகம்